உதயன்
Uthayan - A lively National Tamil Daily
சுடர்: 30 கதிர்: 007 வள்ளுவர் ஆண்டு: 2045
கார்த்திகை 17, புதன்கிழமை 03.12.2014

காலநிலை
மேக மூட்டமான காலநிலை காணப்படும். காற்று மணிக்கு 70 கி.மீ. வேகத்தில் வீசும்.

# தமிழர்களுக்கு சமஷ்டி இல்லை

## ஜாதிக ஹெல உறுமயவுக்கு உறுதியளித்தார் பொது வேட்பாளர் மைத்திரிபால

கொழும்பு, டிசெம்பர் 3
ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால், தமிழ் மக்களின் சமஷ்டிக் கோரிக்கையை ஏற்கமாட்டேன் என்று எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார். சிங்கள பௌத்த தேசியவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவுக்கே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.
சர்வதேச செய்தி நிறுவனமான 'ஏபி' செய்தி நிறுவனம் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது.
இலங்கையில் கடந்த பல பத்தாண்டுகளாக நீடித்து வரும் இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். ஆயினும் தாம் ஆட்சிக்குவந்தால் அந்தக்கோரிக்கையை நிராகரிப்பேன் என்று மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார்.
ஜாதிக ஹெல உறுமயவுடன் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டின்படி பௌத்த மதத்துக்கு அரசமைப்பில் முக்கியத்துவம் அளிப்பதாகவும் மைத்திரி உறுதியளித்துள்ளார் – என்றும் அந்தச் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.
சுதந்திரமான தனிநாடு ஒன்றை உருவாக்கும் நோக்கில் தமிழர்களால் நடத்தப்பட்ட போராட்டம் இலங்கை இராணுவத்தால் 2009 ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்டது. அதன்பின்னர் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டதாக தமிழ்த் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். ஆயினும் தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு, கிழக்கில் சமஷ்டி முறையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர் என்று – அந்த செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ற)

## மஹிந்தவை சந்தித்தார் டோவல்

யாழ்ப்பாணம், டிசெ. 3
இந்திய – இலங்கை உறவுகளை மேம்படுத்துவது தொடர்பில், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுடன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேச்சு நடத்தினார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

பக்.22

## மேற்குலக சட்டங்கள் தேவையில்லை

குடும்பங்களைச் சீரழிக்கும் மேற்குலகச் சட்டங்கள் தேவையற்றவை என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மேற்கத்தேய நாடுகளின் கைப்பொம்மையாக எம்மால் ஒருபோதும் செயற்பட முடியாது எனவும் கூறியுள்ளார்.

பக்.02

## புலிகள் புதைத்தோரை தேடும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 03
ஒட்டுசுட்டான் காட்டுப் பகுதியில், விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் மனிதப் புதைகுழியைத் தோண்டும் நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும் அதிலிருந்து நேற்று எந்தவொரு உடல் எச்சமும் மீட்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இத்திமடு என்ற காட்டுப் பகுதியிலேயே, கொழும்பிலிருந்து

பக்.22

## மைத்திரிக்கு ஹெல உறுமய ஆதரவு

யாழ்ப்பாணம், டிசெ. 03
பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதாகப் பகிரங்கமாகத் தெரிவித்துள்ள ஹெல உறுமய, மைத்திரிபால வெற்றி பெற்றபின்னர் அமையும், தேசிய அரசில் அங்கம் வகிக்க வருமாறு மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

பக்.22

## கட்டுப் பணம் செலுத்தினார் மைத்திரி

யாழ்ப்பாணம், டிசெ. 3
ஜனாதிபதித் தேர்தலில் அன்னப் பறவைச் சின்னத்தில் போட்டியிடுவதற்குப் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன நேற்றுக் கட்டுப் பணம் செலுத்தினார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட பொது எதிரணி வேட்பாளர் சரத் பொன்சேகா பயன்படுத்திய புதிய ஜனநாயக முன்னணியிலேயே மைத்திரிபால சிறிசேனவும் போட்டி யிடவுள்ளார்.

பக்.22

## புலித்தடை நீக்கத்துக்கு எதிராக மேன்முறையீடு

விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ள தீர்ப்பு தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் மேன்முறையீடு செய்யவுள்ளது. இலங்கையில் உள்ள ஐரோப்பிய ஒன்றி அலுவலகம் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

பக்.21

## மைத்திரி ஆட்சிக்கு வந்து 100 நாள்களில் தமிழீழம்

யாழ்ப்பாணம், டிசெ. 03
பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு நூறு நாள்களில் தமிழீழம் அமைக்கப்படும். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதனூடாக இதனைச் செயற்படுத்துவதற்கு, இரகசிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் தீவிரமான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
–இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது அரச ஊடகமான தினமின.

பக்.22

## வீதியில் சமைத்து நூதனப் போராட்டம்



யாழ்ப்பாணம், டிசெ.3
கடந்த சில தினங்கள் பெய்த கனமழையால் யாழ்ப்பாணம் பொம்மை வெளிப் பிரதேசம் வெள்ள நீரில் மூழ்கியுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், தமக்கு எந்தவித உதவிகளும் வழங்கப்படவில்லை என்று கூறி நேற்று வீதியில் உணவு சமைத்துக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். பொம்மை வெளி முதலாம் குறுக்குதெரு ஜே / 87 கிராமஅலுவலர் எல்லைக் குட்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் இவ்வாறு போராட்டம் நடத்தின.

பக்.22

## பறிக்கப்பட்ட இந்திய படகுகள் இவ்வார இறுதியில் விடுவிப்பு

கொழும்பு, டிசெ.3
இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதான இந்திய மீனவர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட படகுகள் அனைத்தும் இந்த வார இறுதியில் கையளிக்கப்படவுள்ளன என்று கூறப்படுகின்றது.

பக்.16

## மலசலகூட குழியில் வீழ்ந்து குழந்தை சாவு

யாழ்ப்பாணம், டிசெ. 3
கைவிடப்பட்ட மலசலகூடக் குழியில் தவறிவிழுந்த 2 வயதுக் குழந்தை நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தது.

பக்.22



ரூபா 60
2 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக
ஒளிஅரசி
இல்லத்தரசிகளின் தோழி
பல வியத்தகு ஆக்கங்களுடன் டிசம்பர் மாத இதழ் வெளிவந்துள்ளது.
தரம் 4
பல்திறன் பரிசுப் போட்டி
பிரதிகளுக்கு உதயன் முகவர்களை நாடுங்கள்.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

செய்திகள்

# மேற்குலகின் சட்டங்கள் எமக்கு தேவையற்றவை

ப 1 விரிவு

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிச 3

குடும்பங்களைச் சீரழிக்கும் மேற்குலகச் சட்டங்கள் தேவையற்றவை என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ, மேற்கத்தேய நாடுகளின் கைப்பொம்மையாக எம்மால் ஒருபோதும் செயற்பட முடியாது எனவும் கூறியுள்ளார்.

நாடளாவிய ரீதியிலுள்ள இணக்க சபைகளைச் சேர்ந்தவர்களை அலரி மாளிகைக்கு அழைத்த ஜனாதிபதி, அவர்கள் மத்தியில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மேற்கத்தேய கலாசாரங்கள் போலன்றி எமது கலாசாரம், வாழ்க்கை முறை போன்றவற்றுக்குப் பொருத்தமானதாக சட்டங்கள் இருப்பது முக்கியம். மேற்கத்தேய சட்டங்கள் தேவையில்லை. நாம் மேற்கத்தேய கலாசாரத்துக்கு அகப்படத் தேவையில்லை. எமக்கென சமூக கலாசார விழுமியங்கள் உள்ளன. எமது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த இந்த கலாசார வாழ்க்கை முறைகள் எமக்கு முக்கியமானவை.

காலையில் குடும்பத்தில் கணவன் – மனைவிக்கிடையே பிரச்சினை வந்தால் இரவில் அது தீர்ந்து போகும் நிலையே குடும்பங்களில் காணப்பட்டன. ஆனால் நீதிமன்றம் சென்றால் அவர்கள் பிரித்து வைக்கப்படுகிறார்கள். இது குற்றங்கள் பிரச்சினைகள் மேலும் அதிகரிக்க வழி வகுக்கின்றது.

எனவே இது போன்ற கணவன் –மனைவி விவகாரங்களை இணக்க சபையில் விட்டுச் சுமுகமாகத் தீர்க்க முடியும். வாழ்க்கையைச் சீர்குலைத்து பிள்ளைகளை அநாதைகளாக்கும் சட்டங்கள் எமக்குத் தேவையற்றவை. குடும்பப் பிணக்குகளை பூதாகரமாக்கிப் பிள்ளைகளை அநாதைகளாக்குவதை ஏற்க முடியாது. இது தொடர்பில் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

இலங்கையில் 328 இணக்கசபைகள் இயங்குகின்றன. பிணக்குகளின்றி வாழ்வதையே எவரும் விரும்புவர். பிணக்குகளைப் புத்தி சாதுரியமாக ஆராய்ந்து இணக்கப்பாட்டுக்குக் கொண்டு வருவதே அவர்களின் முக்கிய சேவை.

குடும்பப் பிணக்குகளை ஏன் இணக்க சபையில் தீர்க்கக் கூடாது? எனச் சிந்திப்பதுண்டு. குடும்பத்தில் கணவன்–மனைவி பிரச்சினைகள், பிணக்குகள் என்றால், அது பொலிஸ் நிலையம் போய் நீதிமன்றம் வரை சென்று விவாகரத்தில் முடிகின்றது. இந்த முறை மூலம் கணவன்–மனைவியை பிரித்து குடும்பத்தைப் பிளவுபடுத்துவதே நடக்கிறது. கணவனும் மனைவியும் நீதிமன்றம் வரை சென்றால் முதலாவது அவர்களைப் பிரித்து வேறாக்குவதற்கு ஒரு சட்டம் உள்ளது. அதன் மூலம் இது மேற்கொள்ளப்படுகிறது–

## பட்டப் பகலில் திருட்டு அயலவரால் முறியடிப்பு

யாழ்ப்பாணம், நவ 3

பட்டப்பகலில் வீட்டில் யாரும் இல்லாத நேரம் பார்த்து உள்நுழைந்த திருடர் நகைகள் உட்பட பெறுமதியான பொருள்களைத் திருடிய நிலையில் அயலவர்கள் சுற்றி வளைத்ததனால் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர்.

இந்தச் சம்பவம் உடுவில் அம்பலவாணர் வீதியில் நேற்று மதியம் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:–

குறித்த வீட்டில் உள்ள தம்பதி அரச உத்தியோகத்தர்கள். இருவரும் பணிக்குச் சென்றிருந்த நிலையில் திருடர்கள் வீட்டின் கதவை உடைத்து உள்நுழைந்துள்ளனர். அவ்வாறு இரண்டு பேரைத் தாம் கண்டுகொண்டதாகவும், இன்னும் பலர் வந்தார்களா என்பது தெரியாது என்றும் அயலவர்கள் தெரிவித்தனர்.

திருடர்கள் வீட்டினுள் புகுந்ததையடுத்து அயலவர்கள் ஆரவாரப்பட்டு ஒன்று கூடியதனால் உள்நுழைந்த திருடர் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர். அதன்போது அவர்கள் திருடிய நகைகள், மடிக்கணினி உள்ளிட்ட பல பொருள்களையும் வீட்டில் ஆங்காங்கே போட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளனர். அதன் பின்னர் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டுவிட்டுத் திரும்பினர்.

(க–4)

## சுகாதார தொழிலாளர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு




யாழ்ப்பாணம், டிசெ.3

புதிதாக நியமனம் வழங்கப்பட்ட சுகாதார தொழிலாளர்களை வீதிப் புனரமைப்புப் பணிகளுக்கு அனுப்பியதைக் கண்டித்து அவர்கள் நேற்று பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

யாழ். மாநகர சபையின் சுகாதார பணிமனையில் பணியாற்றுவதற்காக 22 பெண்கள் மற்றும் 55 ஆண்கள் உட்பட 77 சுகாதார தொழிலாளர்களுக்கான நிரந்தர, நியமனங்கள் நேற்று முன்தினம் மாநகர சபையால் வழங்கப்பட்டது. நியமனம் பெற்றவர்களில் ஒரு பிரிவினர் நேற்று வீதிப்புனரமைப்புக்கென அனுப்பி வைக்கப்பட்டனர். தமக்கு வழங்கப்பட்ட நியமனம் வேறுதரப்படும் வேலை வேறு எனவும் தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டினர்.

தற்போதைய மழைகால சூழலில் கழிவகற்றல் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதால், வீதிப்புனரமைப்பு வேலைகளுக்கு தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக குறித்த தொழிலாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

(ற–14)

## ஆசிரிய உதவியாளர்கள் கைதடியில் போராட்டம்

யாழ்ப்பாணம், டிச 3

இந்த ஆண்டு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சியை முடித்து வெளியேறிய ஆசிரிய உத வியாளர்கள் பரீட்சைப் பெறுபேறு களை வெளியிடல் உள்ளிட்ட 3 கோரிக்கைகளை முன்வைத்து கைதடியில் உள்ள வடக்கு மாகாண பேரவை முன்பாக போராட்டம் செய்யவுள்ளனர் என்று அறிவித்துள்ளனர்.

"2009 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரிய சேவைக்குள் உள்வாங்குதல் வேண்டும், பரீட்சைப் பெறு பெறுகளை உடனடியாக வெளியிடல் வேண்டும், ஆசிரியர்களுக் கான உதவு தொகைகளை வழங்குதல் வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் மேற்கொள் ளவுள்ளோம். பரீட்சை நடைபெற்று பல நாள் களாகிவிட்ட நிலையிலும் இன்னும் பெறுபேறு வரவில்லை. எனவே நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இந்தப் போராட்டத்தை நடத்தவுள் ளோம்" – என்று யாழ். மாவட்ட ஆசிரிய உதவியாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (ற–4)



யாழ்.மாவட்டத்தின் புதிய கட்டளைத் தளபதியாக பொறுப்பை ஏற்றுக் கொண்ட மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளை சந்தித்துக் கலந்துரையாடினார். ஆதீன முதல்வர் கட்டளைத்தளபதிக்கு பொன்னாடை போர்த்திகௌவிப்பு செய்ததுடன் ஆசீர்வாதமும் வழங்கினார். (ற–14)

## போலி நோட்டு வைத்திருந்த பொலிஸ்க்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், டிச 3

5 ஆயிரம் ரூபா பெறுமதியான போலி நாணயத் தாளை வங்கியில் வைப்பிலிடச் சென்றபோது கைதான பொலிஸ் உத்தியோகத்தரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. நிலத்திலிருந்து அதனை எடுத்ததாகச் சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.

மன்னார் விடத்தல்தீவுப் பகுதி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் தென் பகுதியைச் சேர்ந்த குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் வவுனியாவுக்குச் சென்று வங்கி ஒன்றில் குறித்த நாணயத் தாளை வைப்பிலிட்டுள்ளார். அதன்போது அதனைப் பரிசோதித்தபோதே அது போலியானதென்று தெரியவந்துள்ளது.

அது தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு சென்ற பொலிஸ் அதிகாரிகள் போலியான பணத்தாளை வைத்திருந்த பொலிஸ் உத்தியோகத்தரைக் கைது செய்தனர். அவர் வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

(த–4)

## ஜனாதிபதிக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபடுங்கள்

### சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம் அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ 03

சமுர்த்தி உத்தியோகத்தர்களை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரும் நேரடியாகக் கோரியுள்ளனர்.

கிளிநொச்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நேற்று மாலை 3 மணிக்கு, கண்டாவளை, கரைச்சி, பூநகரி பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அழைக்கப்பட்டுக் கூட்டம் நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்திலேயே இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது. இதற்காகக் கிளிநொச்சி நகர் முழுவதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கட்டவுட்டுக்கள் வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஜனாதிபதிக்கு ஆதரவாகப் பிரசாரங்களை முன்னெடுப்பதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு நிலையில் நேற்றைய தினம் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கலந்துரையாடல் எனத் தெரிவிக்கப்பட்டு அழைக்கப்பட்டனர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவை ஆதரித்து பிரசாரங்களை முன்னெடுக்குமாறு அவர்கள் கேட்கப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டது. (த–5)

# ஜனரஞ்சகம்

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தகவல்: வித்யா

**மேடம்:** குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பீர்கள். நண்பர்களிடையே இருந்துவந்த பிணக்குகள் நீங்கி நேசத்தோடு வாழ்வீர்கள். தடைப்பட்டுவந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் இனிதாக நடக்கும்.

**இடபம்:** பெற்றோரின் மருத்துவச் செலவுகள் குறையும். தொழிலதிபர்கள் நல்ல லாபத்தை அடைவீர்கள். அரசியல் பிரமுகர்கள் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவார்கள்.

**மிதுனம்:** பொருளாதாரத்தில் தட்டுப்பாடு வராது. பூர்வீக சொத்துகளில் உள்ள வில்லங்கம் நீங்கும். புதிய தொழில் தொடங்க போட்ட திட்டம் நிறைவேறும்.

**கடகம்:** நீண்டகாலமாகத் தடைப்பட்டு வந்த திருமணம் கைகூடும். பிரிந்துசென்ற பிள்ளைகள் வந்துசேர்வார்கள். கலைத்துறையினர் நல்ல பெயரையும் புகழையும் அடைவார்கள்.

**சிங்கம்:** தனியார் பணியில் இருப்பவர்கள் அதிகமான வேலைப் பளுவை சந்திப்பார்கள். புதிதாக தொழில் தொடங்க போட்ட திட்டம் தள்ளிப்போகும். குடும்பத்தினரிடம் அமைதியாக செல்லவேண்டும்.

**கன்னி:** வீண் சச்சரவுகள் வர வாய்ப்புண்டு. பிள்ளைகள் வீட்டின் நிலையை அறிந்து நடப்பார்கள். பெற்றோர் தாய்மாமன் வழியில் அனுகூலம் ஏற்படும்.

**துலாம்:** உங்களுக்கு நன்மைகள் தரும் நாளாக இருக்கும். தொட்ட காரியம் அனைத்திலும் நன்மைகளைப் பெறுவீர்கள். குடும்பத்தினர் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**விருச்சிகம்:** தொழிலதிபர்கள் தொழிலை விரிவு செய்து, புதிய பங்குதாரர்களையும் பெறுவார்கள். ஒருசிலர் எதிர்பார்த்துக் காத்திருக்கும் பதவி உயர்வும், விரும்பிய இடத்துக்கு மாறுதலும் வந்துசேரும்.

**தனுசு:** எதிர்பார்த்தபடி வருமானம் கிடைக்கும். குடும்பத் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள். பிரிந்து வாழ்ந்த தம்பதியர்கள் ஒன்றுசேர்வார்கள். வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும்.

**மகரம்:** உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வுகள் வந்துசேரும். தொழிலதிபர்கள் தொழிலை அபிவிருத்தி செய்வார்கள். நீண்டகாலமாக இருந்துவந்த சொத்துப் பிரச்சினைகள் நல்ல தீர்வுக்கு வரும்.


**கும்பம்:** சகோதரர்கள் மத்தியில் ஒற்றுமை கூடும். சொத்துப் பிரச்சினையில் நல்ல முடிவு வரும். வழக்குகள் சாதகமாகும். வேலைசெய்யும் பிள்ளைகள் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள்.

**மீனம்:** தொழிலதிபர்கள் தொழிலை விரிவு செய்வார்கள். வியாபாரிகள் சிலர் வெளிநாட்டில் கிளைகள் தொடங்குவார்கள். கலைத்துறையினருக்கு முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு மதிப்பு உயரும்



என்ன மாதிரியெல்லாம் சிந்திக்கிறாங்க !
போட்டோசொப் படுத்துகின்ற பாட்டைப் பாருங்கள்.

## மனிதாபிமானம்



எயிட்ஸ் நோய்க்கான விழிப்புணர்வு தினம் கடந்த முதலாம் திகதி உலகெங்கிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

இதற்கு அப்பிள் நிறுவனம் தனது ஒவ்வொரு நிலையங்களிலிருந்தும் விற்பனை செய்யப்பட்ட சாதனங்கள் மூலம் பெறப்பட்ட இலாபத்தில் ஒரு தொகையை நன்கொடையாக வழங்கியிருந்தது. அத்துடன் தனது நிறுவனத்தில் உள்ள லோகோவை சிவப்பு நிறத்தில் மாற்றிய மைத்திருந்தது. இதேவேளை எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய யூசிம் எனும் அப்பிளிக்கேஷனை உருவாக்கி ஷ்நுநீ அப்பிளிக் கேஷன் ஸ்டோரினூடாக அப்பிள் நிறுவனம் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் வருவாரா?



மழை படத்தில் அறிமுகமாகி ரஜினி, விஜய், விக்ரம் என்று முன்னணிக்தாநாயகர்களுடன் கைகோர்த்து வேகமாக முன்னேறிக்கொண்டிருந்தஸ்ரேயா திடீரென்று காணாமற் போனார். இதற்கிடையில் சந்திரா, பவித்ரா என்று 2 படங்கள் வந்தும் கைகொடுக்கவில்லை. ஹிந்தியில் நடிக்கிறேன் என்று மும்பைக்கு போனவர் அப்படியே மாயமாகிவிட்டார். வாய்ப்புக் கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டிருந்தார் ஸ்ரேயா.

ஆந்திராவை தாக்கிய ஹுட்ஹுட் புயல் நிவாரண நிதிக்காக ஹைதராபாத்தில் நட்சத்திர நிகழ்ச்சி நடக்கிறது. இதில் கலந்துகொண்டு ஆடுவதாக தானாக முன் வந்து பெயரை பதிவு செய்திருக்கின்றார் ஸ்ரேயா.

கொலிவூட்டிலும், பொலிவூட்டிலும் பிரபல்யமான பாடலுக்கு நடனம் ஆடுகிறார். இதன் மூலம் சகலரதும் மனதைக் கவர்ந்து மீண்டும் தமிழ் சினிமாவுக்குள் வர எண்ணியிருக்கின்றார்.

## ரிலாக்ஸா வாசியுங்க...



ஒரு நிறுவனத்தின் முதலாளி, தலைமுடி வெட்டிக் கொள்வதற்காக சலூன் கடைக்கு வந்தார். அவர் முடி வெட்டி முடிந்ததும் உரிய தொகைக்கு மேல் ஒரு ரூபா இலவசமாகக் கொடுத்தார். முடி வெட்டுபவருடைய முகம் சுருங்கியது. ஒரு பெரிய நிறுவனத்தின் முதலாளி ஒரு ரூபா தருவதா? என்கிற ஏளனத்து டன், 'உங்களிடம் வேலை பார்க்கும் கணக்காளர்கள் கூட பத்து ரூபாய் கொடுப்பார்கள். ஆனால் நீங்கள்...?'

'உண்மைதான். அதனால்தான் ஆயுள் முழுவதும் அவர்கள் கணக்கர்களாகவே இருக்கிறார்கள். நான் முதலாளியாக இருக்கிறேன்' என்றபடியே அங்கிருந்து நகர்ந்தார்.



அடேய்! எங்க உக்காந்துடா
இப்படியெல்லாம் யோசிக்கிறீங்க???



## செய்திகள்

# வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டம்

### மன்னாரில் வெளி மாவட்ட வர்த்தகர்களின் வருகையைத் தடை செய்யுமாறு கோரி

மன்னார், டிசெ 3

மன்னார் நகர வர்த்தகர் சங்கம் ஏற்பாடு செய்த கடை அடைப்புடன் கூடிய அமைதி ஊர்வலம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மன்னாரில் நடைபெற்றது. நத்தார் பண்டிகைக் காலப் பகுதியில் வெளி மாவட்ட வர்த்தகர்கள் மன்னார் நகரப் பகுதியில் தெருவோர வியாபாரத்தில் ஈடுபட மன்னார் நகர சபை அனுமதியளிக்கக் கூடாது எனத் தெரிவித்தே இந்தக் கடை அடைப்புடன் கூடிய அமைதி ஊர்வலம் நடத்தப்பட்டது.




இந்த ஊர்வலம் மன்னார் நகரப் பகுதியில் அமைந்துள்ள சுற்று வட்டத்துக்கு முன்பாக ஆரம்பித்து மன்னார் நகர சபையை அடைந்தது. இதன்போது மன்னார் வர்த்தகர் சங்கப் பிரதிநிதி தமது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றை மன்னார் நகர சபை தலைவரிடம் வழங்கினார்.

இதன்போது வர்த்தகர்கள் மத்தியில் உரையாற்றிய நகர சபையின் தலைவர் எஸ்.ஞானபிரகாசம்,

பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பண்டிகைக் காலங்களில் மக்களின் நலன் கருதி வெளி மாவட்ட வர்த்தகர்கள் வியாபாரத்தில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதையே நாமும் கடைப்பிடித்து வருகின்றோம். நாட்டில் சகலரும் தமது வியாபார நடவடிக்கைகளை, மன்னார் மாவட்டத்திலும் தொடர முடியும். அதைத்தடுக்க முடியாது. ஆனால் மன்னார் மக்களுக்கு வெளிமாவட்ட வர்த்தகர்கள் மலிவு விலையில் பண்டிகை பொருள்களை விற்பனை செய்வதால் அதனையே மக்கள் விரும்புகிறார்கள். ஏற்கனவே நத்தார் பண்டிகைக் காலங்களில் 20 நாள்கள் வெளிமாவட்ட வர்த்தகர்களை அனுமதித்து வந்தோம். மன்னார் வர்த்தக சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இம்முறை, 10 நாள்கள் மட்டுமே வெளிமாவட்ட வர்த்தகர்களுக்கு அனுமதி வழங்க முடிவு செய்திருந்தோம். எனினும் ஒரு நாள் கூட அனுமதிக்கக்கூடாது என கோரியுள்ளீர்கள். இது தொடர்பாக மன்னார் சமூக அமைப்புகளுக்குத் தெரியப்படுத்தி, அந்த அமைப்புடன் மன்னார் வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்தாலோசித்து அதன் அடிப்படையில் நகரசபை தனது முடிவை எடுக்கும்.– என்றார். (த)

## வர்த்தகர்களின் கோரிக்கைகளை உதாசீனம் செய்யாது நடவடிக்கை

மன்னார், டிசெ 3

பண்டிகைக் காலத் தெருவோர வியாபாரத்தைத் தடை செய்யுமாறு மன்னார் நகர சபையிடம் வர்த்தகர்கள் கோரியுள்ள நிலையில் அவர்களின் கோரிக்கைகளை உதாசீனம் செய்யாது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

வர்த்தகர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக 20 நாள்களுக்கு பண்டிகைக் கால வியாபரங்கள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்படவிருந்த நிலையில் தற்போது அது 10 நாள்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதிவரை இந்தப் பண்டிகைக் கால வியாபாரங்களை மேற்கொள்ள அனுமதிக்கப்படவுள்ளது என்று அவர் கூறினார். (த–56)

## யாழ். ஒருங்கிணைப்பு கூட்டம் 8 ஆம் திகதி

யாழ்ப்பாணம், டிசெ. 03

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பிலான மீளாய்வுக் கூட்டமே என்பதால், தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடத்த முடியும்என்று தேர்தல்கள்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், இணைத் தலைமையில் இதுவரையில் மூன்று தடவைகள் இடம்பெற்றுள்ளது. ஏப்ரல் மற்றும் மே மாதம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எந்தவொரு முடிவும் எடுக்கப்படாமல் முடிவடைந்தது. இந்த நிலையிலேயே நான்காவது தடவையாக எதிர்வரும் 8 ஆம் திகதி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் முன்மொழியப்பட்ட மேற்படி தினத்தில், ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நடத்துவதற்கு இணைத் தலைவர்களுள் ஒருவரான முதலமைச்சர் க.விக்னேஸ்வரனும் சம்மதித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தலாம் என்று தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. மாவட்டத்தின் அபிவிருத்தி மீளாய்வு தொடர்பிலான கூட்டம் என்பதால், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படலாம் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கான முன்னறிவித்தல் 14 நாள்களுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும் என்றபோதிலும் கூட இதுவரை உத்தியோகபூர்வமாக மாவட்ட செயலகத்தினால் கடிதம் அனுப்பப்படவில்லை என்று கூறப்பட்டது. (த–5)

## திடீர் திடீரென தடைப்படும் நெடுந்தீவுப் படகுச் சேவை

யாழ்ப்பாணம், டிசெ 3

சீரற்ற காலநிலை காரணமாக நெடுந்தீவு – குறிகாட்டுவான் போக்குவரத்துச் சேவைகள் திடீர் திடீரெனத் தடைப்படுவதால் பயணத்தைக் கைவிட்டு ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர் மக்கள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவு செல்லும் படகு வழமைக்கு முன்பாக பிற்பகல் ஒரு மணிக்கே நெடுந்தீவுக்குப் புறப்பட்டு விட்டதால் பல பயணிகள் படகைத் தவறவிட்டு மீண்டும் யாழ்.நகர் திரும்பியுள்ளனர்.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை காலையும் நெடுந்தீவுத் துறைமுகத்துக்கு வந்த பயணிகள் நீண்ட நேரம் துறைமுகத்தில் காத்திருந்து விட்டு மீண்டும் தமது வீடுகளுக்குத் திரும்பினர். கடல் கொந்தளிப்பு, சீரற்ற காலநிலை எனக் கூறி நேற்று முன்தினம் தனியார் படகுகள் சேவையில் ஈடுபடவில்லை. குமுதினியும் சேவையில் ஈடுப்படுத்தப்படவில்லை.

படகுச் சேவைகள் தடைப்படுவதால் நெடுந்தீவில் அத்தியாவசிய பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (த–7)



யாழ். முற்றவெளியில் உள்ள யாழ்.மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாச அலுவலகக் கட்டடத்துக்குள் வெள்ளம் புகுந்ததால் அங்கு பணியாற்றும் பணியாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இந்தச் சமாசக் கட்டடம் மற்றும் அதன் அருகில் அமைந்திருக்கும் திறந்த வெளிச் சந்தைக் கட்டடத் தொகுதிகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. (த–17)

## வலிகாமம் ஆசிரியர்களின் இடமாற்றத்தை நிறுத்துக

### அமைச்சரிடம் கோரினார் கல்விப் பணிப்பாளர்

வலி.வடக்கு, டிசெ 3

வலிகாமம் கல்வி வலயமும் வன்னியைப் போன்று போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசமாகும். இந்த வகையில் வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்து ஆசிரியர்களை வன்னிக்கு இடமாற்ற மாகாண கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ள நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தவேண்டும் என வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட சிறந்த ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் வைத்து அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஆண்டு ஆரம்பத்தில் இடம்பெற்ற ஆசிரியர் இடமாற்ற நடவடிக்கையால் கல்வியில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. தற்போது வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்து ஆசிரியர்களை வன்னிக்கு இடமாற்றம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை தடுத்த நிறுத்த் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் – என்றார். (த–86)

## வலிகாமம் கல்வி வலயத்தின் அலுவலகத்தில் இட நெருக்கடி

### அதனால்.வடக்கு மாகாணக் கல்வி அலுவலகத்தை வேறிடம் மாற்றுக

வலி.வடக்கு, டிசெ 3

வலிகாமம் கல்வி வலயத்தின் கடமைகளை மேற்கொள்வதற்கு இடம்போதாமையால் வலய அலுவலகக் கட்டடத்தில் இயங்கும் வடக்கு மாகாண சபையின்கல்வித் திணைக்களஅலுவலகத்தை வேறு இடத்துக்கு மாற்ற அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என வலிகாமம்கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா கோரியுள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்தின் ஆசியர்கள், அதிபர்களைக் கௌரவிக்கும்நிகழ்வு சனிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வலிகாமம் கல்வி வலயத்தைப் பொறுத்த வரை தென்னிலங்கையையும் பலதுறைகளிலும் திரும்பிப்பார்க்கவைத்தஒருவலயமாகும். இந்த வலயத்தில் உள்ள பாடசாலைகள், அதிபர்கள், ஆசிரியர்களின் முழுமையான ஒத்துழைப்பினால் பல சாதனைகளைக் கல்வியிலும் விளையாட்டிலும் சாதிக்க முடிந்துள்ளது – என்றார். (த–86)

# செய்திகள்



## மன்னாரில் நாவலர் விழா

மன்னார், டிசெ. 3

நாவலர் தினம் நிகழ்வு கடந்த சனிக்கிழமை மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலையில் அறநெறி இணையத்தின் தலைவர் தர்மகுமார குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வவுனியா தமிழ்ச் சங்கச் செயலாளர் தமிழருவி த. சிவகுமாரன், சிறப்பு விருந்தினராக இந்து சமய விவகாரங் களுக்கான ஜனாதிபதியின் இணைப்பாளர் ஹரிச்சந்திர பாபு சர்மா, கௌரவ விருந்தினராக மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது நாவலர் சிலையை இந்து மன்றத்தின் பிரதிநிதி இராமகிருஸ்ணன், வவுனியா தமிழ்ச் சங்கச் செயலாளர் தமிழருவி சிவகுமாரன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

அதனை தொடர்ந்து கலை நிகழ்வுகள் மற்றும் அதிதிகள் உரைகள் என்பன இடம்பெற்றன. இதன் பின்னர் பிரமுகர்கள் கௌரவிக்கப்பட்டனர். (த)

# 3,000 பேருக்கு உலருணவு

### வெள்ளத்தால் இடம்பெயர்ந்தோருக்கு வழங்கியது யாழ்.வணிகர் கழகம்

யாழ்ப்பாணம், டிச 3

நாவாந்துறையில் சுமார் நான்கு நாள்களாகப் பெய்த கடும் மழையால் பாதிக் கப்பட்டுள்ள சுமார் 3 ஆயிரம் பேருக்கும் மேற்பட்டவர்களுக்கு யாழ்.வணிகர் கழகம் நேற்றுமுன்தினம் உலருணவுப் பொருள்களை வழங்கியது.

சில நாள்களாகப் பெய்துவரும் கடும் மழையால் நாவாந்துறை உட்படப் பல இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கே யாழ். வணிகர் கழகம் நேற்றுமுன்தினம் உலர் உணவுப் பொருள்களை வழங்கியது.

இது தொடர்பில் யாழ். வணிகர் கழகத் தலைவர் ஆர். ஜெயசேகரம் தெரிவிக்கையில்,

கிராம அலுவர் பிரிவுகளான ஜே/81 பிரிவான கோட்டைப் பிரதேசத்தின் 136 குடும்பங்களைச் சேர்ந்த 513 பேருக்கும், ஜே/85 பிரிவான நாவாந்துறை வடக்கில் 389 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 498 பேருக்கும், ஜே/88 புதிய சோனக தெருவில் 152 குடும்பங்களைச் சேர்ந்த 645 பேருக்கும், ஜே/87 சோனக தெருவில் 95 குடும்பங்களைச் சேர்ந்த 427 பேருக்கும் இவ்வாறு உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

ஒருவருக்கு ஒரு கிலோ கிராம் அரிசி மற்றும் பருப்பு, சோயா மீற், பிஸ்கட் என்ற அடிப்படையில் அவை வழங்கப்பட்டன— என்றார். (த-4)



## பெண்ணின் கூந்தலை அறுத்தவர் சிக்கினார்

வடமராட்சி, டிசெ.3

தொண்டமானாறில் வீடொன்றுக்குள் அத்துமீறிப் புகுந்து அங்கிருந்த பெண்ணின் கூந்தலை அறுத்தார் என்ற குற்றச்சாட்டில் கெருடாவில் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவரை வல்வெட்டித் துறை பொலிஸார் கடந்த வியாழக் கிழமை கைது செய்திருந்தனர்.

இவர் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் பதில் நீதிவான் ஏ.கே.நடராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது சந்தேகநபரை ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பிணையில் செல்ல நீதிவான் அனுமதி வழங்கினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:–

தொண்டமானாறுப் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வீடொன்றில் உறங்கிக்கொண்டிருந்த பெண்ணின் கூந்தல் இனந்தெரியாத நபர் ஒருவரால் அறுக்கப்பட்டது. இது தொடர்பில் குறித்த பெண்ணினால் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் குறித்த பெண்ணிடம் வாக்குமூலம் ஒன்றும் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் வல்வெட்டித்துறை பொலிஸாரால் விசாரணைகளும் நடத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் விசாரணைகளின் அடிப்படையில் கடந்த வியாழக்கிழமை சந்தேக நபர் ஒருவரை வல்வெட்டித்துறைப் பொலிஸார் கெருடாவில் பகுதியில் வைத்துக் கைது செய்திருந்தனர்.

குறித்த சந்தேகநபர் பருத்தித்துறை நீதிமன்றில் பதில் நீதிவான் ஏ.கே நடராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் சந்தேகநபரை ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதி வழங்கினார். (த-109)

## காசநோய் வைத்தியசாலையில் தொடரும் ஆளணி பற்றாக்குறை

### சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் சிரமம்

யாழ்ப்பாணம்.டிசெ.3

யாழ்.காசநோய் வைத்திய சாலையில் வைத்திய ஆளணிப் பற்றாக்குறை இன்னமும் நிவர்த்தி செய்யப்படாத காரணத்தால் காசநோய்க்குச் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஒரேயொரு காசநோய் வைத்திய சாலையான இங்கு முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் இருந்தும் அதிகமான நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகின்றனர்.

கடந்த வருடம் கடமையில் இருந்த காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இடம்மாற்றப்பட்டதை அடுத்து தற்போது ஒரு வைத்தியர் மட்டுமே அங்கு கடமையில் உள்ளார்.

பண்ணை வைத்தியசாலையில் ஏனைய நோய்களுக்கும் சிகிச்சை வழங்கப்பட்டு வரும் நிலையில் ஒரு வைத்தியரால் மட்டுமே அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

வைத்தியசாலையில் இரு வைத்தியர்கள் கடமையில் இருக்க வேண்டிய தேவையுள்ளது.

இதேவேளை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, சங்கானை, தெல்லிப்பழை, கோப்பாய் வைத்தியசாலைகளுக்கும் தற்போதுள்ள வைத்திய அதிகாரியே சென்று காச நோய்க்கான சிகிச்சையை வழங்க வேண்டிய நிலை உள்ளது. இந்த வைத்தியர் வெற்றிடம் இன்னமும் சுகாதார அமைச்சினால் நிரப்பப்படவில்லை.

யாழ்.மாவட்டத்தில் தற்போது காசநோயின் தாக்கம் குறைவடைந்துள்ளபோதும் வைத்தியர் பற்றாக்குறை உள்ளதால் தொடர்ந்து சிகிச்சையைப் பெறுவதை குறித்த நோயாளர்கள் இடைநிறுத்தக்கூடும். இதனால் மீண்டும் காசநோயின் தாக்கம் அதிகரிக்கலாம் என வைத்திய சாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. (த-14)

## நல்லூர் பிரதேச வீதிகளில் குப்பைகளால் சுகாதாரக் கேடு

யாழ்ப்பாணம், டிசெ. 3

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பெரும்பாலான வீதிகளில் காணப்படும் குப்பைகளினால் அந்தப் பகுதிகளில் தொடர்ந்தும் சுகாதாரச் சீர்கேடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திண்மக் கழிவுகளை கொட்டுவதற்கான இடம் இன்னமும் கிடைக்காததால் அவற்றை அகற்றும் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக நல்லூர் பிரதேச சபைத் தலைவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, எமது பிரதேச திண்மக் கழிவுகளைக் கல்லுண்டாய் வெளியில் கொட்ட உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அனுமதி தருவதாகக் கூறிய போதும் வலி.தென்மேற்கு பிரதேச சபை அதற்கு அனுமதிக்க முடியாதெனக் கூறியுள்ளது. நாங்கள் வேறு இடங்களில் அவற்றைக் கொட்டும்போது பொது மக்களின் எதிர்ப்புக்களுக்கு உள்ளாகின்றோம். பிரதேச சபைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை உணர்ந்து மக்கள் ஒத்துழைக்க வேண்டும்– என்றார். (த-7)

## சாரதிகள், பஸ்கள் போதிய அளவில் இன்னமும் இல்லை

யாழ்ப்பாணம்.டிசெ.3

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலைக்கு பஸ்கள் மற்றும் சாரதிகள் இன்னமும் போதுமானதாக இல்லை. இருக்கக்கூடிய வளங்களைக் கொண்டே பொதுமக்களுக்கான சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன என யாழ். சாலை முகாமையாளர் செ.குலபாலசெல்வம் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி சாலைகளில் நிலவிய வெற்றிடங்களை நிரப்பும் வகையில் புதிய சாரதிகள் 23 பேரும், காப்பாளர்கள் 35 பேரும் கடந்த வாரம் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் யாழ்.சாலைக்கு 10 பேர் வழங்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே 68 பேர் ஆளணியாகத் தேவைப்பட்டனர். யாழ். சாலையில் 89 பஸ்கள் சேவையில் ஈடுபட வேண்டும். எனினும் 18 பஸ்களின் எஞ்சின் பழுதடைந்த நிலையில் அவை சேவையில் ஈடுபடுத்தப்படாமல் உள்ளன. இதன் காரணமாக 71 பஸ்களே



சேவையில் ஈடுடுத்தப்பட்டுள்ளன. இருக்கக்கூடிய ஆளணி மற்றும் பஸ்களைக்கொண்டு பொது மக்களுக்கான சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன –என்றார் அவர். (த-14)

கட்டுரை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழரின் அரசியல் தீர்வும் அதிகாரப் பகிர்வும் மைத்திரி அலையில் அள்ளுண்டு போகக்கூடாது

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதாக ஜாதிக ஹெல உறுமய நேற்று பகிரங்கமாக அறிவித்துவிட்டது. 1994இல் சந்திரிகா அலையொன்று அடித்ததைப் போலவே இப்போது மைத்திரிபால அலை ஒன்று அடிக்க ஆரம்பித்து விட்டது. மேலும் பல அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிரணியின் பக்கம் ஓடிவருவார்கள் என்றும் நம்பிக்கையான எதிர்பார்ப்பு உள்ளது.

மைத்திரிபால வெற்றியை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் நேரத்தில் தமிழர்களுக்கு வரும் செய்திகள் நம்பிக்கை தருவனவாக இல்லை. தமிழர்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றை வழங்கமாட்டேன் என்று அவர் ஜாதிக ஹெல உறுமயவுக்கு உறுதிமொழி வழங்கியுள்ளதாக நேற்றுச் செய்திகள் வெளியாகியுள்ளன. இதனை ஆம் என்று மைத்திரிபால ஏற்றுக்கொள்ளவும் இல்லை. மறுக்கவும் இல்லை. என்றாலும் தேர்தலில் இது ஒரு கோசமாக நிச்சயம் முன்னெடுக்கப்படும்.

தமிழ்த் தலைவர்கள் பிரிவினைவாதத்தைக் கைவிடுவதாக நீதிமன்றில் பகிரங்கமாக அறிவித்த பின்னரும் தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள எந்தவொரு சிங்களத் தலைவரும் தயாராக இல்லை என்பதையே சமஷ்டி பற்றிய பிந்திய செய்தி தெளிவாகக் காட்டுகின்றது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் அதிகாரப் பகிர்வு என்பன தொடர்பில் மைத்திரிபாலவினதும் பொது எதிரணியினதும் நேர்மை குறித்து உதயன் தொடர்ந்து கேள்வி எழுப்பியே வந்திருக்கின்றான். இப்போது அந்தச் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தும் விதத்திலான செய்தியே வந்து சேர்ந்திருக்கிறது.

அதேநேரத்தில் தான் வெற்றிபெற்று அமைக்கப் போகும் தேசிய அரசில் பங்கெடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மைத்திரிபால அழைப்பு விடுத்துள்ளார். அரசியல் தீர்வு குறித்து எதுவும் பேசாமல், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவேன் என்று மட்டும் சொல்லிக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தேசிய அரசில் பங்கெடுக்க வருமாறு அழைப்பதில் என்ன நியாயம் இருக்க முடியும் என்று தெரியவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் நிதானமாகவே காய்களை நகர்த்துகிறது. மைத்திரிக்கு கூட்டமைப்பு இன்னும் ஆதரவளிக்கவில்லை என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று வெளியிட்ட அறிக்கையின் ஊடாகச் சூசகமாகத் தெரிவித்திருக்கிறார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களே என்று அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. குற்றச்செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் உயர் நிலையில் உள்ள அரசியல்வாதிகளால் பாதுகாக்கப்படுகிறார்கள் என்றும் அந்த அறிக்கை கூறுகின்றது.

தற்போதுள்ள அரசமைப்பு மாற்றப்படவேண்டும் என்பதையும் போர்க் குற்றவாளிகள் பாதுகாக்கப்படுகிறார்கள் என்பதையுமே சுமந்திரன் இப்படிச் சுட்டிக்காட்டுகிறார் என்று கொள்ளமுடியும்.

இந்தத் தேசியப் பிரச்சினைக்கு புதிய அரசியல் சக்தி தீர்வு காணும் என்று தாம் நம்புகிறார் எனவும் சுமந்திரன் கூறியிருக்கிறார். இது ஒரு நிபந்தனை போன்றது. இதற்கான தீர்வைத் தெளிவாகக் கொண்டிருக்காத போது மைத்திரியை ஆதரிக்கக் கூட்டமைப்புத் தயாரில்லை என்ற சமிக்ஞையைக் கொடுக்கக்கூடியது. மைத்திரிபால இதனைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். தேர்தலில் வெற்றி எவ்வளவு முக்கியமோ அதேயளவுக்கு அரசியல் தீர்வும் தமிழர்களுடனான அதிகாரப் பகிர்வும் முக்கியமானவையே. இவற்றைப் புறந்தள்ளிய வெற்றி இலங்கை நாட்டில் அர்த்தமற்ற ஒன்று.

மைத்திரி அலையில் அதிகாரப் பகிர்வும் அரசியல் தீர்வும் அள்ளுண்டு செல்ல இடமளிக்கப்பட மாட்டாது என்பதே தமிழர்கள் சொல்லும் தெளிவான செய்தி. உண்மையான, நேர்மையான அரசியல் சக்தியாக இருந்தால் பொது எதிரணி இதில் முழுக் கரிசனை எடுக்கவேண்டும்.

# சுகாதார அமைச்சர் என்ற வகையில் தமக்கு ஏற்பட்ட நெருக்குவாரங்கள்

## ராஜபக்ஷ அரசின் ஊழல்களைப் புட்டு வைக்கிறார் சிறிசேன

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
கோகுலன்



மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிரதான எதிரணி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன களம் இறங்கியிருப்பது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. டிசெம்பர் 8ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் செய்யப்படவிருப்பதையொட்டி சகல தரப்புகளினதும் அரசியல்செயற்பாடுகள் சூடுபிடிக்கத்தொடங்கியிருக்கின்றன.

சிறிசேன கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்தார். 1971 ஆம் ஆண்டு அரசியல் போராட்டங்களைத்தூண்டிவிட்டார் என்ற குற்றச்சாட்டில் ஏறக்குறைய ஓராண்டுகாலம் சிறையில் இருந்துள்ளார். சிறிசேன, ராஜபக்ஷ குடும்பத்தின் மீது கடும் விமர்சனங்களை செய்துள்ளார்.

இந்தக் குடும்பத்தினரைத் தோற்கடிப்பதற்காகத்தான் நான் தேர்தலில் போட்டியிட முன்வந்திருக்கிறேன். நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கு ராஜபக்ஷ வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால் அதனை அவர் நிறைவேற்றவில்லை. எனவே மக்களுக்கு நிறையவும் சந்தேகங்கள் எழுந்துள்ளன என்று கூறினார் சிறிசேன. எனக்கு வழங்கப்பட்டிருந்த தனிப்பட்ட பாதுகாப்பு அகற்றப்பட்டுள்ளது. எனது பாதுகாப்பை நான் மக்களிடம் ஒப்படைத்திருக்கிறேன் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

நான் சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டவுடன் தொழில் ரீதியில் நான் மருத்துவர் அல்லாதவன் என்பதால் எனக்கு ஆலோசனை வழங்குவதற்கென மருத்துவர் கொல்வின குணரட்ணவை நியமித்துக் கொண்டேன். ஆனால் அது அங்கீகரிக்கப்படவில்லை. தனது பணிகளை மக்களுக்கென செவ்வனே ஆற்றுதற்கு ஓர் அமைச்சரால் ஒரு தீர்மானம் எடுக்க முடியாது போகுமானால் ஓர் அமைச்சராக இருப்பதில் பயனில்லை. இவ்வாறு நான் பல தடவைகள் கவலைக்குள்ளாக்கப்பட்டேன். அமைச்சராக பணியேற்றதன் பின்னர் ஒரு நிறுவனத்தின் தலைவர் 400 இற்கு மேற்பட்ட மருந்து நிறுவனங்களிடமிருந்து 20 லட்சத்து 50ஆயிரம் ரூபாவை கொள்ளையடித்துக் கொண்டார் என்று அறிந்தேன். இவ்வாறு தேசிய மருந்துகள் கொள்கையை செயற்படுத்துவதை அவர்களால் தடுக்க முடிந்தது. இது ஒரு தேசிய குற்றச் செயலாகும். உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரையான சிகரெட் பெட்டிகளில் சுகாதாரக் கேடுகள் பற்றி எச்சரிக்கைகளை வெளியிட வேண்டும் என்று நான் ஆரம்பத்தில் ஆலோசனை முன் வைத்தபோது அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கவில்லை. அவ்வாறு செய்வது உல்லாச பயண தொழிலைப் பெரிதும் பாதிப்பதாக இருந்து விடும் என்று காரணம் கூறப்பட்டது.

அரசின் உண்மைத் தோற்றம் இப்போது வெளிப்பட்டு வருகின்றது. அதன் ஊழல்க்ள் படிப்படியாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. உண்மையான சிறிலங்கா சுதந்திரக்கட்சி இப்போது அரசில் இல்லை. அரசியல் அமைப்புமுறை அழிக்கப்பட்டு வருகிறது. ராஜபக்ஷ அதனை மேலும் நாசமாக்கிவிட்டார்.

நாம் அரசு அமைத்தால் எமது பொருளாதாரம் ஒரு திறந்த பொருளாதாரமாக இருக்கும் என்றார். மனித உரிமைகள் சபை முன்னெடுத்து வரும் போர்க் குற்றங்கள் பற்றிய நிலைப்பாடு பற்றி செய்தியாளர்கள் கேட்டபோது; புதிய அரசு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தும் என்றார். சமூக உடன்பாடு ஒரு கொள்கையாக பின்பற்றப்படும். சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வு ஊக்குவிக்கப்படும் என்றார். நாட்டின் நிதிவளங்கள் வீண் விரயம் செய்யப்படுகின்றது. திட்டங்கள், நிகழ்ச்சிகள் குறிப்பாக வீதி அபிவிருத்தியில் கட்டுப்படுத்த முடியாத அளவு ஊழல் மலிந்து கிடக்கிறது. 2011ஆம் ஆண்டு மத்திய வங்கியில் இடம்பெற்ற பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பான மாநாட்டில் வீதி அபிவிருத்தியில் பெரும் அளவில் ஊழல் மற்றும் விரயங்கள் இடம்பெறுவதாக நான் சுட்டிக் காட்டியிருந்தேன். பின்னர் அவ்வாறான பிரச்சினைகளை இனி எழுப்பக்கூடாது என்று நான் நெருக்குதலுக்குள்ளாக்கப்பட்டேன். சுங்கப் பகுதியினரால் தமது கடமைகளை செய்ய முடியாமல் இருக்கிறது. அரசியல் அழுத்தங்களே இதற்கான காரணமாகும். வீதிகள், துறைமுகங்கள் எல்லாம் கட்டியெழுப்பப்படுகின்றன. ஆனால் இவை அனைத்தும் கடனில்தான் மேற்கொள்ளப்படுகின்றன. அபிவிருத்திகள் மட்டும் கடனில் செய்யப்படவில்லை. நாம் கடனில் தான் சாப்பிடுகிறோம். தண்ணீர் குடிக்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.


வெளிநாடுகளால் வழங்கப்படும் நன்கொடைகளும் கூட கடனாகத்தான் வழங்கப்படுகின்றன. எல்லா உதவிகளும் கடனாகத்தான் வருகின்றன. அரசமைப்பு திருத்தங்கள் தொடர்பாக மங்கள சமரவீர தெரிவித்திருந்த ஒரு கருத்து ஐ.தே.கவின் தலைமை நிர்வாகிகள் மத்தியில் சிறு சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது. அதுபற்றி விளக்கமளிக்கும் படியும் அவர் கேட்கப்பட்டிருந்தார். அவர் கூறியிருந்ததாவது நாடாளுமன்ற ஜனநாயகத்தில் நிறைவேற்று அதிகாரங்கள் நாடாளுமன்றத்துக்கும் அமைச்சரவையிடமும் பாரப்படுத்தப்பட்டிருக்கும். பிரதமர் என்ற சொல்லின் கருத்தென்னவெனில், சமத்துவமான நபர்கள் மத்தியில் உள்ளமுதல்வர் என்பதாகும் என்று விளக்கியிருந்தார். உத்தேச அரசமைப்பு சீர்திருத்தங்களின்படி நாடாளுமன்றத்தின் உயர்நிலை பேணப்படும். அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவால் தலைமை வகிக்கப்படும்பலகட்சி அமைச்சரவை செயலாற்றும். சகல நாடாளுமன்ற ஜனநாயகங்களிலும் போலவே அரசின் தலைவராக பிரதமர் இருப்பார். 100 நாள்களில் நிறைவேற்றுஅதிகாரங்கள் ஒழிக் கப்பட்டாலும்சிலகடமைகள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும். மோதல் அரசியலுக்கு வழி வகுத்த ஆட்சி முறைக்கு முடிவு கட்டியதன் பின்னர் தேசிய ஐக்கிய அரசு ஒன்று உருவாக்கப்படுமானால்அது நாட்டுக்குநன்மைபயப்பதாகஇருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

# இன்றைய காலத்தின் எமது தேவைகள்

சர்வதேச வலுவிழந்தோர் தினம் – இன்று

செல்வி ரி.புஸ்பநிதி

எமது நாடு பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்களை நோக்கிய வளர்ச்சிப் பாதையில் துரிதமாக வளர்ந்துகொண்டு செல்கின்றது. இன்று மாற்று வலுவுடையோர்களுக்கான பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் மாற்று



வலுவுடையோர்களுக்கான பல்வேறு நடைமுறைத் தேவைகள், வசதிகள், பிரச்சினைகள் குறித்து மந்த நிலையிலேயே அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இன்றைய எமக்காக ஒதுக்கப்பட்ட நாளில் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

அரச பொதுக்கட்டடங்களில் மாற்று வலுவுடையோர்கள் பயன்படுத்துவதற்கு ஏற்ற வசதிகள் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தற்போது அதிகளவான கட்டடங்கள் எமது பிரதேசத்தில் விரைவாக கட்டியெழுப்பப்பட்டு வருகின்றன. பொதுக் கட்டடங்களிலும், வியாபார ஸ்தாபனங்கள், வணக்கஸ்தலங்களிலும் மாற்றுவலுவுடையோர்களுக்கும் முதியவர்களுக்கும் பயன்படுத்துவதற்கு ஏற்புடையதான வசதிகள் இன்னமும் கருத்தில் கொள்ளப்படாமலே கட்டட வேலைகள் அனைத்தும் முற்றுப்பெற்று வருகின்றன. இதனால் இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் கைகூடிவந்தாலும் நாம் உரிய தேவை களுக்காக பிறரிலேயே மீண்டும் தங்கவேண்டிய நிலையையே ஏற்படுத்தி வருகின்றது.

இன்று யாழ்ப்பாணத்தில் புதுப்பொலிவு பெற்றுள்ள வைத்தியசாலைகள், பிரதேச செயலகங்கள், பிரதேசசபைகள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பல அரச திணைக்களங்கள் போன்ற சேவை வழங்கும் நிலையங்களிலும், வங்கிகள், காப்புறுதி நிதிக் கம்பனிகள், தனியார் வர்த்தக நிலையங்கள்; பூட்சிற்றி, சந்தைகள் போன்றவற்றிலும் மாற்றுவலுவுடையோர்களின் தேவைகள் உணரப்படவில்லை, கட்டடங்களில் மாற்று வலுவுடையோர்களுக்கு ஏற்றவாறு உள்நுழைவதற்குரிய வசதிகள் மற்றும் மாடிக் கட்டடங்களில் மாற்று வலுவுடையோர்கள் சக்கர நாற்காலிகளில் செல்வதற்குரிய சாய்வு வசதிகள் போன்றனவும் கருத்தில் கொள்ளப்படவில்லை என்பதையும் உணரமுடிகின்றது.

இவ்வாறான பொதுக் கட்டடங்களில் எமது தேவைகள் உணரப்பட்டால் மாற்று வலுவுடையோர்களாகிய நாம் சக்கர நாற்காலிகளிலும், ஊன்றுகோல்களின் உதவியுடனும், செயற்கை அவயவங்களுடனும் எமது அன்றாட தேவைகளை நாமே நிறைவேற்ற ஏற்புடையதாக இருக்கும் என்பதே மாற்று வலு வுடையோர்களாகிய எமது எதிர் காலத்தின் அவா!

பொதுப்போக்குவரத்துக்களில் மாற்று வலுவுடையோர்கள் பயன்படுத்துவதற்கு ஏற்ற வசதிகள் இன்றியமையாதவை: தற்போது தெருப் போக்குவரத்திலும், ரயில் போக்கு வரத்திலும் எமது பிரதேசத்தில் கணிசமான அளவில் அபிவிருத்திகள் ஏற்படுத்தப்பட்டுள் என என்பது மகிழ்ச்சிக்குரியது. பொதுப் போக்குவரத்துக்களில் மாற்று வலுவுடையோர்களுக்கு இருக்கைகள் முன்னுரிமைப் படுத்தப்படல் வேண்டும்.

அடுத்து, சரியான முறையில் விழிப்புலன் இழந்தவர்களுக்கும், ஏனைய மாற்று வலுவுடையோர்களுக்குமான பொதுவான வீதிக்கடவைகள் , சமிக்ஞைகள், நடைபாதை வசதிகள், பாதுகாப்பு வசதிகள் என்பன சரியான முறையில் ஏற்படுத்தித் தரப்படவில்லை.

தற்போது ரயில் போக்கு வரத்துப் பாதைகள் கணிசமான அளவில் உயர்த்தப்பட்டு சரியான முறையில் சாய்வுகள் அமைக்கப்படாததால் முச்சக்கரவண்டிகளிலும், சக்கரநாற்காலிகளிலும் எமது அன்றாடப் பயணங்களை மேற்கொள்ளும் மாற்று வலுவுடையோர்களாகிய நாம் புகையிரதக் கடவைகளில் பெரும் சிரமங்களையும், அபாயங்களையும் எதிர்நோக்கி வருகின்றோம்.

முக்கியசந்திகள் மற்றும் பிரதேசங்களில் விழிப்புலன் இழந்தவர்கள் உரிய இடங்களை அடை யாளம் காணக்கூடியதாக வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

மேற்படி அபிவிருத்தித் திட்டங்களை மாற்று வலுவுடையோர்களாகிய எமது பிரச்சினைகளையும், தேவைகளையும் கருத்தில் கொண்டு எமது செயற்பாடுகளை நாமாகவே செய்யக் கூடியவாறு முன்னெடுத்து உதவுமாறும் இன்றைய எமது நாளில் உரிய அதிகாரிகளிடம் பணிவான வேண்டுகோள் விடுக்கின்றோம்.

## புதியதோர் விதி செய்வோம்

குறை நிறை உள்ளவன் மனிதன்
குறையிலா நிறைவு இறைவனே
புலனுறுப்பில் மனநலத்தில் வளமின்மை
அனைத்திலும் குறைபாடாய் எண்ணப்படும்
பொறியின்மை யார்க்கும் பழியன்று
ஆள்வினையின்மையே பழியாகும்.
வாழ்க்கையில் வருகின்ற சவால்களை
எதிர்கொள்ள உடலூனம் தடையல்ல
மனதிலே உறுதியுடன் திறனிருந்தால்
தடைக்கற்கள் படிக்கல்லாய் மிதிபடலாம்
ஒன்றாக அபிவிருத்தி அடைவதற்கு
வளரும் தொழில்நுட்பம் அறிந்திடுவீர்
அதனை எல்லோருக்கும் பொதுவில் வைப்போம்
வெளியுலகைக் கவனித்துப் பார்
தெளிவாகப் போகும்வழி கண்டிடலாம்
தனியாகக் செல்வதற்கு தயக்கமென்றால்
உதவிக்கு ஒரு கரத்தை பற்றிக்கொள்
ஊனம் பாவம் இல்லை சாபமுமில்லை
விதியென்றும் விபத்தென்றும் பயனில்லை
நிகழ்காலத்தில் வாழக் கற்றுக்கொள்
பழைய பஞ்சாங்கத்தை கட்டி வை
புதியதோர் விதிசெய்யப் புறப்படு
வானம் உனக்குக் கூட வசப்படும்
உலகம் உன் பெயரை உச்சரிக்கும்

*சு.சிவராசா*
*வலுவுற்றோர் புனர்வாழ்வுக்கழகம்*

# தெல்லிப்பழை மருத்துவமனை தரமுயர்த்தப்படல் வேண்டும்

மு.சந்திரசேகரம்

ஏற்கனவே சத்திரசிக்சைக் கூடம், இரத்த வங்கி, யரழ்ப்பாண மருத்துவபீடத்தின் மருத்துவ மாணவர்களுக்கான பயிற்சி, சிறப்பு உளநலப் பிரிவு முதலான விசேட சிகிச்சைப் பிரிவுகளுடன் இயங்கிவந்த தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் தற்போது புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவுகளும் இணைக்கப்பட்டுள்ளன. இந்தப் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கான கட்டுமானப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இவை நிறைவு பெற்றதும் மகரகம புற்றுநோய் சிறப்பு மருத்துவமனைக்கீடான மிகப் பெரிய சிகிச்சைப் பிரிவாக இது தோற்றம் பெறும். ஆனால் தற்போது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அங்கு காணப்படும் குறைந்தள விலான ஆளணி மற்றும் பௌதிக வளங்களுடன் இயங்கி வருகின்றது. உண்மையில் மேற்படி ஆளணி மற்றும் பௌதிக வளங்கள் ஒரு சிறிய பிரதேச வைத்தியசாலைக்கு மட்டுமே போதுமானதாகும். பல மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தொழில்நுட்ப மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள், தாதியர்கள் மற்றும் சிற்றூழியர்களுடன் ஒரு சிறப்பு மருத்துவமனையாக மக்களுக்குச் சேவையாற்ற வேண்டிய இந்த மருத்துவமனை ஆளணிப் பற்றாக்குறையுடன் இயங்கி வருகின்றமை வேதனைக்குரியது.

இந்தப் பரிதாப நிலையை மாற்றியமைக்கும் பொருட்டு இந்த மருத்துவமனையை வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் ஒரு சிறப்பு மருத்துவமனையாக தரமுயர்த்தும் கோரிக்கைகள் பல்வேறு தரப்பிலிருந்தும் பலமாக எழுப்பப்பட்டுள்ளன. அவ்வாறு தரமுயர்த்தப்படும் பட்சத்தில் மருத்துவமனைக்குத் தேவையான ஆளணியைப் பன்மடங்காக உயர்த்த முடிவதுடன் பல்வேறு சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளையும் புதிதாக ஆரம்பிக்க முடியும். மேலும் மத்திய சுகாதார அமைச்சிலிருந்து நேரடியாக சிறப்பு நிதி ஆதாரங்களைப் பெற முடிவதுடன், மத்திய வழங்கல் பிரிவிலிருந்து நேரடியாக மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறு சிறப்பு மருத்துவமனையாக தரமுயர்த்தும் கோரிக்கைகள் முன்னரும் பல தடவைகள் எழுப்பப்பட்டு அவை வடமாகாண சுகாதார அமைச்சர், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மத்திய சுகாதார அமைச்சின் உயரதிகாரிகளின் கொள்கை அளவிலான உடன்பாட்டைப் பெற்று கொண்டுள்ளபோதும் அது தொடர்பான உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் எதுவும் இது வரை மேற்கொள்ளப்படவில்லை.

# கட்டுரை

## வாழ்த்துச் செய்தி

### மன்னார் ஆயரின் ஆசியுரை

உரிமைகள் மறுக்கப்பட்டு, அரசியல் அநாதைகளாக்கப்பட்டுள்ள ஈழத் தமிழரின் உரிமைக் குரலாக ஒலித்துவரும் உதயன் பத்திரிகைக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆள்வோரின் அடாவடித்தனங்களை, திட்டமிட்ட சூழ்ச்சிகளை உடனுக்குடன் வெளிச்சம் போட்டுக்காட்டி உலகத்தின் மனச்சாட்சியை உலுக்கிவிட்டதில் உதயனுக்குப் பெரும் பங்குண்டு. ஈழத் தமிழ் மக்களின் கடந்த 30 ஆண்டுகால நீண்ட நெடிய வரலாற்றுப் பயணத்தில் குரலற்ற மக்களின் குரலாய் உதயன் ஒலித்து வந்துள்ளான். போர்க் காலச் சூழலிலும், போருக்குப் பின்னரான இன்றைய கால கட்டத்திலும் தமிழ்த் தேசிய உணர்வை மக்கள் மத்தியில் நிலை நிறுத்துவதில் உதயன் பத்திரிகை ஆற்றிவரும் பங்கும் பணியும் பாராட்டுக்குரியன.

பத்திரிகைத் துறையானது இன்று உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கப்படும் அறிவுசார்ந்த ஒரு தொழிலாகக் கருதப்படுகின்றது. இன்றைய செய்திகள்தான் நாளைய வரலாறு. எனவே, நாளைய வரலாறாகப் போகும் இன்றைய செய்திகளை தமிழினத்தின் எதிர்கால நலன்கருதி பொறுப்புணர்வோடு வெளியிடும் உதயனின் பத்திரிகைப் பணி விதந்துரைக்கப்பட வேண்டியது.

பொய்மையிலும், இருட்டிலும் வாழ்வோர் உண்மையை, ஒளியை ஏற்றுக்கொள்வதில்லை. இப்படிப்பட்டவர்களால் உதயன் எதிர்நோக்கிய–எதிர்நோக்கும் சவால்களை நாம் அறிவோம். பல தடவைகள் உதயன் பத்திரிகைக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அச்சியந்திரங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. சில பணியாளர்கள் கொலை செய்யப்பட்டனர். பலருக்கு உயிர் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. இத்தனை சவால்கள் மத்தியிலும் தனது கொள்கையில் இருந்து சற்றும் தளராது உறுதியோடு நடைபயிலும் உதயனின் வெற்றிப் பயணம் தொடர்வதாக!

உதயன் புத்திரிகையோடு இணைந்து பணியாற்றும் அனைவரோடும் இறைவனின் அருட்கரம் இருந்து வழி நடத்துவதாக!

*மேதகு இரா.யோசேப்பு ஆண்டகை, மன்னார் ஆயர்.*

### யாழ் ஆயரின் ஆசிச் செய்தி

"நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது" (மத் 5:10)

ஊடகத்துறையின் வளர்ச்சியிலேயே பத்திரிகையும் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. அவற்றி லும் குறிப்பாகக் கடந்த 29 ஆண்டுகளாக யாழ். மண்ணில் இருந்து வெளிவருகின்ற உதயன் பத்திரிகையின் முக்கியத்துவத்தையும், அது தமிழ் மக்கள் மட்டுமல்லாது ஏனைய மொழி பேசும் மக்கள் மத்தியிலும் அதற்கே உரிய சிறப்பையும் நாம் அறிவோம். கடந்தகால போர் வேளையிலும், இன்றும்கூட பல சவால்களை, கஷ்டங்களை எதிர்கொண்டு சேவையாற்றி இன்று 30ஆவது ஆண்டில் கால்பதிக்கும் உதயன் பத்திரிகையை நான் வாழ்த்துகின்றேன். நீதியோடும், உண்மையோடும் நடுநிலை தவறாமல் உள்ளதை உள்ளபடியே கூறும் பத்திரிகைகளில் ஒன்றாக உதயனும் விளங்குவது எல்லோரதும் நம்பிக்கை.

தொடர்ந்தும் இத்தகைய விழுமியங்களை தன்னகத்தே கொண்டு உதயன் மேன்மேலும் சேவை புரிய உதயன் நிர்வாகத்தினரையும், பணிபுரிவோரையும் வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

*மேதகு இ.தோமஸ் சவுந்தரநாயகம், யாழ்.ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.*

### மூன்றாவது தசாப்தத்தில் காலடி பதிக்கும் முத்து

எதிர்பார்ப்புக்கள் பல தாண்டி பொறுமை நிதானத்துடன் பயணித்து மக்களின் உள்ளங்களைக்கவர்ந்து இன்று மூன்றாவது தசாப்தத்தில் காலடி பதிக்கும் முத்து என 'உதயன்' திகழ்கிறான். நடுநிலை ஊடகமாக நாட்டிலே தடம் பதித்து எங்கள் கரங்களை தினமும் அலங்கரித்தவன் 'உதயன்'. தமிழினம் காலையிலே அறியத்துடிக்கும் பல தகவல்கள், செய்திகள் மற்றும் பல சிறப்பம்சங்களுடன் வெளிவரும் ஒரே ஒரு தினசரி 'உதயன்' என்றால் அது மிகையாகாது. 27.11.2014 தனது 29ஆவது அகவையைப் பூர்த்தி செய்து 30ஆவது அகவையில் காலடி வைக்கும் உதயன் தொடர்ந்தும் தனது மக்கள் சேவையைத் தொடர எல்லாம் வல்ல வல்லிபுர மாயவனின் பேரருள் நிறைந்து வர ஆசிகள் கூறி வாழ்த்தி இன்முகத்துடன் 'உதயன்' தினசரி வரவை எதிர்பார்த்து மகிழும் வாசகன்.

*பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு*
*பிரதமகுரு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்*
*துன்னாலை –புலோலி*

#### கருத்துச் சித்திரம்




### மழைக்காலம் வழி வழுக்கும் மிகக் கவனம் மக்காள்

*குடை பிடித்து செருப்புமிட்டு*
*புத்தகமும் கொண்டு*
*குடுகுடென நடந்து வரும்*
*குழந்தைகளே கேளீர்*

*மழைக்காலம் வழி வழுக்கும்*
*மிகக் கவனம் மக்காள்*
*வழியருகே வெள்ளமுண்டு*
*விலகி வரல் வேண்டும்*

*வெள்ளத்தில் கல்லெறிந்து*
*விளையாட வேண்டாம்*
*வீண் சண்டையால் வழுக்கி*
*விழுந்தெழும்ப வேண்டாம்*

*கண்மணிகாள் நீர்ச்சிரங்கு*
*காலில் வரும் கவனம்*
*கண்ணுறக்கம் இல்லாமல்*
*கதறி அழ நேரும்.*

இப்போது பெய்து கொண்டிருக்கும் மழைக்காலத்தை அனுபவிக்கையில் சோமசுந்தரப் புலவரின் இந்தப் பாடல்தான் நினைவுக்கு வருகின்றது. நம்மில் பெரும்பாலானோர் முன்பள்ளிப் பருவக் காலத்தில் இந்தப் பாடலைப் பாடியிருப்போம். ஒரு கையில் புத்தகமும், மறுகையில் குடையும் பிடித்து மழை வெள்ளத்தில் ஓடுவதைப் போல அபிநயித்துக்கூட காட்டியிருப்போம். இந்தப் பாடல் பிரபலம் பெற்றிருந்த அந்தக் காலத்தில் மழை குறித்து அவ்வளவு மதிப்பும், மரியாதையும், பயமும், கவனமும், முன்னெச்சரிக்கையும் நம்மிடையே இருந்தது. இந்தவகை எண்ணங்களுக்கெல்லாம் மழை நம் வாழ்வில் பிடித்துக்கொண்ட இடமே காரணம். வாழ்வின் பாதிக் காலத்தை மழை பிடித்திருந்தது. அதனால்தான் கோடைகாலம் முழுவதுமான உழைப்பு மாரிகாலத்துக்கான சேமிப்பானது. ஆனால் இன்று–

மழை மாரியில் பிறப்பதை விடுத்து மாறிப் பிறக்கத் தொடங்கிவிட்டது. முன்பெல்லாம் வருடத்தின் பின் அரை மூன்று மாதங்கள் மாரிகாலம் எனப்படும். இப்போது 4 வருடங்களுக்கு ஒருமுறையே, வருடமொருமுறை வந்த மாரிக் காலம் வருகிறது. கடைசியாக நிசா புயலுடன் 2008 ஆம் ஆண்டில் அடித்த மழை, இந்த ஆண்டில் கொட்டித் தீர்த்திருக்கின்றது. இதற்கு காடழிப்பும் அதனால் விளைந்த காலநிலை மாறுதலுமே முக்கிய காரணம். ஆகவே இனி 4 வருடங்களோ அல்லது அதனையும் தாண்டியோ தான் இப்படியொரு மழையை அனுபவிக்க முடியும். அந்தக் காலத்தில் சோமசுந்தரனாரின் பாடல் மேலும் முக்கியத்துவமிழந்திருக்கும். இவ்வாறு 4 வருடங்களுக்கு ஒரு முறை என்றாகிவிட்ட மாரி காலத்தை அனுபவிக்க அல்லது பயன்படுத்திக் கொள்ள நாம் தயாராக இருக்கின்றோமா என்ற கேள்வி இந்த மழைக்காலத்தில் எழுப்பப்பட வேண்டும். மாரிக்காலம் சுருங்கிவிட்டதன் விளைவுதான் இந்த வருடத்தின் தொடக்கப்பகுதியில் ஏற்பட்ட வறட்சியும், யாழ்ப்பாணத்து குடிதண்ணீரில் கலந்திருக்கின்றதாக சொல்லப்படுகின்ற மாசுபொருள் பிரச்சினைகளும். அத்தோடு இரணைமடு நீர் திட்டத்தையும் இணைத்து நோக்கலாம்.

இவ்வாறு மாரி பொய்த்த, நீரற்ற நிலைமைகளை முன் வைத்து எழுந்த பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள இந்த மழை போதியளவு தீர்வுகளைத் தந்தது. அதனை நாம் புரிந்து கொண்டு, திட்டமிட்டு செயற்பட்டோமா? இதற்கும் விடை இல்லையெனத்தான் எழுதத் தோன்றுகின்றது.

வானிலிருந்து பெய்கின்ற ஒரு துளி மழை நீரையும் கடலில் சென்றுசேர விடமாட்டேன் என்று சூளுரைத்த மன்னனின் வழிவந்த அரசில் அங்கம் வகிக்கும் எந்த அமைச்சர்களும், அந்த மன்னனின் கொள்கையை மறந்தவர்களாகவே நடந்துகொண்டனர். நீர் பிரச்சினையை தீர்க்க தற்காலிக திட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்தி தம் பெயருக்கான விளம்பரத்தைத் தேடிக் கொண்டனரே தவிர, நீடித்து நிலைக்கக்கூடிய நீர் விருத்தித் திட்டங்களை மேற்கொள்ளத் தவறிவிட்டனர். இவ்வளவு மழை நீரும் கடலில் சென்று சேர்ந்திருக்கிறது. உப்பு நீர்தான் மேலும் மேலும் அதிகரித்திருக்கின்றது. சரியான திட்டமிடலோடு, இருக்கின்ற குளங்களை சீரமைத்து, அகலித்தும், புதிய குளங்களை நீர்ப்பாய்ச்சலுக்கு அமைவாக அமைத்து வைத்திருந்தால் இந்த மழையை நன்மை தரும் விதத்தில் பயன்படுத்தியிருக்கலாம்.

குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கப் பெருந்திட்டங்களை, அதிகளவு நிதி செலவழிப்பில் நடைமுறைக்கு கொண்டு வருவதில் காட்டும் ஆர்வத்தை கிராமத்துக்கொரு மழை நீர் சேமிப்புத் தாங்கியை உருவாக்கியிருந்தால் அதிகளவு பயன் விளைந்திருக்கும். அடுத்த மாரி வரும்வரைக்குமான நீர் தேவையை ஓரளவுக்காவது பூர்த்திசெய்திருக்கலாம்.

இந்த மழைக்காலம் நம்மை சுற்றி மேற்கொள்ளப்பட்டிருக்கும் அபிவிருத்தியில் இருக்கின்ற குறைபாடுகளையும் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது. எந்தவித இயற்கை அனுசரிப்பும் இன்றி நடைமுறைக்கு வந்திருக்கும் அபிவிருத்தித் திட்டங்களில் (வீதிகள், கட்டடங்கள்) மழை நீர் வழிந்தோடுவதற்கான வாய்க்கால்கள் உரிய முறையில் அமைக்கப்படவில்லை. இதனால் வழமையாகப் பெய்யும் மழையைக்கூட பெரிதுபடுத்திப் பார்க்குமளவுக்குக் கண்ட இடங்களிலெல்லாம் வெள்ளம் நிரம்பி நிற்கிறது. இதுபோல ஆயிரம் குறைபாடுகள், அருகிவரும் மழையை நோக்கி நம்மிடத்தில் இருக்கின்றன. அவற்றையெல்லாம் கவனிக்காதுவிட்டால், மழைக் காலம் தொடர்ந்தும் நமக்கு வழுக்கிக் கொண்டே தான் இருக்கும்.

**பத்தி எழுத்து**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த
செல்வி சிவபாலசிங்கம் தேநிலா அவர்கள்
2014 - தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையிட்டு
அவரைப் பல்கலையும் பெற்று வாழ்வினில் நற்பேறுடன் திகழ்ந்திட வாழ்த்துகின்றோம்.
Best Wishes
வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அக்கா, தங்கை மற்றும் அம்மப்பா, அம்மம்மா, சித்திமார்கள், மாமா.
(கி.17953) (45.3)

## பாராட்டு விழாவும் பிரிவு உபசார விழாவும்



**நாகராசா மகேந்திரராசா**
(B.Ed., N.Dip. Teach, SLPS-III)
எமது பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி தற்போது யா/இந்து ஆரம்ப பாடசாலையில் 28.10.2013 அதிபராகப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட **நா. மகேந்திரராசா** அவர்கள் மேலும் பல பதவிகள் பெற்று உயர வாழ்த்துகின்றோம். பிரிவுபசார விழா நடத்தும் இந்த நாளில் பாடசாலைச்சமூகத்தின் சார்பில் மனதார வாழ்த்துகின்றோம்.
Congratulation
வாழ்த்துவோர்: பாடசாலைச்சமூகத்தினர்,
யா/சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை, நீர்வேலி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கரம்பை அ.மி.த.க. பாடசாலையில் 2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 157 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த
**றசிந்தகுமார் சுரேன்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் மேலும் கல்வியில் பல சித்திகள் பெற வாழ்த்துகின்றோம்.
Congratulation
(54571) (4.3.6)
வாழ்த்துவோர்: அப்பா (பிரான்ஸ்), அம்மா, அம்மம்மா, அப்பப்பா, தங்கைமார், அக்காமார், அண்ணாமார், பெரியப்பா, பெரியம்மா, மாமா, அத்தை, அன்ரி, சித்திமார், நாவற்காடு, வரணி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes




**வேலும் மயிலும் கணேசவேல்**
(சுதேச வைத்திய திலகம்) அவர்கள்
நேற்று (02.12.2014) யாழ். மாவட்ட நீதிபதி உயர்திரு அ. ஆனந்தராசா அவர்கள் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி, உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த சுதேச வைத்திய திலகம் வேலும் மயிலும் கணேசவேல் அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்:
ந.துரைராஜா J.P
விவாகப் பதிவாளர்-வடமராட்சி.
"தவமஹால்" அல்வாய்.
Best Wishes
(52029)(10.6.3)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

03.12.2014



லண்டனில் வசிக்கும்
திருமதி துஸ்யந்தன் யசோதரா தம்பதியரின் ஏக புதல்வன்
**யஷ்வினுக்கு**
முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

HAPPY BIRTH DAY



வாழ்த்துவோர்:
அப்பப்பாமார், அப்பம்மாமார், அம்மப்பாமார், அம்மம்மாமார், மாமன்மார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், பூட்டி, அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார்.
(4583) (4.3.6)
செல்வநகர், நாவற்குழி வடக்கு, கைதடி.

# செய்திகள்

## பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், டிசெ.3

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விசேட கல்விக் கற்கை ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட ஆசிரியர்கள், மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கற்பித்தல் சாதனம் உருவாக்கல் போட்டியிலும் சித்திரப் போட்டியிலும் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் 'நித்திலம்' நூல் வெளியீட்டு விழாவும் கல்லூரியில் நாளைவியாழக்கிழமை காலை 8மணிக்கு ச.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக லயன் வைத்தியகலாநிதி நவீல்ட் பாடசாலை அதிபர் வி.எஸ். மகேந்திரனும் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரனும் டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனத்தின் முகாமையாளர் எஸ்.கே.வசந்தனும் கலந்து கொள்வர். (வ–ரி)

# சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் -டிசெம்பர் 03

வாழ்வாங்கு வாழ வழி சமைப்போம்!



VAROD
ENABLING BETTER WAYS FOR LIVING

**மாற்றாற்றல் உடையோருக்கான வலுவூட்டல் அமையம் - வன்னியானது (VAROD) வன்னி பிராந்தியத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளை இலக்குக் குழுவினராகவும், அவர்களது வலுவூட்டத்தைப் பிரதான செயற்றிட்டமாகவும் கொண்டு, 2009ம் ஆண்டில் கத்தோலிக்கத் திருச்சபையின் கிளரேசியன் மறைபோதக சபையினால் இன,மத பேதங்களுக்கு அப்பாற்பட்ட மனிதாபிமான தொண்டு அமையமாக உருவாக்கப்பட்டது.**

ஆறறிவு படைத்த மனிதர்களாகிய நாம் மதிப்பீடுகளையும், உரிமைகளையும் உயரிய கொடையாகக் கொண்டுள்ளோம். இன்று ஏறத்தாழ 01 பில்லியன் மக்களாகிய நாம் பல்வகை காரணங்களால் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் மாற்றுத்திறன் கொண்டவர்களாய் உள்ளோம். நாம் எமது மாற்றுத்திறனாளிகளை நோக்கும்போது கருணைப்பார்வையில் நடாத்த முற்படுகின்றோம். மாறாக மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வதேச தினமானது மாற்றுத்திறன் உடையோர் விடயத்தில், இவ்வுலகில் வாழும் ஒவ்வோர் மனிதனும், மாற்றுத் திறனாளிகள் மட்டில் தன்னகத்தே கொள்ளவேண்டிய பொறுப்பை உணர்த்துவதாய் அமைகிறது. நாம் எம் அறிவுக்கண்களை திறந்து பார்ப்போமானால் மாற்றுத்திறனாளிகள் படைக்கும் சாதனைகளை உற்றுநோக்க முடியும். மாற்றுத்திறனாளிகளில் அக்கறைகொண்டு சமூக மட்டத்தில், நாடலாவிய ரீதியில், உலகளாவிய ரீதியில் பல அமைப்புகள் செயல்படுவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

"VAROD" அதாவது "மாற்றுவலுவுடையோருக்கான வலுவூட்டல் அமையம் - வன்னி" மாற்றாற்றல் உடையோர் மத்தியில், தனது வலுவூட்டும் பணியை இரு பொறிமுறைகள் ஊடாக ஆற்றிவருகிறது. முதலாவது, சமூகம்சார் வலுவூட்டல் பொறிமுறை; இரண்டாவது நிலையம் (வதிவிட) சார் வலுவூட்டல் பொறிமுறை. சமூகம்சார் வலுவூட்டல் பொறிமுறை ஊடாக VAROD அமையம் கிளி, முல்லை, வவுனியா ஆகிய மாவட்டங்களிலே ஏறக்குறைய 287 குழுக்களை அமைத்து மாற்றுத்திறனாளிகள் மத்தியில் ஆன்மீக, கல்வி, மருத்துவ, பொருளாதார, உளவள, கலை பண்பாட்டு செயற்பாடுகளூடாக வலுவூட்டும் பணிகளை ஆற்றிவருகின்றது. இப் பொறிமுறையானது 5828க்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் தமது வாழ்வை நல்லதோர் இலக்கை நோக்கி இட்டுச்செல்ல உந்து சக்தியாய் அமைகின்றது



நிலையம்சார் வலுவூட்டல் பொறிமுறை ஊடாக மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான வலுவூட்டும் செயற்றிட்டங்களும், உடல் ரீதியான மாற்றுவலுவுடையோருக்கான மருத்துவம், தொழில்சார் கற்கைநெறி செயற்றிட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ் வலுவூட்டல் பணியூடாக, மாற்றாற்றல் படைத்தோர் மத்தியில் தன்னம்பிக்கையை வளர்ப்பதும், பொருளாதாரத்தில் மேம்பாட்டை ஊட்டுவதும், கல்வி செயற்பாடுகள் ஊடாக வளமூட்டுவதும், மருத்துவத்தை பெறுவதற்கான வசதிகளைச் செய்வதன் ஊடாக உடல் வலுவைப் பெறத்தூண்டுவதும், ஒவ்வோர் மனிதனும் நல்லதோர் ஆளுமையை கட்டியெழுப்பி வாழ்வை வாழ்வாங்கு வாழ வலுவூட்டுவதும் எம் பணியாகின்றது. VAROD அமையமானது ஆற்றியுள்ள பணிகளை உங்களோடு பகிர்கிறோம்.

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட மொத்த உறுப்பினர்கள் | 5828 |
| மருத்துவ வலுவூட்டம் பெற்றோர் | 3440 |
| ஆதார உபகரணங்கள் பெற்றோர் | 420 |
| வாழ்வாதார வலுவூட்டம் பெற்றோர் | 740 |
| கல்வி மூலம் வலுவூட்டம் பெற்றோர் | 1019 |
| பகுதி நேர கல்வி நிலையங்கள் [41] | 1649 |
| பிள்ளைகளுக்கான ஆதரவு திட்டம் | 90 |



## நிறைவேற்று இயக்குனரிடமிருந்து...



அன்புடை என்சக மனிதர்களே!

மார்கழித்திங்கள் மூன்றாம் நாள் மாற்றுத்திறனாளிகளுக்கான சர்வதேச தினமாய் அமைகிறது. இவ்வாண்டை ஐ.நா. சபை "தொழிலநுட்பத்தின் ஆதரவால்; நிலையான வளர்ச்சிநோக்கி" எனும் அகநோக்கை பிரகடனப்படுத்தியுள்ளதை பார்க்கிறோம். நாம் வாழும் இன்றைய சூழலில் மாற்றாற்றல்கொண்ட ஒவ்வோர் மனிதனும் அதீத தன்நம்பிக்கையோடு செயல்படுவதனூடாகவே தன் வாழ்வின் சவால்களை வெற்றிகொள்ள முடிகிறது.

எமது வாழ்வில் நாம் முன்னேற்றம் காணவேண்டிய, "பொது இடங்களுக்கான அணுகும் வசதி", "தொழில்நுட்பத்தின் ஆதரவில் நிலையான வளர்ச்சி" என்பது ஓர் அளவே எமது அரசால், மாற்றுத்திறனாளிகளுக்கான அமைப்புக்களால் நிறைவு செய்யப்பட முடியும். இவ் இலக்குகளை அடைவதற்க்கு நாம் செல்லவேண்டிய பாதை வெகு தொலைவாகவே உள்ளது. இருப்பினும் ஒவ்வோர் மாற்றுத்திறனாளிகளும், நிறுவனங்களும், அரசும் செய்யக்கூடிய பொறுப்புமிக்க உதவிகளை வினைத்திறனுடன் பயன்படுத்தினால் தமக்கே உரித்தான தனித்துவத்தை நிலைநிறுத்த முடியும் என்பது திண்ணம். எமது சிந்தனையில் நீதியும், எமது உள்ளத்தில் அமைதியும், எமது வாழ்வில் மகிழ்ச்சியும் எப்பொழுதும் குடிகொள்ள ஆசித்து வாழ்த்தி நிற்கிறேன்.

- அருட்தந்தை அல்பேட் ஜோ. அருள்ராஜா CMF

## செய்திகள்

# வாய் திறந்து பேச முடியாத அரசியல் சூழ்நிலை இப்போது

### கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அமீர் அலி கூறுகின்றார்

ஏறாவூர், டிசெ.3

அரசியல்வாதிகள் வாய் மூடி மௌனமாக இருக்க வேண்டிய ஒரு இக்கட்டான அரசியல் சூழ்நிலை தற்போது நிலவுகின்றது என்பதை எந்த அரசியல் வாதியும் ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும் – இவ்வாறு தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான எம்.எஸ்.எஸ். அமீர் அலி.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏறாவூரில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"தமிழ் சமூகத்தின் தலைமையும் தற்போதைய அரசியல் சூறாவளியில் தமது நிலைப்பாடு பற்றி அடக்கி வாசிப்பதால் தேசிய அரசியல் புயலின் மையம் வேறெங்கோ மையம் கொண்டிருக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த காலத்திலே அரசியல் தலைவர்கள் எடுத்த முடிவுகளுக்குப் பதிலாகத் தற்போது பிராந்தியத்திலே வாழ்கின்ற மக்கள் முடிவெடுக்கும் சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. அரசியல் தலைவர்கள் தற்போது அமைதியாக இருக்க சமூகம் பெருத்த எதிர்பார்ப்போடு காத்திருக்கின்றது. இந்த விடயத்திலே சமூக மக்கள் உறுதியாகவும் தெளிவாகவும் முடிவெடுக்க வேண்டும்.

காத்தான்குடியிலோ, ஏறாவூரிலோ, ஓட்டமாவடியிலோ பேசப்படுகின்ற, எடுக்கப்படுகின்ற தீர்மானமாக தேசியத் தீர்மானம் இருக்கப்போவதில்லை என்பதை மக்கள் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். அதனாலேயே எங்களைப் போன்ற அரசியல் தலைமைகளால் சமகால அரசியல் சூழ் நிலையில் வெளிப்படையாக மனந்திறந்து பேசுவதில் தயக்கம் இருக்கின்றது. குறுகிய கால அவகாசத்துக்குள் முஸ்லிம் சமூகம் முன்னோக்கியும் பின்னோக்கியும் பார்த்து முடிவெடுக்க முடியுமா என்பதில் எனக்குச் சந்தேகம் இருக்கின்றது"– என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## தேர்தல் குறித்து அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்



கொழும்பு, டிசெ.3

ஜனாதிபதித் தேர்தல் குறித்து அரச அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்தத் தகவலை ஆணைக்குழுவின் ஆணையாளர் பிரதீபா மஹாநாம ஹேவ கூறினார்.

பொலிஸ் மா அதிபர், தேர்தல் ஆணையாளருடனும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் விசேட கலந்துரையாடல் நடத்தவுள்ளதாகவும் அவர் கூறினார். (ற)

# வன்னி மாவட்டத்தில் ஐ.தே.க. புது வியூகம்

### நிர்வாகத்தில் பல மாற்றங்கள்

மன்னார், டிசெ.3

ஐக்கிய தேசியக் கட்சி வன்னி மாவட்டத்தில் கட்சி நிர்வாகத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளது என்று கூறப்படுகின்றது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. வன்னி மாவட்ட தேர்தல் அமைப்பாளராக அந்தக் கட்சி ரோகண கமகேயை நியமிக்கவுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கும் ஐ.தே.க. அமைப்பாளர்களை நியமிப்பதற்கு அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது. அமைப்பாளர்களை நியமிக்கும் பொறுப்பு அந்தக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கபீர் காசீமிடம், கட்சித் தலைவரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்ட அமைப்பாளர் ஒருங்கிணைப்புச் செயலாளர் ஏ.எஸ்.எம். பஸ்மியை கட்சிப் பிரமுகர்கள் சிறிகோத்தாவில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்த நியமனங்களில், ஐ.தே.கவின் நெருக்கடியான காலங்களில் ஒன்றிணைந்து நின்றவர்கள் தொடர்பில் அதிக கவனம் எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ற-56)

# பிள்ளையை பெற்றுவிட்டு அரசு பெயரிட அழைக்கிறது அலியை

### அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கூறுகின்றார்

கல்குடா, டிசெ.3

அரசு பிள்ளையைப் பெற்றுவிட்டு, இறுதியில் பெயர்வைப்பதற்கு அமீர் அலியை அழைக்கின்றது என்று கூறியுள்ளார் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், கைத் தொழில் மற்றும் வாணிப அமைச்சருமானரிஷாத்பதியுதீன்.


அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்படுவது தொடர்பிலான கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மீராவோடையில் நடந்தது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே ரிஷாத் இவ்வாறு கூறியுள்ளார்.



"கிழக்கு மாகாண சபையின் கடந்த தேர்தலில் அமீர் அலிக்கு முதலமைச்சர் பதவி வழங்குவதற்கு அரசு வாக்குறுதி வழங்கியது. ஆனால் அரசு எதிர் பார்த்த ஆசனங்களை பெற முடியவில்லை. மாற்றுக் கட்சிகளை இணைத்துக் கொண்டு ஆட்சியமைக்க நேரிட்டது. அவர்கள் அமீர் அலியை முதலமைச்சராக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனால் அரசு அமீர் அலிக்கு பிரதியமைச்சர் பதவி வழங்குவதாகக் கூறியது. அதனை நம்பி நாம் ஏமாந்து விட்டோம். இப்போது கல்குடா மக்களின் அனுமதியின்றி அமீர் அலி பதவியேற்கத் தயாரில்லை. மக்களின் கருத்துகளுக்கு அமைவாக முடிவுகளை எடுப்போம்"– என்று கூறினார்.

அமீர் அலி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியேற்பது குறித்து நாளை வியாழக்கிழமை இறுதி முடிவு எட்டப்படும் என்று அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கூறியுள்ளது. (ற-10)

## விடுகதை




- வாயிலிருந்து நூல்
போடுவான்; மந்திரவாதியும்
இல்லை கிளைக்குக் கிளை
தாவுவான்; குரங்கும்
இல்லை வலைவிரித்துப்
பதுங்கியிருப்பான்;
வேடனும் இல்லை – அவன்
யார்?
சிலந்தி
- ஊளையிட்டாலும் ஊரைச்
சுமந்து செல்வான் – அவன்
யார்?
ரயில்
- கல்லிலே காய்க்கும் பூ;
காய்ந்தால் மலரும் பூ;
பூவிலே இது வெள்ளைப்
பூ. - என்ன பூ?
சுண்ணாம்பு
- .எண்ணெய் இல்லை;
திரியும் இல்லை ஏற்றி
வைக்க ஆளும் இல்லை
ஆனாலும் தெரியுது
வெளிச்சம். – அது எது?
சூரியன்





## எது சிறந்தது?

பாலைவனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த ஒருவன் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் மயங்கி விழும் நிலைக்கு வந்து விட்டான். தாகத்தால் உயிர் போய்விடுமோ என்று நினைத்த போது தூரத்தில் ஒரு குடிசை போல ஏதோ ஒன்று தெரிந்தது. மிகவும் கஷ்டப்பட்டு அவன் அந்த இடத்திற்கு சென்று விட்டான். அங்கே ஒரு கையால் அடித்து இயக்கும் அடிகுழாய் ஒன்றும், அதன் அருகில் ஒரு சிறு வாளியில் தண்ணீரும் இருந்தன. அந்த அடி குழாயில் ஓர் அட்டை தொங்கிக் கொண்டிருந்தது. அந்த அட்டையில், 'இங்குள்ள சிறு வாளியில் உள்ள தண்ணீரை அந்த அடி குழாய்க்குள் ஊற்றி விட்டு அடித்தால் தண்ணீர் வரும். தாங்கள் தேவையான தண்ணீரைக் குடித்து விட்டு மீண்டும் வாளியில் தண்ணீரை நிரப்பி வைத்து விட்டுச் செல்லவும்' என்று எழுதப்பட்டிருந்தது. அந்த அடி குழாயோ மிகப் பழையதாக இருந்தது. அது இயங்குமா, தண்ணீர் கிடைக்குமா என்பது சந்தேகமாக இருந்தது. அது இயங்கா விட்டால் இந்தச் சிறு வாளியிலிருக்கும் தண்ணீரும் நாம் அருந்தாமல் வீணாகி விடும். அதற்குப் பதிலாக அந்தத் தண்ணீரைக் குடித்து விட்டால் தாகமும் தணியும். நாமும் உயிர் பிழைத்துக்கொள்ளலாம் என்று எண்ணம் மேலோங்கியது. அவன் யோசித்தான். தண்ணீரைக் குடித்து விடுவதே புத்திசாலித்தனம் என்று அறிவு கூறியது. ஒரு வேளை அதில் எழுதி வைத்திருப்பது போல் அந்த அடி குழாய் இயங்குவதாக இருந்து அது இயங்கத் தேவையான அந்தத் தண்ணீரைக் குடித்து விட்டால், இனி தன்னைப் போலத் தாகத்தோடு வருபவர்களுக்கு அது பயன்படாமல் போய்விடுமே... நாம் இதற்குக் காரணமாகி விடுவோம் என்று மனச்சாட்சி எச்சரித்தது.

அவன் மனச்சாட்சி முடிவுக்குப் பின் யோசிக்கவில்லை. அந்த அடி குழாயில், சிறு வாளியிலிருந்த தண்ணீரை ஊற்றி விட்டு அதை அடித்து இயக்க ஆரம்பித்தான். தண்ணீர் வர ஆரம்பித்தது. தாகம் தீர, வேண்டிய அளவு தண்ணீரைக் குடித்தான். அந்தச் சிறு வாளியிலும் தண்ணீரை நிரப்பி வைத்தான். இப்போது அவன் மனமும் நிறைந்திருந்தது. நாம் நம்முடைய வாழ்க்கையில் அனுபவித்ததை அடுத்து வரும் தலைமுறையினரும் பயன்படுத்த விட்டுச் செல்ல வேண்டும். இன்று கிடைக்கும் நன்மை அனைத்தையும் நாமே முழுவதும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற பேராசை இருக்கக் கூடாது.



# விளம்பரங்கள்



## சந்திரனில் வாழ்விடங்கள்

விண்வெளிக்கு விண்வெளி ஆய்வாளர்களை அனுப்பி ஆய்வுகளை மேற்கொள்ளுதல் என்பதற்கு அப்பால், அங்கு மனிதக் குடியேற்றங்களை நிறுவுதல், சுற்றுலாத் தலங்களை அமைத்தல் போன்ற விடயங்களை முன்னெடுப் பதற்கான சாத்தியங்கள் குறித்தும் ஆராயப்பட்டுவருகின்றன. சந்திரனில் மனிதக் குடியேற்றங்கள் ஏற்படுத்தும் எண்ணம் ஈடேற வேண்டுமெனில், அதற்கான அனைத்து விரிவோக நடவடிக்கைகளும் புவியிலிருந்தே மேற்கொள்ளப்படவேண்டும். எனவே, பாதுகாப்பான வாழ்விடக் கட்டமைப்புக்களைக் கட்டியெழுப்புவதற்கு அனைத்துப் பொருள்களையும் புவியிலிருந்து கொண்டு செல்வதென்பது பெரும் செலவை ஏற்படுத்துவதாக அமையும். ஆதலால், சந்திரனின் மேற்பரப்பில் காணப்படும் மூலப்பொருள்களை முப்பரிமாணப் பதியி ஊடாக தேவைக்கு ஏற்ற வடிவமாக மாற்றியமைத்து, புவியிலிருந்து கொண்டு செல்லப்படும் அவசியமான கட்டமைப்புப் பொருள்களுடன் இணைத்து, சந்திரனில் உட்கட்டுமானங்களைக் கட்டியெழுப்புவது தொடர்பாக ஐரோப்பிய விண்வெளி ஆய்வாளர்கள் சிந்தித்து வருகின்றனர்.




## பேஸ்புக்கை வீழ்த்திய வாட்ஸ் அப்

இன்றைய இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையுமே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக் கிறது சமூக வலைத்தளங்கள்.

எதற்கெடுத்தாலும் பேஸ்புக் என்ற நிலை தான் உள்ளது, பேஸ்புக் கணக்கு இல்லாமல் யாருமே இல்லை என்று சொல்லலாம்.

ஆனால் இதில் அதிர்ச்சியான விடயம் என்னவென்றால் இன்ஸ்டன்ட் மெசேஜிங் அப்ளிகேஷன்களால்(Instant Messaging Application) அதாவது வாட்ஸ் அப், வீ சாட் போன்றவைகளால் பேஸ்புக் பயன்பாடு குறைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இலாபம் கணிசமாக குறைந்துள்ளது. மேலும் ஸ்மார்ட் போன் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், தற்போது 700 மில்லியன் பயனாளிகளைக் கொண்டுள்ள வாட்ஸ் அப் இன்னமும் வளர்ச்சி அடையும் என கூறப்பட்டுள்ளது.


**Personal Class** புதிய ஆண்டிற்கான தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English Class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். ஏனைய பாட ஆசிரியர்களும் உண்டு.
தொடர்பு: தாவடி தெற்கு, தாவடி. 072 351 5596
(54568) (4.6.3)

**வீட்டில் பயன்படுத்தப்படும் தியேட்டர் HOME THEATER விற்பனைக்குண்டு**
HOME THEATER ஒன்று சில மாத பாவனையின் பின் விற்பனைக்குண்டு.
தொடர்பு: K.THANGERAJAH
077 543 9914,
(54575) (4.6.3)

**செல்லா சினிமா யாழ்ப்பாணம்**
விஜய், சமந்தா நடிப்பில்
**கத்தி**
(தினசரி 4 காட்சிகள்)
10.30,2.30,6.30, 9.30



எமது செல்லா சினி திரையரங்கில் உங்களது விளம்பரங்களை காட்சிப்படுத்த அழையுங்கள்
077 326 6949

**பெயர் மாற்றம்**
மல்லாவி, முல்லைத்தீவைச் சேர்ந்த கார்த்திகேசு பசுபதி அம்மா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை கார்த்திகேசு கமலா எனப் பெயர்மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
(54572)(12.3) கார்த்திகேசு கமலா

**விற்பனைக்கு**
2000ஆம் ஆண்டு இலங்கையில் முதல் பதிவு செய்யப்பட்ட 1800 CC குதிரைவலு கொண்ட TOYOTA CARINA கார் உடனடி விற் பனைக்கு உண்டு. (தேவைப்படின் லீசிங் வசதியுடன்)
தொடர்பு:
0771 397969, 0772 451654

**மணமக்கள் தேவை**
- யாழ்.R.C, அரச பல் வைத்தியர், 1983, உயரம்5' 3" மணமகனுக்கு அரச பணி, வீடு, நல்ல குடும்பப் பின்னணி உள்ள மணமகளும், (பிறப்பெண் ஏழு விரும்பத்தக்கது)
- யாழ்.R.C, அரச காட்டிலாகா (R.F.O), 1984, உயரம்5' 2", மணமகளுக்கு தகுதியான அரசபணியுடைய மணமகனும் (வீடு, சீதனம் வழங்கப்படும்) தேவை.

தொடர்பு: புனித சூசையப்பர் திருமணசேவை.
ப.இ- DS/VN/PR/112,
077 967 2462
(54540) (12.3)

**அலங்கார மீன்கள் விற்பனைக்கு**
நல்ல தரமான அலங்கார மீன்கள் மற்றும் தரமான கிளிசறின் (சீமைக் கிளுவை) கதியால்கள் பளைப் பிரதேசத்தில் விற்பனைக்குள்ளன.
Kay Farm (Pvt) Ltd
தொடர்பு: 078 880 3483, (54569) (4.6.3)
077 235 1028, 021 492 4233

**நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கம் (வ/து)**
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
வெற்றுச்சாக்கு / வெற்று உரப்பை
விற்பனைக்கான கூறுவிலை கோரல்
எமது சங்கத்தில் வெற்றுச்சாக்கு, வெற்று உரப்பை என்பன விற்பனைக்குள்ளன. தேவைப்படுவோர் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று அதற்கான கூறுவிலையினை குறிப்பிட்டு 16.12.2014 இற்கு முன் காரியாலயத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தலைவர்
01.12.2014 (சி/17965) (12.3) தொ.இல: 021 222 2143

பல வர்ணங்களிலான தரமான கிரணைட் வகைகளைப் பெற்றுக்கொள்ள...
கிரணைட் வேலைகள் செய்து தரப்படும்.
வணக்கத் தலங்களுக்கு விசேட விலைக்கழிவு.
**metro granite**
(சி/17943)(4.3.6)
#212, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 0212224888

**CAPS**
(Canadian Academy of Professional Studies)
52,Palaly Road,Thirunelvely Jaffna. (Near Sampath Bank)



IELTS தேர்வு
NURSING ENGLISH MEDIUM (Canadian Curriculum)
TEACHER TRAINING IN ENGLISH
மேற்படி கற்கைநெறிகளைத் தொடரும் வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.
முழுநேரம்: 9.00 - 1.00 (திங்கள் -வெள்ளி) பகுதிநேரம்: 9.00 - 4.00 (சனி.ஞாயிறு)
- சிறந்த வளவாளர்களால் விரிவுரைகள் வழங்கப்படும்
- கற்றல் கையேடுகள் வழங்கப்படும்
- அங்கீகரிக்கப்பட்ட கற்கை சான்றிதழ் வழங்கப்படும்.

விண்ணப்ப கடைசித் திகதி : 14.12.2014 | வகுப்புக்கள் ஆரம்பம் 15.12.2014
தொடர்புகளுக்கு:
Srilanka : 077 386 7458 | Canada : 416 986 9554

**பகிரங்க நெல் விற்பனை**
எமது சங்கத்திடம் சிவப்பு நெல் 15,000kg விற்பனைக்குள்ளது. தேவைப்படுவோர் தங்களுக்குப் பொருத்தமான கூறுவிலை இட்டு ஒட்டிய கடித உறையில் 10.12.2014 மாலை 4.00 மணிக்கு முன் சங்க தலைமைக்காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். (சி/17964) (12.3)
பொதுமுகாமையாளர்,
கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம், முல்லைத்தீவு.

இந்தியா செல்லும் ஐயப்பன் அடியவர்களுக்கு விசேட விலைக் கழிவு.
0777721235
- AIR TICKETS FOR ALL COUNTRIES
- HOLIDAY PACKAGES

IATA 18 YEARS
**AIRMARK**
Travels & Tours
#212, PALALY ROAD, JAFFNA. 0212224777

**திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்**
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
PLAY GROUP மாணவர்களுக்கான அனுமதி
எமது முன்பள்ளியில் Play Group அனுமதி வழங்கப்படுகின்றது.
மழலைகளுக்கு விளையாட்டு மூலமாக கற்றல் செயற்பாடுகள் நடைபெறும். அனுமதி பெற விரும்புவோர் 15.12.2014 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
அ.பஞ்சலிங்கம், (முன்னாள் அதிபர் யா/இந்துக் கல்லூரி) தலைவர்.
ப.பாலமுகுந்தன், நிறைவேற்று இயக்குநர்.
TP: 021 205 2262, 077 386 7458
(54560) (12.3)

# உலகச் செய்திகள்

## தலிபான்கள் புதிய போர் வியூகம் பறவைகளிலும் வெடிகுண்டுகள்



காபூல், டிசெ.3
ஆப்கானிஸ்தானில் இதுவரை மனித வெடிகுண்டுகளைப் பயன்படுத்தி வந்த தலிபான்கள் தற்போது பறவைகளை வெடிகுண்டுப் படையாக பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.
சில தினங்களுக்கு முன்னர் ஆப்கானிஸ்தானின் பார்யப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமாக ஒரு பறவை பறந்தது. அந்தப் பறவையை ராணுவ வீரர்கள் சுட்டு வீழ்த்தினர். படுகாயங்களுடன் கீழே விழுந்த பறவையை பாதுகாப்புப் படையினர் சோதனை செய்தனர். அப்போது அந்தக் காட்டுப் பறவையின் தலையில் ஜிபிஎஸ் கருவி, சிறிய ரக கமரா ஆகியவை பொருத்தப்பட்டிருந்தன.
அந்தப் பறவையின் இறகுகளில் கட்டப்பட்டிருந்த வெடிகுண்டை ரிமோட்தானியங்கிமூலம்வெடிக்கச் செய்ய தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர். ஆனால் அதற்கு முன்பாகவே பாதுகாப்புப் படையினர் பறவையை சுட்டு வீழ்த்திவிட்டதால்உயிரிழப்புக்கள்தவிர்க்கப்பட்டன.
இதுகுறித்து ஆப்கானிஸ்தான் பொலிஸ் மூத்த அதிகாரி அகமதுல்லா கூறியபோது, "தலிபான் தீவிரவாதிகள் இதற்கு முன்பு கழுதைகளை மனித வெடி குண்டுப் படையாகப் பயன்படுத்தியுள்ளனர்.
இப்போது முதல்முறையாக பறவை மூலம் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்த முயற்சி செய்துள்ளனர், அதேபோல் ஏராளமான பறவைகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு புதிய வெடிகுண்டுப் படையை உருவாக்கியிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது" என்று தெரிவித்தார். தலிபான் தீவிரவாதிகளின் இந்தப் புதிய தாக்குதல் முறை ஆப்கானிஸ்தானில் மட்டுமின்றி சர்வதேச அளவிலும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (வ)



## டுபாயில் அமைகிறது உலகின் மிகப் பெரிய விமான நிலையம்

டுபாய், டிசெ.3
உலகின் மிகப்பெரிய, அதிநவீன விமான நிலையம் டுபாயில் 3200 கோடி அமெரிக்க டொலர் செலவில் உருவாகவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.
உலகின் மிகவும் பரபரப்பான இரண்டாவது விமான நிலையமாக இயங்கிவரும் டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சுமார் 30 கிலோமீற்றர் தூரத்தில்உள்ளபகுதியில்மற்றொரு சர்வதேச விமான நிலையத்தை புதிதாக கட்ட டுபாய் அரசு ஏற்பாடு செய்து வருகிறது.
32 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் உருவாக்கப்படும் இந்த விமான நிலையத்தை சுமார் நான்கரை கிலோ மீற்றர் நீளமுள்ள 5 ஓடுபாதைளறகளுடன் அமைக்க திட்ட மிடப்பட்டுள்ளது.
இந்த விமான நிலையம், 2020 ஆம் ஆண்டு 120 மில்லியன் பயணிகளையும், 12 மில்லியன் தொன் சரக்குகளையும் கையாளும்திறன் கொண்டதாகவும், சுமார் 200 விமானங்களை ஒரே நேரத்தில் நிறுத்தி வைக்கும் வகையிலும் உருவாக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது. (வ)



## அக்னி-4 வெற்றிகரமாக விண்ணுக்கு

அணு ஆயுதத்தைச்சுமந்துசென்று 4 ஆயிரம் கி.மீ. தொலைவில் உள்ள இலக்கைத் துல்லியமாக்த் தாக்கும் அக்னி-4 ஏவுகணை நேற்று வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.
ஒடிசா மாநிலம் வீலர் தீவுகளில் இருந்து ஏவப்பட்ட அக்னி-4 அனைத்துப் பரிசோதனை நிலைகளையும் வெற்றிகரமாகக் க்டந்தது.தனது முழுதிறன்தொலைவையும் ஏவுகணை கடந்தது என்று ஒருங்கமைந்த சோதனைக்கள இயக்குநர் எம்.வி. கே.வி.பிரசாத் தெரிவித்தார்.
ஏற்கெனவே இந்த ஏவுகணை 3 முறை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது. தற்போது 4 ஆவது முறையாக குறித்த பரிசோதனை வெற்றி பெற்றுள்ளது. (வ)

## இந்தியா தயாரித்த அணு ஆயுத நீர்மூழ்கி விரைவில் கடற்படையில்



கொச்சி, டிசெ.3
கடற்படையில் விபத்துகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக இந்திய கடற்படைத் தலைமை தளபதி ஆர்.கே. தோவன் இந்திய ஊடகமொன்றுக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியில் தெரிவித்தார். கடற்படை தினம் நாளை வியாழக்கிழமை கொண்டாடப்பட உள்ள நிலையில் நாட்டின் தலைமைக் கடற்படை தளபதி ஆர்.கே. தோவன் இந்திய ஊடகம் ஒன்றுக்கு அளித்த சிறப்புப் பேட்டி வருமாறு:
"இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் எமது கடற்படையின் பலத்தை நிலை நிறுத்தவும், கடற்படைக்கு உதவும் வகையிலும் ருக்மிணி என்ற செயற்கைக் கோள் கடந்தாண்டு ஏப்ரலில் விண்ணில் ஏவப்பட்டது. அந்தச் செயற்கைக்கோள் முற்றிலும் கடற்படையின் பயன்பாட்டுக்காக ஏவப்பட்ட ஒன்றாகும். ருக்மிணி செயற்கைக்கோளால் கடற்படைக்கு மிகுந்த பயன் கிடைக்கத் தொடங்கியுள்ளது.
இந்தியக் கடற்படையில் கப்பல்கள், நீர் மூழ்கி கப்பல்கள், போர் விமானங்கள் அவ்வப்போது இணைக்கப்பட்டுவருகின்றன.
இந்தியப் பெருங்கடல் ரோந்துப் பணிகளுக்காகக் கூடுதலாக நவீன இலகு ரக ஹெலிகள் தேவைப்படுகின்றன. இப்போது. தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளுக்காக இந்தவகை ஹெலிகளைப் பயன்படுத்தி வருகிறோம். எதிர்காலங்களில் நீரை உறிஞ்சும்திறன் கொண்ட ஹெலிகளும் எங்களுக்கு தேவைப்படுகின்றன. இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதலாவது அணு ஆயுத நீர்மூழ்கி போர்க்கப்பலான 'அரிகாந்த்' விரைவிலேயே தனது துறைமுக சோதனைகளை முடித்துக் கொண்டு கடலுக்குள் வர உள்ளது. முறையான நடைமுறைகளைப் பின்பற்றாததுதான் கடந்த ஓராண்டாக கடற்படைக் கப்பல்களில் விபத்துகள் ஏற்படுவதற்குக் காரணம். கப்பல் அல்லது நீர்மூழ்கி கப்பலின் சராசரி ஆயுள்காலம் 30 முதல் 35 வருடங்களாகும்"– என்றார். (வ)

## 10 வருட சிறைத்தண்டனை விதித்த இலங்கை மீனவரை விடுவிக்கவும்

### இலங்கை - இந்தியாவுக்கான மீன்பிடி ஆலோசகர்

கொழும்பு, டிசெ. 3
போதைப்பொருள் குற்றச்சாட்டில் 10 வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ள இலங்கை மீனவரை விடுதலை செய்வதற்கு இந்திய மத்திய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை இந்தியாவுக்கான மீன்பிடி ஆலோசகர் எஸ்.பி. அந்தோனி முத்து தெரிவித்துள்ளார்.
2011 ஆம் ஆண்டு தென்பகுதியான தெவிநுவர பகுதியைச் சேர்ந்த நிகால் விமலரட்ண என்ற மீனவர் போதைப் பொருள் கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.
கைது செய்யப்பட்ட மீனவருக்கு நீதிமன்றால் 10 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தற்போது சிறைத்தண்டனை 3 வருடங்களைக் கழிந்துள்ள நிலையில் மீனவர் விடுவிப்புக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.
போதைப்பொருள் குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மூவரையும் பொது மன்னிப்பில் இலங்கை விடுவித்துள்ள நிலையில் இலங்கை மீனவரையும் இந்தியா விடுதலை செய்ய வேண்டும். இது தொடர்பான கோரிக்கை தமிழக மற்றும் மத்திய அரசுக்கு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (வ-ா)

# உலகச் செய்திகள்



## 2 ஆம் உலகப் போரின் குண்டை செயலிழக்கச் செய்ய 8,500 பேர் ஜேர்மனியில் வெளியேற்றம்

ஜேர்மனியில் கட்டுமானப் பணியின்போது கண்டெடுக்கப்பட்ட 2ஆம் உலகப் போர்க் காலவெடிகுண்டொன்று செயலிழக்கச் செய்யப் பட்டது. இதனால் அந்த இடத்திலிருந்து பாதுகாப்பு முன்னெச்சரிக்கையாக சுமார் 8,500 பேர் வெளியேற்றப்பட்டனர்.

ஜேர்மனியின் மைன்ஸ் நகரில் நடந்து வரும் கட்டுமானப் பணியிடம் ஒன்றில் 3 மீற்றர் நீளம், சுமார் 1.8 தொன் எடைகொண்ட வெடிகுண்டொன்று கண்டெடுக்கப்பட்டது.

அதனை ஆய்வு செய்த நிபுணர்கள் வெடிகுண்டு இயங்கு சக்தியுடன் இருப்பதாகவும், மேலும் அது எதிர்பாராத நிலையில் வெடித்தால் மிகப்பெரிய ஆபத்து உண்டாகும் என்றும் எச்சரித்தனர். அதனை அடுத்து வெடிகுண்டைச் செயலிழக்க செய்யும் பணிக்காக அந்தப் பகுதியில் உள்ள ரைன் ஏரியின் சுற்றுவட்டாரத்தில் வசித்து வரும் சுமார் 8,500 பேர் வெளியேற்றப்பட்டனர். (வ)

# ஐ.எஸ்ஸிடம் அணு ஆயுதம்?

## பிரிட்டன் ஊடகம் அதிர்ச்சித் தகவல்

லண்டன், டிசெ.3

இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாதிகளிடம், அணு குண்டுகளைத்தயாரிக்கஉதவும்கதிர் வீச்சுப் பொருள்கள் சிக்கியிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதுகுறித்து பிரிட்டன் ஊடகங்களில் வெளியான தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஓகஸ்ட் மாதம் ஈராக்கின் மொசூல் நகரை ஐ.எஸ். அமைப்பினர் கைப்பற்றிய போது, அந்த நகரிலுள்ள பல்கலைக்கழகத்திலிருந்து கதிர் வீச்சுப் பொருளை அவர்கள் கைப்பற்றியதாகத் தெரிகிறது.

தங்களிடம் கதிர் வீச்சுப் பொருள் சிக்கியிருப்பதாகவும், அதனைக் கொண்டு அணுக் கதிர் குண்டுகளை (வழக்கமான வெடிமருந்துடன்அணுக்கதிர்வீச்சுப்பொருள்களைக் கலந்து உருவாக்கப்படும் குண்டு) உருவாக்க இருப்பதாகவும் சமூக வலைத்தளங்களில்ஐ.எஸ்.ஸில்இணைந்துள்ள பிரிட்டன் வெடிகுண்டு நிபுணர் ஹமர்யூன் தாரிக் கூறியுள்ளார்.

தாங்கள் அணு ஆயுதம் ஒன்றைத் தயாரித்துள்ளதாக வலைத்தளங்களில்ஐ.எஸ்.அமைப்பினர் கூறிக் கொள்கின்றனர்.

ஐ.எஸ்.ஸிடம் அணுக்கதிர் குண்டுகள் இருந்தால், அவற்றை ஈராக், சிரியாவில்தான் அவர்கள் பயன்படுத்துவார்கள். மேற்கத்திய நாடுகளுக்கு எடுத்துச் சென்று வெடிக்கச் செய்ய வாய்ப்பில்லை. இவ்வாறு பிரிட்டன் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## அபரிமிதமான கனிமத்துக்கு 'பிரிட்க்மனைட்' என்று பெயர்

### நீண்டநாள் ஆய்வுக்கு கிடைத்தது வெற்றி

இதுவரைபெயர்சூட்டப்படாத பூமியின் மிக அபரிமிதமான கனிமத்துக்கு 'பிரிட்க்மனைட்' என்று விஞ்ஞானிகள் பெயர் சூட்டியுள்ளனர். பெர்ஜி பிரிட்க்மேன் என்ற பிரபல புவியியல் அறிஞரின் நினைவாக இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. பூமியின் மொத்த அளவில் 38 சதவீதமும், பூமியின்கீழ்அடுக்கில் 70 சதவீதம் வரையிலும் பிரிட்க்மனைட் உள்ளது. இந்தக்கனிமத்தை நன்றாக அறிந்து கொள்ளும் வகையில் மிக அழுத்தப் பரிசோதனைகள் செய்வதில் பெர்ஜி பிரிட்க்மேன் முன்னோடியாக விளங்கினார். எனவே இந்தக் கனிமத்துக்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.



பிரிட்க்மனைட் மிகவும் அடர்த்தியான மக்னீசியம் அயர்ன் சிலிகேட்டால் ஆனது. இதுவரை இக்கனிமம் பெரோவ்ஸ்கைட் என்று அழைக்கப்பட்டு வந்தது. சர்வதேச கனிமவியல் சங்கத்தின் விதிகளின்படி முறையான பெயர் வைக்கப்படாமல் இருந்தது. (வ)

## 9 வயதுச் சிறுமிக்கு கட்டாயத் திருமணம்

சிட்னி, டிசெ.3

ஒன்றும் அறியாத 9 வயது சிறுமியொருத்திக்கு, வெளிநாட்டில் திருமணம் செய்து வைக்கமுயன்றசம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆஸ்திரேலியாவின் சிட்னியைச் சேர்ந்த 9 வயதான சிறுமிக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.



குறித்த சிறுமி ஆஸ்திரேலியாவில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளதாக மகளிர் சுகாதார சேவைகளுக்கான அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

அமைப்பின் உத்தியோகத்தர்கள் சிறுமியின் தாயிடம் கலந்துரையாடியுள்ளனர். எனினும் அவரிடம் இருந்து எந்தவொரு தகவலும்கிடைக்கவில்லைஎன்று தெரிகிறது.

சிறுமியைமத்தியகிழக்குநாடொன்றில் திருமணம் செய்து வைக்கத் திட்டமிட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

பேசித் தீர்மானிக்கப்படும் திருமணங்களின் பாதுகாப்பை உறுதி செய்யக்கூடிய திட்டம் ஒன்றை மத்திய அரசு ஆரம்பித்துள்ளது.(வ)



## கடத்தப்பட்ட கொலம்பிய ராணுவ அதிகாரி விடுவிப்பு

கொலம்பியாவில் இரு வாரங்களுக்குமுன்னர்கடத்தப்பட்ட இராணுவ அதிகாரி உள்ளிட்ட மூவரைப் பார்க் கிளர்ச்சியாளர்கள் விடுவித்துள்ளனர். இராணுவ அதிகாரி ரூபென் டாரியோ அல்ஜட் மற்றும் இரு ராணுவ வீரர்களையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகளிடம் கிளர்ச்சியாளர்கள் கையளித்தனர்.

விடுவிக்கப்பட்ட மூவரும்மெடெல்லின் நகர் அருகே உள்ள இராணுவத் தளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்கள் கொலம்பிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜுயன் கார்லோஸ் பின் ஜோன்லை சந்தித்துப் பேசினர். கிளர்ச்சியாளர்கள் தங்கள் பிடியில் இருந்தவர்களை விடுவித்து இருப்பதன் மூலம் மீண்டும் அமைதிப் பேச்சுக்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளதாக ஜனாதிபதி சாண்டோஸ் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இருதரப்பு போர்நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டால்தான் பேச்சுக்கு உடன்படுவோம் என்று கிளர்ச்சியாளர்கள் தரப்பு அறிவித்துள்ளது.

கடந்த 16 ஆம் திகதி அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இராணுவ அதிகாரி ரூபென் உள்ளிட்ட மூவரைக் கிளர்ச்சியாளர்கள் கடத்திச் சென்றனர். இதனால் இரு வருடங்களாக நீடித்து வந்த அமைதிப் பேச்சை நிறுத்தி வைப்பதாக அரசுத்தரப்பு அறிவித்திருந்தது. (வ)

## 5 தொன் வெடிபொருள் பாகிஸ்தானில் பறிமுதல்

கராச்சி, டிசெ.3

பாகிஸ்தானில் பதற்றம் நிறைந்த பலூசிஸ்தான் மாகாணத்தில் 5தொன் நிறையுள்ள வெடிபொருள்களை எடுத்துச் சென்ற லொறி ஒன்று நேற்று முன்தினம் பறிமுதல் செய்யப்பட்டது.

பலூசிஸ்தான் மாகாணத் தலைநகர் குவெட்டாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறியைப் பாதுகாப்புப் படையினர் தடுத்து நிறுத்திச் சோதனையிட்டனர்.

அப்போது அதில் 5 தொன் வெடிபொருள்கள் இருந்தமை தெரிய வந்தது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த அந்தநாட்டு உள்துறை அமைச்சர் சர்ஃபராஸ் புக்தி, "பலூசிஸ்தான் பகுதியில் பெரும் வன்முறைநிகழ்த்தும்திட்டம்முறியடிக்கப்பட்டுள்ளது – என்றார். (வ)

# ஹொங்கொங்கில் மீண்டும் வெடித்தது போராட்டம்

## பொலிஸார் தடியடி, 40 பேர் கைது

பீஜிங், டிசெ.3

ஹொங்கொங்கில்சுமார் ஒருமாத காலம் ஓய்ந்திருந்த ஜனநாயக ஆதரவுப் போராட்டம் மீண்டும் ஆரம்பித்துள்ளது. பெரும் திரளான மாணவர்கள் நேற்று முன்தினம் அதிகாலையில் இருந்தே முக்கிய அரசு அலுவலகங்களுக்கு எதிரே கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர். ஜனநாயகத்தின் சின்னமாக அவர்கள் தெரிவுசெய்துள்ள குடையை கையில் ஏந்தியபடி ஊர்வலம் நடத்தினர்.




பொலிஸார் வைத்திருந்த தடுப்புகளை அவர்கள் தகர்க்க முயன்றனர். இதனைப் பொலிஸார் தடுத்து நிறுத்த முயன்றபோது மோதல் ஏற்பட்டது. அதையடுத்து பொலிஸார் தடியடி நடத்தினர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 40 பேர் கைது செய்யப்பட்டனர்.

போராட்டக்காரர்களில் பலர் முக்கிய வீதிகளில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். அவர்களையும் பொலிஸார் தடியடி நடத்திக் கலைத்தனர்.

சீனாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஹொங்கொங்கில் முழுமையாக ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று போராட்டம் நடைபெற்று வருகிறது. முன்னதாகக் கடந்த செப்டம்பர், ஒக்டோபர் மாதங்களிலும் இதேபோன்று போராட்டம் நடைபெற்றது. அப்போதும் பொலிஸார் கடும் நடவடிக்கை எடுத்து ஆர்ப்பாட்டத்தை ஒடுக்கினர். தற்போது சுமார் ஒரு மாத காலத்துக்குப் பின்னர் மீண்டும் போராட்டம் ஆரம்பித்துள்ளது. (வ)

## உடல் எடையைக் குறைக்கும் பழங்கள்




**பப்பாளிப்பழம்:**

பப்பாளிப்பழத்தில் கொழுப்பு, கலோரிகள் மிகவும் குறைவாக இருப்பதால், உணவுக் கட்டுப்பாட்டின்போது பப்பாளிப்பழத்தைச் சேர்த்துக் கொண்டால், உடல் எடை குறைவதுடன், வயிற்றுப் பிரச்சினைகளும் தீரும்.



**முந்திரிகை வற்றல்:**

முந்திரிகை வற்றலில் உள்ள சிற்றிக் அமிலம் உடலில் உள்ள கொழுப்புகளைக் கரைத்து விடுகிறது. மேலும் உடலில் தங்கியுள்ள நச்சுப் பொருள்களையும் வெளியேற்றிவிடும்.




**மாம்பழம்:**

பலரும் விரும்பிச் சாப்பிடும் மாம்பழத்தில் எண்ணற்ற நன்மைகள் அடங்கியுள்ளன. உடல் எடையைக் குறைக்க விரும்புவோருக்கு உகந்த பழம் இது.




வயதான காலத்தில், மென்று சாப்பிட முடியாது என்று பலரும் கஞ்சி எடுத்துக் கொள்கின்றனர்; அவர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்து கிடைப்பதில்லை. பல்வேறு நோய்களுக்கு மாத்திரைகள் சாப்பிடும் போது, ஒரு சில மாத்திரைகளால், ஊட்டச்சத்தை, முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படும். 'நான் சுத்த சைவம்' எனக், கூறுபவர்களில் சிலர், பாலை விரும்பிக் குடிப்பதில்லை. இதனால், 'விற்றமின் பி 12' பாதிப்பால், அனீமியா பாதிப்பு வரும். நரம்புப் பாதிப்பால், கால், கை உடலில் ஊசி குத்துவதுபோன்றவலி ஏற்படும்; மரத்து போகவும் கூடும் தொடர்ந்து மதுப் பழக்கம் உள்ளோருக்கு நரம்புத் தளர்ச்சியால் கை, கால் நடுங்கும். நெல்லிக்காய், கொய்யாப்பழம், கீரை வகைகள், பால், அசைவ உணவுகள், கடலை வகைகள், கார்டன் கிரஸ் விதைகள், அவல், ஓட்ஸ், ஈரல், ஆட்டு இரத்தம், கேழ்வரகு என்பவற்றை எடுத்துக் கொள்ளலாம். எதையாவது ஒன்றைத் தொடர்ந்து சாப்பிடுவது சரியில்லை. 'இது எனக்குப் பிடிக்காது, அது பிடிக்காது' என ஒதுக்கக் கூடாது. ஒவ்வொன்றிலும், ஒவ்வொருவிதமான ஊட்டச்சத்து உள்ளதால், எல்லாவற்றையும் கலந்து, சரிவிகித உணவாகச் சாப்பிடலாம். இந்த நடைமுறையைப் பின்பற்றினால், ஊட்டச்சத்து குறைபாட்டில் இருந்து தப்பிக்க முடியும்.

## உணவின் அவசியத்தை உணருங்கள்



## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | 9 | | | | 2 | 7 |
| | | | 8 | 2 | | | | |
| | | 3 | 7 | 1 | | | 5 | 8 |
| 8 | | 7 | 2 | | | | | 5 |
| | 6 | 4 | | 5 | | 9 | 8 | |
| 3 | | | | | 1 | 7 | | 2 |
| 7 | 9 | | | 6 | 2 | 5 | | |
| | | | | 9 | 8 | | | |
| 5 | 4 | | | | 3 | | | 9 |

**நாளை**

**கார்த்திகை-18**
**வியாழக்கிழமை**
**04.12.2014**

திதி:திரயோதசி
மு.இ.07.16 வரை
நட்சத்திரம்: பரணி
மு.இ.11.57
சுபநேரம்:
07.45-09.15 வரை
இராகுகாலம்:
01.45-03.15 வரை
பிரதோச விரதம்

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 5 | 8 | 7 | 4 | 9 | 1 | 3 |
| 3 | 4 | 7 | 1 | 9 | 2 | 8 | 6 | 5 |
| 9 | 8 | 1 | 5 | 6 | 3 | 4 | 7 | 2 |
| 4 | 3 | 9 | 6 | 5 | 8 | 7 | 2 | 1 |
| 1 | 5 | 8 | 9 | 2 | 7 | 6 | 3 | 4 |
| 6 | 7 | 2 | 3 | 4 | 1 | 5 | 9 | 8 |
| 7 | 1 | 3 | 4 | 8 | 9 | 2 | 5 | 6 |
| 5 | 2 | 4 | 7 | 3 | 6 | 1 | 8 | 9 |
| 8 | 9 | 6 | 2 | 1 | 5 | 3 | 4 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பபடு கையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### மற்றவர்களிடமிருந்து நல்லவற்றைக் கற்றுக்கொள்ளுங்கள்

ஒவ்வொருவருடைய எதிர்காலமும் அவர்களது கைகளிலேயே தங்கியிருக்கிறது. எப்பொழுதும் மற்றவர்களைப்போல் இருக்க முயற்சிக்காதீர்கள். இது ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய மிகப் பெரிய பாடம். மற்றவர்களைப் போல் நடித்து நாம் பண்பும் நாகரிகமும் பெற முடியாது. ஒருவன் தன்னை ஓர் அரசனைப் போல் ஆடை அணிந்து அழகு பார்க்கலாம். ஆனால் அது அவனை ஓர் அரசனாக்குமா? இவை எல்லாம் ஒரு வேஷமே. வெறும் தோற்றத்தில் மாத்திரம் ஒருவனைப் போலிருக்க பிரயத்தனம் செய்வது எந்தவிதமான முன்னேற்றத்தையும் உண்டாக்காது. நாம் எப்பொழுதும் மற்றவர்களின் ஆதிக்கத்தின் கீழ் சுதந்திரம் இல்லாது இருந்தால் எமது சுயேச்சையை இழந்து விடுவோம். மற்றவர்களின் உத்தரவை எதிர்பார்த்து அதற்கு கீழ்ப்பட்டு வாழ்பவர்கள் தங்களுக்கு தாங்களே சுயமாகச் சிந்தனை செய்து முடிவுக்கு வரும் சக்தியை இழந்து விடுவார்கள். ஆகவே எதனையும் முயற்சி செய்து சாதிக்கப் பழகுங்கள். மற்றவர்களிடம் இருக்கும் நல்ல அம்சங்களை அவசியம் ஏற்றுக் கொள்ளுங்கள். மற்றவர்களிடம் நாம் கற்றுக் கொள்வதற்கு நிறைய விடயங்கள் இருக்கின்றன. ஒரு விதையை நிலத்தில் போடுகிறோம். அதன் வளர்ச்சிக்கு அவசியமானவற்றை அளிக்கின்றோம். அது செடியாகி மரமாகி றது. அது மண்ணாகவோ, காற்றாகவோ, நீராகவோ மாற முடியாது. அது தனது இயல்பிலேயே வளர்ந்து தனக்கு வேண்டிய அனைத்தையும் பெற்று ஒரு பிரமாண்டமான மரமாகிறது. அவ்வாறே நீங்களும் ஆகுங்கள். நாம் அவசியம் மற்றவர்களிடம் பலவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டும். கற்றுக் கொள்ளவேண்டியவற்றை கற்றுக் கொள்ள மறுக்கும் மனிதன் இறந்தவனுக்கு ஒப்பானவன்.

# சனி பெயர்ச்சி உங்களுக்கு எப்படி? 02.11.2014 - 2017



## 27 நட்சத்திரங்கள், 12 ராசிகளுக்குமான பலன்களும் பரிகாரங்களும்

### துலாம்



***துலா ராசி நேயர்களே!***

இயற்கையாகவே அழகு டையவர்களாக இருந்தாலும் அத்துடன் செயற்கை அழகையும் சேர்ந்து மிகவும் அழகாக தோற்றம் அளிப்பீர்கள். ஆடை, அணிகலன்கள் அணிவதில் அலாதிபிரியம் கொண்டவர்கள். இவர்களுக்கு சிறு வயதில் சிறு சிறு கண்டங்கள் ஏற்பட்டாலும் நீண்ட ஆயுளைப் பெற்றிருப்பார்கள். உதடுகள் அழகாக அமைந்திருக்கும். நேர்மையைக் குறிக்கோளாகக் கொண்டவர்கள் துலா ராசிக்காரர்கள். நீதியையும், நேர்மையையும் நிலைநாட்ட இவர்கள் விரும்புவதைப் போலவே மற்றவர்களும் இருக்க வேண்டும் என நினைப்பார்கள். அப்படி நடக்காவிட்டால் ஆத்திரம் அடைவார்கள். தராசு எவ்வளவு சிறியதாக இருந்தாலும் எவ்வாறு துல்லியமாக எடைபோட உதவுகிறதோ அதைப் போலத் தான் மற்றவர்கலளயும் எடை போட்டு வைத்திருப்பார்கள். வசீகரத் தோற்றமும் உறுதியான பேச்சாற்றலும் கொண்டவர்கள். எந்தச் சூழ்நிலையிலும் சந்தோஷமான மனநிலையைக் கொண்டவர்கள். எந்தவொரு விடயத்திலும் சிந்தித்து செயற்படும் ஆற்றல் கொண்டவர்கள். கொடுத்த வாக்குறுதியை எப்பாடுபட்டாவது காப்பாற்றிவிடுவார்கள். வாக்குச் சாதுரியம் கொண்ட இவர்களிடம் பேசி ஜெயிப்பது என்பது இயலாத காரியமாகும். வெளி வட்டாரங்களிலும், நண்பர்களிடமும் சரளமாக பேசும் இவர்கள் வீட்டில் ஒன்றுமே தெரியாதவர் போல இருப்பார்கள். எதற்கும் சளைக்காமல் பாடுபட்டவர்கள் என்பதால் தோல்விகளைக் கண்டு துவண்டு விட மாட்டார்கள்.

கடந்த இரண்டரை வருட காலமாக சனி பகவான் உமது ஜென்ம ராசியில் இருந்து வந்தார். 02.11.2014 இல் உமது ராசிக்கு 2இல் வருகிறார். ஏழரைச் சனியன் இறுதி இரண்டரை ஆண்டு ஆகும். இதனை பாதச் சனி என்பர். ஜென்மச் சனியின் காலத்தில் நடந்த தீய பலன்கள் குறையும். இங்கு வந்துள்ள சனிக்கு குருவின் பார்வை உள்ளது. குரு பார்த்த சனி குபேர யோகம் தருவார் என்பது ஆன்றோர் வாக்கு. வாக்கினால் ஜீவனம் புரிவோர் மேன்மையடைவர். குடும்பத்தில் சில சுபகாரியங்கள் நடக்கும். உமது முயற்சிகளில் தடைகள் அக லும். உமது மகன் (அல்லது) மகள் வழியில் நல்ல செய்திகள் கிட்டும்.

சனி பகவானின் 3,7,10 ஆகிய பார்வையினால் உமது ராசிக்கு 4, 8, 11, ஆகிய வீடுகளைப் பார்வை செய்வார்.

சனி பகவானின் பார்வை உமது ராசிக்கு 4ஆம் வீட்டில் பதிவதால் சில புதிய வீடு, வண்டி, வாகனம் வாங்க இடமுண்டு. இங்கு குரு பார்வையும் கிடைப்பதால் சிலர் உயர் கல்வி நிமித்தம் வெளியூர் செல்ல நேரும். மாணவர்கள் பொறியியல், மருத்துவம், கணினி போன்றவற்றில் சாதனை படைப்பர். கல்வி உதவுத் தொகை கிட்டும். போக்குவரத்து லாபம் தரும்.

சனி பகவானின் பார்வை உமது ராசிக்கு எட்டாம் வீட்டுக்கு பதிவதால் புதிய முயற்சிகளில் அபார வெற்றிகிட்டும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். எனினும் யாருக்கும் கையெழுத்து இடவேண்டாம். கணவன் மனைவிக்கு இடையில் கருத்து ஒற்றுமை தேவை. விட்டுக் கொடுத்துப் போவது விவேகமானது. மனைவியின் சேமிப்பு தக்க தருணத்தில் உதவிகரமாக அமையும்.

சனி பகவானின் பார்வை உமது ராசிக்கு 11ஆம் வீட்டில் பதிகிறது. இது இலாப ஸ்தானம் ஆகும். வரவேண்டிய நிலுவையில் உள்ள ஊதிய உயர்வு, பதவி உயர்வு கிடைக்க இடமுண்டு. விவாகரத்துப் பெற்றவர்கள் மறுமணம் புரிவர். காதலுக்கு எதிர்ப்புகள் விலகும். கல்யாணம் நடக்கும்.

13.07.2015 வரை குரு உமது ராசிக்கு 10 இல் இருப்பார். அவரது பொன்னான பார்வையினால் உமது ராசிக்கு 2, 4, 6 ஆகிய வீடுகளை பார்வை செய்வார். தன வசதி பெருகும். வீடு, வண்டி, வாகன வசதி நவீனமாகும். கடன் கணிசமாகத் தீரும். 14.07. 2015இல் குரு 11 இல் வருவதால் பெயர், புகழ் சேரும். இலாபம் மிகும். திருமணம் நடக்கும்.

தற்போது ராகு 12 ஆம் வீட்டில் இருப்பதால் இதுவரை இருந்து வந்த கடன்பிரச்சினைகள் யாவும் படிப்படியாக குறையும். எடுக்கும் முயற்சிகள் யாவற்றிலும் எதிர் நீச்சல் போட்டாவது முன்னேறிவிடுவீர்கள். கேது 6ஆம் வீட்டில் இருப்பதால் ஆன்மிக தெய்வீக காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**உடல் நிலை–**

உடல் நிலையில் சிறு சிறு இடைஞ்சல்கள் தோன்றி மறையும். மனைவி பிள்ளைகள் வழியில் சிலருக்கு மருத்துவச் செலவுகள் உண்டாகும். தேவையற்ற பயணங்களை தவிர்ப்பது நலம்.

**மாணவர்கள்–**

மாணவர்கள் கல்வியில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள்.

பெற்றோர் ஆசிரியர்களின் ஆதரவு சிறப்பாக அமையும். தேவையற்ற பொழுது போக்குகளையும், தீய நண்பர்களின் சகவாசத்தையும் வெட்டி விடுவது நல்ல பெயரைக் கொடுக்கும்.

**அதிஷ்டக் குறிப்புக்கள்**

எண்– 26,27,41,81,100, கிழமை– ஞாயிறு, திசை–கிழக்கு, நிறம்– சிவப்பு, செம்மஞ்சள், கல்– மாணிக் கம், தெய்வம்–சிவன்.




# சிறந்த அம்மாவாக இருப்பது எப்படி?

பெற்றோராக இருப்பவர்கள், தங்கள் குழந்தைக்கு மிகவும் பிடித்தவாறு இருப்பதற்கு, புத்தகங்கள் பலவற்றை படித்து தெரிந்து கொண்டு, அதற்கேற்றாற் போல் தங்கள் குழந்தைகளிடம் நடந்து கொள்வார்கள். குறிப்பாக அப்பாக்களை விட, சில மாறுபட்ட சவால்களை அம்மாக்களே எதிர்கொள்கின்றனர். தாயாக இருப்பது சில நேரங்களில் சற்று சவாலானதாகவே இருக்கும். அதனால் எப்போதும் அமைதியாகவும் மற்றும் பொறுமையாகவும் இருக்க முயற்சி செய்ய வேண்டும். நேரம் கிடைக்கும் தருணங்களில் மனம் விட்டு பேசி, அவர்களுக்கு ஒரு நல்ல தோழியாக இருக்க வேண்டும். அம்மாவிடம் நட்புடன் ஆலோசனை கேட்பதும், வயதுக்கு வருவது பற்றிய சந்தேகங்களைக் கேட்கவும், வீட்டுவேலைகளில் உதவி செய்யவும், அல்லது சாதாரணமாக அம்மாவை கட்டிப்பிடிப்பதும் பிள்ளைகளுக்குத் தெரியும். தங்களிடம் பேசுவதற்கு யாரும் இல்லாமலிருந்தால் பிள்ளைகள் தனிமையிலேயே இருப்பார்கள். எல்லாவற்யையும் விட உங்கள் பிள்ளைகளை அதிகமாக நேசிக்க வேண்டும். அவர்களை நேசிக்காமல், உங்கள் வாழ்க்கையில் நீங்கள் செய்யும் எந்தவொரு செயலும் அர்த்தம் தராது. எந்த நேரத்திலும் பிள்ளைகளை நேசித்தால், அவர்களது மனதில் எக்காலத்திலும் பெற்றோர்களை மறக்காமல் நேசிப்பார்கள். தாயின் பாசம் பிள்ளைகளுக்கு எப்போதுமே நல்வழிப்படுத்துவதாகவும் அவர்களது சிறந்த எதிர்காலத்துக்கும் உதவும்.



# பெண்களுக்கான விவாகரத்துச் சட்டங்கள்?

விவாகரத்து கோர ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிசமமான உரிமை உண்டு. இருப்பினும், சில அடிப்படைக் காரணங்கள் பெண்கள் மட்டுமே விவாகரத்து கோர வரையறுக்கப்பட்டுள்ளது. கணவன் வன்புணர்வு, இயற்கைக்கு மீறிய தவறான உறவு மேற்கொள்ளுதல், ஒரு திருமணம் சட்டப்படி நிலுவையில் இருக்கும் பொழுதே மறுமணம் செய்து கொள்ளுதல். இந்து திருமணச் சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட பெண் கணவர் மீது விவாகரத்து வழக்கு தாக்கல் செய்யல்ாம். ஜீவனாம்சம் பெற்றுக்கொண்டு இருந்தும் கணவன் திருமண உறவில் ஈடுபடாமல் அதற்கான கடமை ஆற்றாமல் இருக்கும் போது... இந்து திருமணச் சட்டம் மற்றும் சிறப்புத் திருமணச் சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் பாதிக்கப்பட்ட பெண் கணவர் மீது விவாகரத்து வழக்கு தாக்கல் செய்யலாம்.

ஒரு சில நேரங்களில் தங்களுடைய திருமண உறவு தொடர்வதனால் எந்தப் பயனுமே இல்லை என்று நினைக்கும் தம்பதி, ஒருமனப்பட்டு விவாகரத்து மனு தாக்கல் செய்யவும் இந்து திருமணச் சட்டம், கிறிஸ்தவர்களுக்கான விவாகரத்துச் சட்டம், சிறப்புத் திருமணச் சட்டம் ஆகிய அனைத்துச் சட்டங்களின் கீழும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

உதயன்

# செய்திகள் / விளம்பரங்கள்

## மரண அறிவித்தல்கள்



### இளையதம்பி நரநாராயணசிங்கம்

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி - நரநாராயணசிங்கம் 29.11.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு, வைத்திலிங்கம், திருமதி சீ. செல்வரட்ணம் ஆகியோரின் சகோதரனும், தவமணியின் அன்புக்கணவரும், இந்திராகாந்தி, (கனடா), விஜயலஷ்மி (கொழும்பு), மகாதேவி (மலேசியா), மகாலட்சுமி, தனலட்சுமி, ரதி (கனடா), வரதலட்சுமி, லோகநாதன், வெங்கடேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியபாலன் (கனடா), சபேசன் (கொழும்பு), இளையதம்பி (மலேசியா), துஷ்யந்தன், கேசவன் (கனடா), யோண் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2014) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாலை மேற்கு.

(54573) (45.3)

தகவல்:
குடும்பத்தினர்.

### அன்ரோனியாப்பிள்ளை (இராசமணி) செபஸ்தியாம்பிள்ளை



பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும் புதுவீதி கொய்யாத் தோட்டத்தை வசிப்பிடமாகவும், தங்கபுரம், அளம்பில், முல்லைத்தீவை இருப்பிடமாகவும் கொண்ட அன்ரோனியாப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை - 01.12.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - முத்தாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அதிரியாம்பிள்ளை - லேனாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை (முத்தையா ஆய்வுகூட உதவியாளர் - யா/ஸ்ரான்லி கல்லூரி) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற எலிசபேத் (புஸ்பராணி) மற்றும் யோகபாலன் (புஸ்பராசா), பற்றிக் (பொன்ராசா), இம்மானுவேல் (கிளி), காலஞ்சென்றவர்களான கிறிஸ்ரி (தனையன்), பெனடிற்வெனோ (ராசன்) மற்றும் போல் (றாதா - ஜேர்மனி), அன்று (றமேஸ் ஜேர்மனி), லூட்ஸ்பிறீடா (றமணி), ஜோர்ச் (றங்கேஸ்) பீற்றர் (றவின்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம், மேரிபற்றிமாவதி (செல்வம்), கசில்டா, ஜெயமணி (பிள்ளை), இராயேஸ்வரி, காலஞ்சென்ற மெற்றலின் (கிளி) மற்றும் சறோஜினி, மாலா (ஜேர்மனி), காசிநாதன், ஜக்குலின் (டெய்சி) ஆகியோரின் அன்பு மாமியும், லடிஸ்லாவா, சுரேஸ், கலா ஜஸ்ரின், சுதா, கொட்வின், ரதி, சுமதி, சாந்தி டனீசியஸ், நிஷா, சலூஜா, சைலஜா, காலஞ்சென்ற உதயன் மற்றும் தேவகுமார், காலஞ்சென்றவர்களான ஜெபநேசன், மேரி அகலியா மற்றும் ராஜ்குமார், கொலஸ்ரிக்கா, ஜோய், காலஞ்சென்ற யூட்சி மற்றும் ஜான்சி, ஜொய்சி, சோபியா, மபியா, டிலான், திலீப், விநோத், சிறோமி, கரோலின், சஃதிலினி, வேணி, றமணா, காலஞ்சென்ற டினேஸ் மற்றும் அருண், அர்ச்சனா, காலஞ்சென்ற அபர்ணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.12.2014)புதன்கிழமை காலை 9.00 மணியளவில் தங்கபுரம், அளம்பிலில் உள்ள அவரின் மகளது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, அளம்பில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தங்கபுரம்,
அளம்பில், முல்லைத்தீவு.

(54564) (45.3)

தகவல்:
பற்றிக் (மகன்)



### நவரெத்தினசுந்தரி வைரமுத்து

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரெத்தினசுந்தரி வைர முத்து 28.11.2014 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்கள்ான கந்தன் -வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைரமுத்துவின் அன்பு மனைவியும், பிரபாகர், காலஞ்சென்ற ஞானசேகரர் (சுவிஸ்) மற்றும் பாஸ்கர் (கனடா), சுதாகர் (வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்-வேலணை), காலஞ்சென்ற சிவலோஜினி மற்றும் ஜெயகரன், சத்தியவான் (கனடா), காலஞ்சென்ற சஞ்ஜீவன் மற்றும் நவநீதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சூரியபிரகாசநிதி, நவஜோதி (கனடா), தர்சினி, சுஜீபன், தவப்பிரியா, சுயாழினி ஆகியோரின் மாமியாரும், பிரதீபா, மயூசிகா, கம்சிகா, தினேஸ்காந், வினுஸ் காந், லிக்ஷிகா, குகலோஜன், கிஷானியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2014) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணி யளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் வட்டாரம்,
நயினாதீவு.

(54485)(4.3.5)

தகவல்:
குடும்பத்தினர்.

## பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் இந்த வார இறுதியில் விடுவிப்பு

கொழும்பு, டிசெ.3

இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் பறிமுதல் செய்யப்பட்டு அரச உடைமையாக்கப்பட்ட படகுகள் அனைத்தும் இந்த வார இறுதியில் விடுவிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் எல்லைப் பகுதிக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களது படகுகளும் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டிருந்தன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் நல்லிணக்க அடிப்படையில் விடுவிப்பு செய்யப்பட்ட போதும் 2014 ஆம் ஆண்டிலிருந்து கைப்பற்றப்பட்ட அவர்களது படகுகள் இலங்கை அரசால் அரசுடைமையாக்கப்பட்டன. இதுவரை 79 படகுகள் இன்னமும் விடுவிப்புச் செய்யப்படாமல் அரசுடைமையாக்கப்பட்டுள்ள நிலையில் படகுகளை திருப்பித் தரக்கோரி மீனவர்களும் தமிழக மீனவ அமைப்புக்களும் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் தற்போது படகுகளை விடுவிப்பு செய்வதற்கு இலங்கை அரசு ஒப்புதல் வழங்கியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேபாளத்துக்குச் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தபோது படகுகள் விடுவிப்பு தொடர்பில் பிரதமர் நரேந்திர மோடி பேச்சு வார்த்தை மேற்கொண்டுள்ளார்.

படகுகள் விடுவிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெற வேண்டி இருப்பதால் சட்ட ரீதியான விடயத்தில் கடற்றொழில் அமைச்சு தலையீடு செய்யாது உள்ளது.

இந்த நிலையில் இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடாக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு படகுகள் விடுவிப்புப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது.

இதுதொடர்பில் கடற்றொழில் அமைச்சிடம் உறுதிப்படுத்துவதற்கான தொலைபேசி அழைப்பை மேற்கொண்டபோது கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன உட்பட அமைச்சு சார்ந்த பிரதான அதிகாரிகளும் பதவி விலகி இருப்பதால் அங்குள்ள அதிகாரிகள் சரியான தகவலை வழங்கவில்லை. தற்போது 79 இந்தியப் படகுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மட்டுமே தகவல் தெரிவித்தனர்.


இதுதொடர்பில் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத்துணைத்தூதரகத்தின் பிரதித் தூதர் தெட்சணாமூர்த்தியிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது;

படகு விடுவிப்புத் தொடர்பில் இந்தியத் துணைத் தூதரகத்துக்கு இன்னமும் உத்தியோகபூர்வமான அறிக்கைகள் எதுவும் கிடைக்கவில்லை. அவ்வாறு படகுகள் விடுவிப்பு செய்யப்பட்டால் அது சந்தோசமான விடயமே என்று தெரிவித்தார்.

இதேவேளை– பா.ஜ. கட்சியின் மூத்த அரசியல்வாதிகளில் ஒருவரான சுப்பிரமணியசுவாமி மீனவர்களின் படகுகள் குறித்த விவரத்தை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பரிசீலித்து அதற்கேற்ப படகுகளை இலங்கை கடற்படை விரைவில் விடுவிக்கும் எனத் தகவல் வந்துள்ளதாக தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

இந்த நிலையில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறாத நிலையில் ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைவாக இந்த வார இறுதியில் படகுகள் விடுவிப்புச் செய்யப்படும். விடுவிப்புப் பத்திரம் சமர்ப்பிப்பதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சு சார்ந்தவர்களின் தகவல்கள் தெரிவித்துள்ளன. (வ–14)

## மரண அறிவித்தல்கள்



### மயில்வாகனம் தில்லைநாதர்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் தில்லைநாதர் 29.11.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் -அபிராமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பூதத் தம்பி - தெய்வானை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற முத்துப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பூதத்தம்பி, அபிராமிப்பிள்ளை, சோதிப்பிள்ளை, சதாசிவம் மற்றும் தெய்வானைப்பிள்ளை (அமெரிக்கா) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை, கார்த்திகேசு, நடராசா, வீரசிங்கம் மற்றும் நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் சிவநாதன் (லண்டன்), கௌரி (லண்டன்), காலஞ்சென்ற கௌசல்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரமாதவன் (ரவி - லண்டன்), பவானி (லண்டன்) ஆகியோரின் மாமனும், அபிதா, தனுசியா, சிவகரன், மதுஷன், திலக்ஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2014) புதன்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிறுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

(54574) (45.3)

தகவல்:
பிள்ளைகள்



### கணபதிப்பிள்ளை தியாகராசா

குருக்கள் பகுதி, கரணவாய், கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தியாகராசா 01.12.2014 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சரோஜினிதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, கந்தையா, இலட்சுமி, சிவ ஞானம், வல்லிபுரம் மற்றும் சிவபாக்கியம், நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், லதா, லோகேஸ்வரன், நிமலேஸ்வரன், தர்ஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜேந்திரகுமார், தர்ஷினி ஆகியோரின் அன்பு மாமனும், பிரவின்குமார், நிவேதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2014) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கிராய் இந்து மயானத்துக்குத் தகனக்கிரியைக் காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருக்கள் பகுதி,
கரணவாய், கரவெட்டி.
T.P. 077 410 6672, 077 991 3219

தகவல்:
தயாநிதி (தயா)
மைத்துனர்

(552028) (45.6.3)

## ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம், டிசெ. 3

தென்மராட்சி கல்வி வலயத்தில் 2008 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதிக்கு பின்னர் ஓய்வுபெற்ற ஆசிரியர்களை ஆசிரிய சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்வதற்கான விவரங்கள் வலயக் கல்வி அலுவலகத்தால் திரட்டப்படுகின்றன. குறித்த ஆசிரியர்கள் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கோட்டக் கல்வி பணிப்பாளரிடம் கையளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார்.

(வ–9)

# செய்திகள்

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

வலி.வடக்கு, டிசெ.3

பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களைக் கையளிக்கும் நாம் நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நிகழ்வின் ஒரு கட்டமாக அரியாலை பார்வதி வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உப கரணங்கள் கையளிக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் வைத்து சுமார் 30 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப் பட்டுள்ளதுடன் அவர்கள் கல்வியின் அடைவுமட்டத்தில் காட்டும் முன்னேற்றத்துக்கு ஏற்ப தொடர்ந்து உதவிகள் வழங்கப்படும் என நாம் நண்பர்கள் அமைப்பினர் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் அரியாலை பார்வதி வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், நாம் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(வ-86)

## மாணவர் கௌரவிப்பு


CWK

யாழ்ப்பாணம், டிசெ. 3

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் உடுவில் கல்விக் கோட்டத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ரி)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்



**கதிரிமணியம் உருத்திரா துரையப்பா**
(Asst. Manager Singer Industries)

சுன்னாகம், தோப்பு வளவைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட உருத்திரா துரையப்பா 01.12.2014 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற . கதிரிமணியம் (கல்வேட்டர்) - அன்னபூரணியம்மா தம்பதியரின் அன்பு மகனும், கொல்லங்கலட்டியைச் சேர்ந்த ஆறுமுகம் - மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும், கிரிசாம்பாள் (Rtd Supirintant of medical Laboratory technologies, NHSL) அவர்களின் பாசமிகு கணவரும், Dr.தேனுகா ஜெயக்குமாரின் பாசமிகு தந்தையும், சாம்சன் ஜெயக்குமாரின் மாமனும், அக்ஷயன், அஸ்விதா ஆகியோரின் அன்புப் பேரனும், சிவகாந்தி, ஆனந்தலக்ஷ்மி, காலஞ்சென்றவர்களான கிருஷ்னதாஸ், விஜலக்ஷ்மி, இராமகிருஷ்ணன், ஜெயலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகாமசுந்தரி, அன்னலக்ஷ்மி, காலஞ்சென்ற கணேசலிங்கம், சண்முகலிங்கம், சிறிநிவாசன் (USA) ஆகியோரின் மைத்துனரும், ராஜவிஜயன், ராஜவிஜி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2014) புதன்கிழமை அன்னாரின் இல்லமான No - 57, 36th Lane Welawattaவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப.ஒருமணியளவில் கல்கிசை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

57, 36th Lane,
Colombo - 06
011 236 0301

தகவல்:
கிரிசாம்பாள் (மனைவி),

(பி18117) (12.3.6)

## மரண அறிவித்தல்



**திருமதி நல்லம்மா கிருஷ்ணபிள்ளை**

சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா கிருஷ்ணபிள்ளை 01.12.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னதுரை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்புச் சகோதரியும், நாகேஸ்வரி, புவனேஸ்வரி, விஜயலட்சுமி, தனபாக்கியம் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்), சறோஜினிதேவி சுந்தரலிங்கம் (கனடா), பாலேந்திரா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற பீதம்பரம், செல்வராஜா, காலஞ்சென்ற செல்வரட்ணம், சூரியகுமாரன் (T O நகரசபை சாவகச்சேரி), மகேஸ் வரன் (Auditor), சிவயோகி (கனடா) சகிலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், நகுலினி (ஆசிரியை)-பத்மநாதன் (Accountant) கோபிதாஸ்-மோகனா (சுவிஸ்), தயாளதாஸ்-குமுதினி (கனடா) கமலதாஸ்-பிரதீபா (சுவிஸ்), ரமணதாஸ்-குகணேஸ்வரி (லண்டன்), சேகரன்-லியோனா (சுவிஸ்), லலிதாயினி-ஜெயகுமார் (ஆசிரியர்), சுதாகரன்-குமதினி (கனடா) சுமீகரன்-கௌரி (கனடா) கிரிபாகரன்-ஹாரினி (கனடா), சுதந்தினி-ரமேஷ் (கனடா), திலிபன் (ஆசிரியர்)-வானதி (People's Bank) பிறேம்நாத் (France), பிரகலதா-கருணகரன் (லண்டன்) பிறேமா, தர்ஷிகா (Bank of Ceylon)-கணாதரன் (Bank of Ceylon), தஜீபன், தர்மிகா பவித்திரா, சுமித்திரா, பிந்துஜன், கஜீனா, தரோன் (கனடா) அனோஜன், விஜோஜன், டினோஜன் (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், சயந்தன், மேசிகன், ஜெனகா, வைசிகா, வைகீஸ், சஹானா, சுருதிகா சாருகா, டக்ஷா, கர்ஷனா, எம்மா, அபிஷன், லபோஷன், இந்துஜா ஜினோதன் ரித்திகா, அஸ்வின், அர்ஜின் லக்ஷனா, சுபந்தீஷ் சுஜின் பிருத்திகா, சுகந் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பங்களா வீதி,
சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

(C/17970) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி கமலாம்பிகை கோபாலகிருஷ்ணன்



இல. 125, வில்சன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை கோபாலகிருஷ்ணன் 01.12.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணனின் அன்புத் துணைவியும், நவபவானி (கனடா), சகுந்தலா (ஆசிரியர் கிளி/ம.வி.), சிவநாதன் (பொறியியலாளர்-கச்சேரி, வவுனியா), துஷ்யந்தி (யாழ்/விவசாய பீடம் முதலாம் வருடம்- விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகநாதன்(கனடா), ஐங்கரன் (மக்கள் வங்கி-கிளி நொச்சி), மதுரா(ஆசிரியர்-வவுனியா நெளுக்குளம்), கஜமுகன் (ஆசிரியர், கிளி/ம.வி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கபீசன் (கனடா), திசாங்கன், சுபாங்கி, மதுராங்கன், கேதுசன், டாரகி, கானுஷன், தருக்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2014) புதன்கிழமை 125, வில்சன் வீதி, கிளிநொச்சியில் உள்ள அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணிக்கு கிளிநொச்சி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **கோ.சிவநாதன் (மகன்)**
(பொறியியலாளர்- கச்சேரி, வவுனியா)
**125, வில்சன் வீதி, கிளிநொச்சி.**

# விளம்பரங்கள்


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **பதஞ்சலம் தியாகராசா**

(ஓய்வுபெற்ற முகாமையாளர்- அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்)

மலர்வு 23.01.1930

உதிர்வு 07.12.2011

திதி: 03.12.2014

அன்பாலும் பண்பாலும் அரவணைத்து
எம் உயர்வுக்காய் உழைத்து
இப் பூமிதனில் எம்மை வாழவைத்து
தந்தையே! நீங்கள் மட்டும் தனியே சென்றதேனோ?
ஆறவில்லை அப்பா! ஆண்டுகள் மூன்று ஆனபோதும்
தாழவில்லை உங்களை இழந்த துயரம்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம்
என்றென்றும் நாம் வாழும் வரை.

மானிப்பாய் றோட்,
ஆனைக்கோட்டை.

நீங்காத நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
(54539) (4.6.3)

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 . 09 . 1953

மறைவு 27 . 11 . 2001

திருமதி **ரேவதிதேவி அருள்ராசலிங்கம்**

திதி: துவாதசி

ஆண்டுகள் 13 ஓடி மறைந்தது - ஆனால்
எமது அன்பு மறையவில்லை
ஒன்றாக இருந்து மகிழ்ந்தோம்
பிறப்பு ஒன்று உண்டென்பதால்
இறப்பு உண்டு என ஆறுகின்றோம்.

உன் நினைவில் வாழும்:
அன்புக் கணவர் சி.அருள்ராசலிங்கம்,
தம்பி, தங்கையும்.

குப்பிழான் தெற்கு,
ஏழாலை.
(54547)(12.3)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
**நவரத்தினம் அர்ச்சனா**

பிறப்பு 02.06.1984

இறப்பு 03.12.2010

ஆண்டுகள் நான்கு சென்றிடினும்
மறைந்திடுமா உன் நினைவு பரிதவிக்கின்றது எம் நெஞ்சம்
உன் புன்சிரிப்பைக் காணவிழியோரக் கண்ணீருடன்
உன் ஆத்மாசாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மருதங்குளம் வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(1157)(12.3)

குடும்பத்தினர்.


## கொதித்தாறிய நீரையே பருகுமாறு அறிவுறுத்து

கரணவாய்,டிசெ.3

மழை காரணமாக இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்கள் உட்பட அனைவரையும் கொதித்தாறிய நீரை பருகுமாறு பருத்தித்துறைப் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி எஸ்.செந்தூரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"தற்போது பெய்துவரும் மழை காரணமாக குடி தண்ணீருக்குப் பயன்படுத்தப்படும் கிணறுகள் மற்றும் மலசலகூட குழிகள் என்பன நிரம்பி வருகின்றன.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலுள்ள பல கிணறுகளில் மழை வெள்ள நீர் உட்புகுந்துள்ளது. இதனால் சூழலிலுள்ள கழிவு நீரும் குடி தண்ணீருடன் கலக்கும் அபாயம் காணப்படுகின்றது.

இதனைப் பருகுவதனால் வாந்தி பேதி, நெருப்புக்காய்ச்சல்போன்ற நோய்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.

எனவே அனைத்துப் பொது மக்களும் தமது சுகாதார நிலைமைகளை கருத்தில் கொண்டு கொதித்தாறிய நீரையே பருக வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(வ–108)

## கரவெட்டியில் 725 பேர் மழை காரணமாக பாதிப்பு

கரணவாய், டிசெ.3

தற்போது பெய்துவரும் அடை மழை காரணமாக கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் சுமார் 185 குடும்பங்களைச் சேர்ந்த 725 பேர் பாதிக்கப்பட்டுள்ள னர்.

மழை காரணமாக வெள்ளநீர் வீடுகளுக்குள் புகுந்துள்ளதால் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி பொது இடங்களில் தங்கியுள்ளதுடன் சிலர் தமது வீடுகளில் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களுக்கு வேண்டிய சமைத்த மற்றும் உலர் உணவு வகைகளை கரவெட்டிப் பிரதேச செயலகத்தினர் வழங்கி வருகின்றனர்.

குறிப்பாக கரவெட்டி இராச கிராம பகுதியில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 140 பேரும், உடுப்பிட்டி வடக்கில் 51 குடும்பங்களைச் சேர்ந்த 167 பேரும், கரணவாய் மேற்கில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 102 பேரும், கரவெட்டி கிழக்கில் 13 குடும்பங்களைச் சேர்ந்த 51 பேரும், கரவெட்டி வடக்கில் 6குடும்பங்களைச் சேர்ந்த 30 பேரும்–

கரணவாய் கிழக்கில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 42 பேரும், இமையாணன் மேற்கில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 13 பேரும், கரணவாயில் 13குடும் பங்களைச் சேர்ந்த 54பேரும், இமையாணனில் 3குடும்பங் களைச் சேர்ந்த 13பேரும், துன்னாலை தெற்கில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 65பேரும், துன்னாலை மேற்கில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 48பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சிவஸ்ரீ தெரிவித்துள்ளார்.

(வ–108)

## வலி. வடக்குப் பிரதேச சபையின் அடுத்தவருட 'பட்ஜெட்' நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 3

வலி. வடக்குப் பிரதேச சபையின் 2015 இற்கான வரவு – செலவுத் திட்டம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்வரும் 15 ஆம் திகதி வரையும் மக்கள்பார்வைக்காகவும் அது வைக்கப்பட்டுள்ளதாக,சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

வலி.வடக்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த 28 ஆம் திகதி சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது வரவு – செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. புதிய வரவு – செலவுத் திட்டத்துக் கமைய பிரதேச சபையினால், 11 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. அத்துடன் மயானங்களும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

நிறைவேற்றப்பட்ட வரவு – செல வுத் திட்டம் மக்கள் பார்வைக் காக நேற்று முதல் வைக்கப்பட்டுள்ளது. மல்லாகத்தில் அமைந் துள்ள பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்திலும், உப அலுவலகங்களிலும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரையில்அதனைப் பார்வையிட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ–5)


## கண்ணீர் அஞ்சலி

**சிவஸ்ரீ கு.சௌபாக்கிய குமாரக்குருக்கள்** - நல்லூர்



ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தான ஆதீன கர்த்தரும், பிரதம குருக்களும் ஆகிய சௌபாக்கிய குமாரக் குருக்கள் ஐயா சிவபதமடைந்த செய்தியை அறிந்து ஆழ்ந்த துயர் அடைந்தோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப் பிள்ளைகள், உற்றார், உறவினர் அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அவர் ஒரு நல்ல நிறைவான அறிவைப் பெற்று குருக்களின் கடமைகளைச் செய்தவர். நல்ல சேவையாளர், நல்ல சிந்தனைகளை போதித்து பலரை நல்வழிப்படுத்தி, இயற்கையுடன் இணைந்து இறைவனின் விருப்பப்படி சிவபதம் அடைந்தவர்.

(54577) (12.3.6) கலாநிதி லயன்.வ.பரமசிவம் (ஜே.பி) குடும்பத்தினர். நல்லூர்.

## விழிநீர் அஞ்சலி



26.11.2014 புதன்கிழமை சதுர்த்தியில்
விநாயகர் பாதக் கமலத்தில்
அமரத்துவம் அடைந்த

**துரையப்பா கனகசபை**

அவர்கள் அத்தியடிப் பிள்ளையார் கோயில் முன்னாள் தலைவர் ஆவார். அவர் ஆலய வளர்ச்சிக்கு அளப்பெரும் தொண்டுகளைச் செய்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் துயரம் கேட்டு அதிர்ச்சியில் ஆழ்ந்துவிட்டோம். அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். (54108) (45.3)

சிவஸ்ரீ யோகீஸ்வர ஞானேஸ்வரக் குருக்கள்,
சித்திவிநாயகர் ஆலயம் கூமாங்குளம், வவுனியா.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 25.03.1981

இறைவன் அடியில் 07.12.2011

**அ. தணிகைவாசன்**

இல்லற வாழ்வினிலே இமயமாய் உயர்ந்து நின்று
நல்லறம் நாளும் செய்த நற்றவத் தந்தையே
என்றும் சொல்லிலும் செயலிலும் நேர்மையாய் வாழ்ந்து
வந்தாய் உங்கள் உடல் தான் மறைந்தது
உருவம் மட்டும் எம் மத்தியில்
என்றும் அழியாத நினைவுகளாய்.....

16/4, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.
(54585)(10.6.3)


## மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு இன்று

கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுடையோர் தின நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆயிரம் வரையான மாற்று வலுவுடையோர் கலந்துகொள்ளவுள்ளதுடன் கலை நிகழ்வுகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் தொடர்பாக கருத்துரைகள் இடம் பெறவுள்ளன.

இதேவேளை– முல்லைத்தீவு மாவட்ட மாற்று வலுவுடையோர் தின நிகழ்வு நாளை மறுதினம் புதுக்குடியிருப்பில் இடம்பெறவுள்ளதாக மாவட்ட மாற்றுத்திறனாளிகள் சங்கம் அறிவித்துள்ளது. (வ–18–9)

## வட்டார மாநாடு

"சமாதானமாக இருக்க தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்" என்ற தொனிப்பொருளுடைய ஒரு நாள் வட்டார மாநாடு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.40 மணிக்கு இசையுடன் ஆரம்பமாகும்.

மு.ப.11.05 மணிக்கு "கடவுள் தரும் சமாதானம் நம் சிந்தனையை விட உயர்வானது எப் படி?" என்ற பேச்சும் பிற்பகல் 2.55 மணிக்கு "சமாதானத்தை விரும்பும் மக்களையே யெகோவா ஏற்றுக் கொள்கிறார்" என்ற முக்கிய பேச்சும் இடம்பெறும் என்று அறிவிக்கப்படுகிறது. (ஓ)

# செய்தி

## 802 ஓய்வூதியர்கள் பயனடைந்த கரவெட்டி நடமாடும் சேவை

கரணவாய்,டிச. 3

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராம சேவ கர் பிரிவுகளைச் சேர்ந்த 802 ஓய்வூதியர்கள் நேற்று இடம் பெற்ற நடமாடும் சேவையில் பயன் பெற்றனர்.



கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் விதவைகள், அநாதை கள் ஓய்வூதியம் பெறுவோரின் கோவைகள் செப்பனிப்படு வத்றகான நடமாடும் சேவை ஒன்று நேற்று முன் தினம் காலை முதல் கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ – பெற்ற இந்த நட மாடும் சேவையில் விதவைகள், அநா தைகள் ஓய்வூதி யத் திணைக்களத் தின் பணிப்பாளர் நாயகம் எ.பி.எம். அஸ்ரப் தலைமை யிலான உயர் மட்ட அதிகாரிகள் குழு கலந்து கொண்டு ஓய்வூதியர்களின் கோவைகளை செப்பனிட்டனர். இதில் கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 35 கிராமசேவகர்பிரிவு களைச்சேர்ந்த802 ஓய்வூதியர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். கர வெட்டிபிரதேசசெய லக அலு வலர்கள், யாழ். மாவட்ட ஓய் வூதியத்திணைக்கள அதிகாரிகள் உட்ப டப் பலரும் இதில் கலந்து கொண் டனர்.

அரச சேவையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளவர்கள் இறந்தபின் அவர்க ளின் வாழ்க்கைத் துணைவிமார்,அநா தைகள், வலதுகு றைந்தவர்கள்,கௌர வமான வாழ்க் கையைமேற்கொள் வதற்கு ஏதுவாக இந்தச் செயற்றிட் டம் முதல்முதலாக கரவெட்டிப் பிர தேச செயல கத் தில்நடைமுறைப்ப டுத்தப் பட்டது என் றும். இடம்பெற்ற நடமாடும் சேவை யில் பங்கு பற்றாத ஓய்வூதியர்கள் கரவெட்டிப்பிரதேச செயலக ஓய்வூ தியக் கிளையுடன் தொடர்பு கொண்டு தமதுதேவைகளை நிறை வேற்றிக் கொள்ளலாம் என் றும் கரவெட்டிப் பிர தேசசெயலர்சசிவஸ்ரீ தெரிவித்துள்ளார்.

(வ–108)

---

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 . 10 . 1947



உதிர்வு 03 . 12 . 2006

### அமரர் மார்க்கண்டு அரியரட்ணம்

(உரிமையாளர்- சிற்றி வைன் ஸ்ரோர்ஸ், றோயல் வைன் ஸ்ரோர்ஸ், நிருத்திகா ஜுவல்லர்ஸ்)

திதி: திரயோதசி

அன்பு தந்து அரவணைத்து ஆளாக்கிய அப்பாவே!
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்
நீங்கள் இருந்து எமக்காக ஒளி வீசினீர்கள்
பாசத்தின் உறைவிடமாய் – ஊர்
போற்றும் உத்தமராய் வாழ்ந்தீர்கள்
ஆண்டவன் அடி சேர்ந்து
ஆண்டுகள் எட்டு ஆனதுவே!
எங்கள் உயிர் உள்ளவரைக்கும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது.

399. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்.

(54557)(4.6.3)

---

## மரண அறிவித்தல்



### திருமதி மாணிக்கம் துரைச்சாமி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் துரைச்சாமி 01.12.2014 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமியின் அன்பு மனைவியும், துரையப்பா (முன்னாள் பரியோவான் கல்லூரி ஊழியர், பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயபாலன் (முன்னாள் தபால் ஊழியர்-அளவெட்டி) மற்றும் இராசமணி ஆகியோரின் அன்புத் தாயும், தில்லைவனம் (பிரான்ஸ்), நாகலெட்சுமி, காலஞ்சென்ற குருசாமி (முன்னாள் பரியோவான் கல்லூரி-ஊழியர்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2014) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

42/40, கெனடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி. 021 7200 268

தகவல்:
குடும்பத்தினர்.

(54594) (10.6)

---

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் வை.சுதாகரி அவர்களின் அன்புத் தாயார்

### வைரமுத்து நவரெத்தினசுந்தரி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
தீவகம் தெற்கு,
வேலணை.

பிரதேச செயலாளரும்,
நலன்புரிசங்க அங்கத்தவர்களும்,

(54589)(4.6.3)

---

## கண்ணீர் அஞ்சலி

தொழில் அலுவலகம் முல்லைத் தீவில் பணிபுரியும் பா. ரமேஸ்குமரன் அவர்களின் தந்தையான



### ஐயாத்துரை பாலசிங்கம்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தரும்,
உத்தியோகத்தர்களும்,
தொழில் அலுவலகம் - முல்லைதீவு.

(54590) (10.6)

---

## மரண அறிவித்தல்



### ஐயாத்துரை பாலசிங்கம்

(ஓய்வுபெற்ற களஞ்சிய பொறுப்பாளர்-இ.போ.ச)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி வடக்கைவசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பாலசிங்கம் நேற்று (02.12.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை- இராசமணி தம்பதியரின் புத்திரனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பழனி-பூரணம் தம்பதியரின் மருமகனும், துரைசிங்கம், காலஞ்சென்ற தர்மகுலசிங்கம் மற்றும் புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுரேஸ்குமரன் (வட பிராந்திய போக்குவரத்து சபை சாரதி), ரமேஸ்குமரன் (தொழிற் திணைக்களம், முல்லைத்தீவு) தர்சிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் கிரிசாந்தி, ஜெயச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சதுஷனின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (03.12.2014) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணி யளவில் அச்சுவேலி வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வல்லை வீதி, அச்சுவேலி
வடக்கு, அச்சுவேலி.


தகவல்: குடும்பத்தினர்
0777885098

(54591)(10)

---

## மரண அறிவித்தல்

தோற்றம் ★ 05 . 11 . 1924



மறைவு ★ 02 . 12 . 2014

### முருகேசு முதலித்தம்பி

இணுவில் மேற்கு வட்டுவினியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு முதலித்தம்பி நேற்று (02.12.2014) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கனகமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, ஆறுமுகம், சங்கரப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், இராசமணி மற்றும் இராசரத்தினம், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் திரவியம், காலஞ்சென்ற தியாகராசா மற்றும் சரஸ்வதி, காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் மைத்துனரும், கமலேஸ்வரி, தயாநிதி, அருணகிரிநாதர் (டென்மார்க்) கண்ணப்பநாதர் (நோர்வே), காலஞ்சென்ற கிருபாலினி, முருகானந்தராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா, குமாரசாமி, செல்வரஞ்சினி, மஞ்சு, சிவகாமி ஆகியோரின் மாமனும், மயூரன் ஆர்த்திகா (பிரான்ஸ்), நவநீதகுமரன் தர்சிகா (B.A) அமிர்தாஸ் கார்த்திகா (கனடா), அன்பரசி, பார்த்தீபன் (கொழும்பு), அபிராம் (பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல்பீட 3ஆம் வருட மாணவன்), தசாங்கினி, தினேஸ், கீர்த்தன், அஜன், அபிஷா, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும், சுபன்ஜாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுவினி மேற்கு,
இணுவில்,

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 021 300 2180

(C/17969) (10.6)

செய்திகள்

# வடக்கு வருமான வரி திணைக்களத்துக்குரிய ஆளணியை அமைக்குக

## முகாமைத்துவத் திணைக்களத்திடம் கோரியுள்ளது வடக்கு மாகாண சபை

யாழ்ப்பாணம், டிசெ. 03

வடக்கு மாகாண சபையின் வருமானவரித்திணைக்களத்துக்குரிய ஆளணியை உருவாக்குமாறு, முகாமைத்துவ சேவைத் திணைக்களத்துக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபையின் நிதி நியதிச் சட்டம் கடந்த ஓகஸ்ட் மாதம் நிறைவேற்றப்பட்டது. அதனடிப்படையில் வடக்கு மாகாணத்துக்குரிய வருமான வரித் திணைக்களம் உருவாக்கப்பட வேண்டும். அதற்குரிய ஒழுங்குகள் நீண்டகாலமாக மேற்கொள்ளப்படாமல் இருந்து வந்தது.

தற்போது, நியதிச் சட்டம் வர்த்தமானி ஊடாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், திணைக்களத்தை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திணைக்களத்துக்குரிய ஆளணியை உருவாக்குமாறு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திடம் வடக்கு மாகாணசபையினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாத இறுதியிலிருந்து வருமான வரித் திணைக்களம்செயற்படத்தொடங்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## பெரிய வெங்காயத்தின் இறக்குமதி வரி உயர்வு

கொழும்பு, டிசெ.3

பெரிய வெங்காயத்தின் இறக்குமதி வரி ஒரு கிலோவுக்கு 15 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் சின்ன வெங்காயத்தின் விலை அதிகரிக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

கைத்தொழில் வாணிபம் முதலீட்டு ஊக்குவிப்பு கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சினால் நேற்று முதல் பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில்உற்பத்திசெய்யப்படும் பெரிய வெங்காயத்தை சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

பெரிய வெங்காயத்தின் இறக்குமதி வரி குறைவாக இருந்த போது வர்த்தகர்கள் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயத்தை கொள்முதல் செய்து சந்தைப்படுத்துவதில் ஆர்வம் காட்டியிருந்தனர்.

இதன் காரணமாக உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் சந்தைப்படுத்தல் இன்றி விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முதல் ஒரு கிலோ பெரிய வெங்காயத்துக்கு 15 ரூபா வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது உள்ளூர்ச் சந்தைகளில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 100 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. உள்ளூர்ச் சந்தைகளில் வெங்காயத்தின் விலை அதிகரிப்படுவதுடன் சிறிய வெங்காயம்தற்போது 120 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதால் அதன் விலையும் சந்தை வாய்ப்பும் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (த-14)

## எனது கோப்புகள் எங்கே?

### அரசுக்கு நவீன் சவால்



யாழ்ப்பாணம், டிசெ. 03

தனது கோப்புக்கள் ஏதாவது இருந்தால் அதனை 24 மணி நேரத்துக்குள் வெளிப்படுத்துமாறு நவீன் திசாநாயக்க சவால் விடுத்த போதிலும், 24 மணி நேரம் கடந்தும் அவரது கோப்புக்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அமைச்சராக இருந்த நவீன்திசாநாயக்ககடந்தஞாயிற்றுக்கிழமை தனது அமைச்சுப் பதவியில் இருந்து விலகியிருந்தார். அத்துடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியில் வந்து இணைந்ததுடன் ஊடகவியலாளர்களையும் சந்தித்திருந்தார்.

இதன்போது, 'எனது ஆவணங்கள் இருக்கின்றதோ தெரியவில்லை. ஜனாதிபதிக்கு ஒருவிடயத்தைத் தெளிவாகக் கூறிக் கொள்கின்றேன். எனது ஆவணங்கள் இருக்குமாயின், அதனை வைத்துக் கொள்ள வேண்டாம். 24 மணித்தியாலங்களுக்குள் அதனை வெளி யிடுமாறு நான் அவரிடம் கேட்டுக்கொள்கின்றேன்' என்று நவீன் திசாநாயக்க குறிப்பிட்டிருந்தார்.

24 மணி நேரம் கடந்தும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நவீன் திசாநாயக்க தொடர்பில் எந்த கோப்பையும் (ஆவணங்களையும்) வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## தேர்தல் முறைப்பாடு இப்போதே அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 03

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனு இன்னமும் தாக்கல் செய்யப்படாத நிலையிலும், இதுவரை 17 தேர்தல்கள் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல்கள் செயலகமும், 24 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் கபே அமைப்பும் தெரிவித்துள்ளன.

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது. இதற்கான வேட்பு மனுத் தாக்கல் எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கு முன்னதாகவே தேர்தல் வன்முறைகள்இடம்பெற்றுவருகின்றன.

இதுவரையில் தேர்தல்கள் செயலகத்துக்கு 17 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 3 முறைப்பாடுகள் வன்முறைச் சம்பவத்துடன் தொடர்புடையவை என்றும், ஏனையவை தேர்தல் விதி மீறல்கள் தொடர்பானவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கபே அமைப்பு இதுவரையில் 24 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளது. மேலும், ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலான தேர்தல் முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கான மத்திய நிலையங்கள் மாவட்ட அளவில் எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து செயற்படுத்தப்படவுள்ளன. (த-5)



## தொழில் முயற்சியாளரை ஊக்குவிக்க இலங்கை வங்கி பெரும் நிதி முதலீடு

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாளர்கலை ஊக்குவிக்கும் வகையில் இலங்கை வங்கி பெருந்தொகையான பணத்தை ஒதுக்கீடு செய்துள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு முயற்சியாளர்கள் பொருத்தமான தொழில் முயற்சிகளைத் தொடங்குவதன் ஊடாக தனிநபர் பொருளாதார வளர்ச்சியையும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் உயர்த்திக் கொள்ள முடியும் என்று இலங்கை வங்கியின் கிளை வங்கியியல் பிரதிப் பொது முகாமையாளர் பி.ரசல் பொன்சேகா தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் ஏற்பாட்டில் சிறிய நடுத்தர தொழில் முயற்சியின் இலக்கை முன்னோக்கி நகர்த்தல் என்ற தலைப்பிலான சிறிய நடுத்தர தொழில் முயற்சி வடமாகாண வாடிக்கையாளர்களுக்கான கருத்தரங்கு நேற்றுமுன்தினம் யாழ். கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

அதில் 'சிறிய, நடுத்தர தொழில் முயற்சியின் அபிவிருத்தியில் இலங்கை வங்கியின் பங்காண்மை' என்ற தலைப்பில் பி.ரசல் பொன்சேகா கருத்துரை வழங்கினார்.

சிறிய தொழில் முயற்சிகளை மேற்கொள்பவர்கள்தான் பெரிய தொழில் முயற்சியாளர்களாக மாற்றம் பெறுகின்றனர். பெருந்தொகையான பணத்தை முதலீடு செய்வதன் ஊடாக எவ்வாறான முன்னேற்றத்தை அடைய முடியும் என்ற இலக்கு இருக்க வேண்டும். சிறிய தொழில் முயற்சியாளர்களின் அபிவிருத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகிறது.

2020 ஆம் ஆண்டில் தனிநபர் வருமானம் 7 ஆயிரம் அமெரிக்க டொலராக இருக்க வேண்டும் என்பது மத்திய வங்கியின் இலக்காக உள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் 12 வீதம் விவசாயமும், தொழில் முயற்சிகள் 30 வீதமும், ஏனைய தொழில்கள் 58 வீதமும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அந்த வலகயில் தொழில் முயற்சியாளர்களின் பங்களிப்பு அதிகமாக இருக்க வேண்டும். இந்தத் தொழில் முயற்சிகளுக்காக பெருந்தொகையான பணத்தை செலவு செய்யும்போது வியாபார நோக்கம், சந்தைப்படுத்தல் நுட்பங்கள் என்பவற்லறக் லகயாள வேண்டும்.

அத்தகைய திட்டங்கள் எதுவும் இன்றித் தொடங்கப்படும் தொழில் முயற்சிகள் பயனற்றதாகிப் போய்விடும். எனவே திட்டமிடப்பட்ட பொருத்தமான தொழில் முயற்சிகளை நாம் ஆரம்பிப்பதன் ஊடாக வருமானம் சாதகமாகக் கிடைக்கும்– என்று அவர் அதன்போது குறிப்பிட்டார்.

நிகழ்வில் 'சிறிய தொழில் முயற்சிகளை வெற்றிகரமாக்குவதற்கான வழிமுறைகள்' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர் எம்.சின்னத்தம்பியும், 'வியாபார வெற்றிக்கான பிரதான காரணிகள்' என்ற தலைப்பில் இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் வி. நந்தகுமாரும், 'இலாபகரமான சந்தைக்கான செயல் ஊக்கமுடைய தலைமைத்துவம்' என்ற தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் எம்.போஹ்ராமும் கருத்தரைகளை வழங்கினர். கருத்துரைகளைத் தொடர்ந்து சாதனையாளர் உரை மற்றும் கருத்துக்களம் என்பன இடம்பெற்றன. (ற-14)



# செய்திகள்

## புலித் தடை நீக்கத்துக்கு எதிராக மேன்முறையீடு

### இரு மாதங்களின் பின்னர் ஐரோப்பிய ஒன்றியம் முடிவு

ப 1 விரிவு

யாழ்ப்பாணம், டிசெ.3

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் நீக்கித் தீர்ப்பு வழங்கியிருந்தது. இதனை எதிர்த்து மேன்முறையீடு செய்யப் போவதாக ஐரோப்பிய ஒன்றியம் இரு மாதங்களின் பின்னர் தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்கப்பட்டிருந்தது. இதற்கு எதிராகக் கடந்த 2012 ஆம் ஆண்டு ஐரோப்பிய நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந் தது. இந்த வழக்கு மீதான தீர்ப்பு கடந்த ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதி வழங்கப்பட்டது.

குறித்த தடைக்கான வழிமுறை பிழை என்பதன் அடிப்படையில் தடை நீக்கம் செய்து தீர்ப்பளித்த ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம், இது தொடர்பில் ஜனவரி மாதத்துக்கு முன்பதாக ஐரோப்பிய ஒன்றியம் மேன்முறையீடு செய்யலாம் என்றும் தெரிவித்திருந்தது.

அத்துடன், குறிப்பிட்ட தீர்ப்பு செயல்முறையை அடிப்படையாகக் கொண்டது என்றும், விடுதலைப் புலிகளைப் பயங்கர வாதப் பட்டியலில் இணைத்துக் கொள்ளப்பட்டமை, அவர்களது நிதியை முடக்கியமை, குறித்து நீதிமன்றம் எந்த வித மதிப்பீடுகளையும் முன்வைக்கவில்லை என்றும் கூறப்பட்டது.

ஐரோப்பிய நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் மேன்முறையீடு செய்யவுள்ளது.

இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் அலுவலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)


**நாஹா மருத்துவ நிலையம்**

* இரத்தக்குழாய் அடைப்பு தரும் பாரிசவாதம், தீவிர ஆஸ்மா, கொடியபுண்கள், எலும்புகள் செயலிழந்து வரும் வாதம் குணப்படல்.
* குழந்தையின்மைக்கு அற்புத மருந்தியல்

T.P. 077 321 2740 (54579) (45.3)

வங்கி முன்லேன்,
சாத்தாவத்தை வைரவர் கோயிலடி,
(ஜெகபதிவீடு) மானிப்பாய்.

**வான் விற்பனைக்கு**

DAIHATSU ATRAI (HIJET) MODEL-JAPAN- வான் (சிறிய வான்)
பெற்றோல் (சில்வர் கலர்)
HE XXXX (A/C) உடன்
விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 871 9515 (54582) (45.3.6)



**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 15.09.1955 — மறைவு 03.12.2013

**சாத்தன் சுப்பிரமணியம்**

ஆண்டு ஒன்று சென்றதையா
ஆறவில்லை எமது துயர்
நீங்கள் இல்லா இடத்தில்
எமக்கேது நின்மதி

கைதடி தெற்கு
கைதடி.

உங்கள் நினைவோடு வாழும்
மனைவி- இந்திராணி
மகள்மார், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(54592)(10.6)



**கனடா- "விளம்பரம்" பத்திரிகை நடத்தும் உலகளாவிய போட்டி**

**கனடா-ரொறொன்ரோவிலிருந்து வெளியாகும் விளம்பரம் பத்திரிகை அதன் 25 ஆவது அகவையை முன்னிட்டு பின்வரும் ஆக்கங்களை எழுத்தாளர்களிடம் கோரியுள்ளது**

01.குறுநாவல் (9,000-12000 சொற்களுக்குட்பட்டதாக)
02.திரைப்படக் கதை Script writting
(1500-2000 சொற்களுக்குட்பட்டதாக)
03.கவிதை (60-100 சொற்களுக்குட்பட்டதாக)
04.கட்டுரை- (1500-2000 சொற்களுக்குட்பட்டதாக)

**தலைப்புக்கள்**

1. புகலிட பொருளாதாரத்தில் தமிழரின் பங்கு 2. தமிழரின் கலையும் பண்பாடும். 3. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழரின் பங்கு. 4. மருத்துவமும் தமிழரும்.

போட்டி 1 இற்கு மூன்று பரிசுகள் முறையே 1000, 500, 300 கனடிய டொலர்கள். போட்டிகள் 2, 3, 4 ஆகிய ஒவ்வொன்றிற்கும் மூன்று பரிசுகள் முறையே 500, 300, 200 கனடிய டொலர்கள்.

ஆக்கங்கள் A-4 தாளில் 11 பொயின்ற் எழுத்தில் தட்டச்சு செய்திருக்க வேண்டும். மின்னஞ்சல் மூலம் அனுப்புகின்றவர்கள் Word இல் பதிவு செய்திருக்க வேண்டும். படைப்பாளியின் முழுப்பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன தனியாகப் பதிவு செய்யப் பட்டிருக்க வேண்டும். ஆக்கங்கள் வேறு எதனிலும் முன்னர் பிரசுரமாகாததாக இருப்பது அவசியம். ஆக்கங்கள் வந்தடைய வேண்டிய இறுதி நாள் 01.01.2015.

(47950) (4.6.3)

அனுப்ப வேண்டிய முகவரி-

**Vlambaram Publication inc, GIA Square**
**5215 Finch Ave East # 201 Toronto ON MIS 002.**
**மின்னஞ்சல் முகவரி-vlambaram@sympatico.ca**



# பாராட்டி வாழ்த்துகின்றோம்
# மார்ஷல் அக்கடமி

எமது கல்வி நிலையத்தில் கல்விகற்று இவ்வருடம் சாதனை படைத்த மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்


D. பரமதயாளன்
- 182 -


திரு. நா.கீதபொன்கலன்
Spl.Tr.Sci, B.A. PGDE, MED


L. அபிஸ்கினைன்
- 182

Best Wishes

3. மோ.ஸ்ரலன்ராஜ் - 178
4. அ. மேரி பஸ்ரின் - 175
5. அ. அஜித் டிலக்ஸன் - 174
6. ஜெ. ஜெகிசன் - 173
7. ரா. கனிந்திரன் - 172
8. பெ. ஏனோக் - 172
9. அ. அபிலாஸ் - 172
10. செ. ஆன்தர்சனா - 172
11. ர. டெறிக்ஷன் - 169
12. அ. டினோஜ் - 168
13. இ. ஆகாஸ் - 168
14. ஜோ. மேரிநித்தியா - 168
15. டெ. துஷாரா - 168
16. பா. யூட்செரோன் - 167
17. S. பிரசாந் - 164
18. ஜெ. சாள்ஸ்பிலிப் - 163
19. சி. டிலக்ஷன் - 162
20. அ. அகிசயன் - 163
21. றொ.ஏரியல் சரோன் - 162
22. ஸ். ஸ்ரனிஸ்ரலா - 162
23. அ. சேனின் சௌறினா - 160
24. அ. அஸ்வின் - 160
25. ந. ஜீவ சொரூபி - 159
26. இ. தனுஷன் - 159
27. S. சியாழினி - 159
28. A. மேரி சானுஜா - 159
29. அ. மிஷேல் - 158
30. சு. சாணுஜன் - 159
31. J. ஜெசான் - 159
32. P. அபிலாஷ் - 158
33. J. ஜெய்சன் - 158
34. சு.அபியுத் - 162
35. R. பிரித்திகா - 175
36. S. செறீனா - 161
37. V. ஜெறிக்ஷா - 157
38. அ. சாருண்யா - 157
39. D. ஜெனுசியா - 157
40. S. பகலவன் - 158
41. R. லக்ஸாயினி - 155
42. அ. ஜெறின் - 153
43. K. ஆன் பெலிசிற்றா - 153
44. கி. கெய்னா - 153
45. M. டினோஜன் - 150
46. J. நிரோஜன் - 154
47. M. அலன்ஸ்ரீபன் - 151
48. J. றெக்ஸ்மன் - 151
49. S. டெனிஸ்ரன் - 150
50. R. பெனாயா - 150
51. V. கசில்டா - 153
52. M. திலக்ஸா - 152
53. P. விதுஷா - 153
54. G. மதுமிதன் - 154
55. A. சனோஜன் - 151
56. S. அஷானா - 150
57. M. சயந்தி - 152
58. கு.தனுஜா - 150
59. J. ஆன்ரூபல் - 150
60. ம. தாட்சாயினி - 150
61. சி. சயந்தா - 150
62. S. வினுசிகா - 152
63. அ. சாருண்யா - 156
64. அ. கவிஷன் - 150

**இவர்களுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 54 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.**
**தற்போது தரம்-03, தரம்-04, தரம்-05 வகுப்புகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.**
**வாரந்தோறும் பரீட்சைகளுடன் நடைபெறுகின்றன.**

5 B, மத்தியூஸ் வீதி, பெரிய கோயில் குளத்துக்கு முன்னால், சுண்டுக்குளி தெற்கு.

Best Wishes

இயக்குநர்
T.P: 077 285 0795


வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (மல்லாகம்)
சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பன
குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் 2015

கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 15.12.2014 திங்கட்கிழமை பி.ப 3.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 16.12.2014 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00மணி வரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி : 16.12.2014 செவ்வாய்க்கிழமை பி.ப 2.00மணி

| இல. | குத்தகை விபரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | மல்லாகம் உப அலுவலகம் | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 45,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | மல்லாகம் பொதுச்சந்தை | - | 100,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | இறால் மடம் சந்தை | - | 1,000.00 | 250.00 | 250.00 |
| 04 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல - 06 | 1000.00 | 21,600.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | அளவெட்டி மலைவேம்படி ஆட்டிறைச்சிக்கடை இல - 07 | 1000.00 | 22,500.00 | 1,000.00 | 1,000.00 |
| | தெல்லிப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தை | - | 9,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | கூத்தன்சீமாச் சந்தை கோழிக்கடை | 1,050.00 | 49,500.00 | 1,000.00 | 1,000.00 |
| | மயிலிட்டி உப அலுவலகம் | | | | |
| 01 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 247,500.00 | 25,000.00 | 1,000.00 |

குறிப்பு :

- மாத வாடகை யாவும் விலை மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் மாற்றத்தை ஏற்படுத்தமுடியும்.
- கேள்விப்பத்திரம் கோருபவர்கள் ஆள் அடையாள அட்டையுடன் அதன் போட்டோப் பிரதியையும் கொண்டு வருதல் வேண்டும்.
- இறைச்சிக்கடை விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என்பதை உறுதிப்படுத்திய கடிதம் சமர்பிக்க வேண்டும்.
- போதிய காரணங்களால் கேள்வியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
- கேள்விப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் குறித்த தினத்திற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பதுடன் கேள்விப் படிவத்தின் ஒரு பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.
- ஏனைய மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம், தெல்லிப்பளை, மயிலிட்டி உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப படிவங்களை மேற்படி உபஅலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- மல்லாகம் சந்தை, அளவெட்டி மலைவேம்படி சந்தை, கூத்தன்சீமா சந்தை, கும்பலைச் சந்தை, வீமன்காமம் சந்தை, இறால் மடம் சந்தைகளிலிருந்து 1km தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லது வேறு எவ்விடத்திலும் மரக்கறி விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது.
- மல்லாகம் சந்தை, அளவெட்டி மலைவேம்படி சந்தை, கூத்தன்சீமா சந்தை, கும்பலைச் சந்தை, வீமன்காமம் சந்தைகளிலிருந்து 1km தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லது வேறு எவ்விடத்திலும் கோழி இறைச்சி,கடலுணவு விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).
03.12.2014

சோமசுந்தரம் சுகிர்தன்.
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை
காங்கேசன்துறை (மல்லாகம்).

(C17968)(10.6)

# அரசின் திசை திருப்பலை முறியடிப்பதற்கே மக்கள் சக்தி மாநாட்டில் பங்கேற்கவில்லை

## சுமந்திரன் எம்.பி. கூறுகிறார்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கூட்டமைப்பு இன்னமும் முடிவெடுக்கவில்லை. இவ்வாறானதொரு நிலையில், பொது எதிரணி வேட்பாளர் மைத்திரி தோன்றும் மேடையில் கூட்டமைப்பு தோன்றுவதை, அரச தரப்பினர் வேறுவிதமாக திசை திருப்ப முனைகின்றனர்.

அதனால் தான், மக்கள் சக்தி என்ற அமைப்பு கொழும்பில் நேற்று நடத்திய கூட்டத்தில் பங்குபற்றவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நியமன நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற மக்கள் சக்தி அமைப்பின் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்து கொண்டு உரையாற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் இறுதி நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பங்கெடுக்கவில்லை.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும். ஜனநாயகத்தையும் – நல்லாட்சியையும் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். இதற்காகதமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்தது. இந்த இலக்குகளை அடைவதற்காக நாட்டிலுள்ள மற்றைய முற்போக்கு சக்திகளுடன் இணைந்து செயற்படுவதற்கும் தன்னை அர்ப்பணித்துள்ளது.

இந்த அர்ப்பணிப்பின் பிரதிபலிப்பாகவே மக்கள் சக்தி என்ற அமைப்பு, ஒழுங்கு செய்த கூட்டத்தில் நான் பேசுவதற்கு இணங்கியிருந்தேன். ஆனால் இந்தக் கூட்டத்தில் நான் பங்குபற்றுவது பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்கும் செயலாகச் சித்தரிப்பதற்கு முயற்சிகள் இடம் பெறுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக முடிவொன்றுஎடுக்கவில்லை. இந்த நேரத்தில் இந்தக் கூட்டத்தைத் தேர்தல் பரப்புரையாகக் காட்ட முனையும் பின்னணியில், நான் நேரடியாகப் பங்குபற்றுவது பொருத்தமற்றது என்று நான் கருதுகின்றேன்.

எனது சார்பாக வாசிக்கப்படும் செய்தியில் நாட்டின் அனைத்து ஜனநாயகசக்திகளுடனும்தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பகிர்ந்து கொள்ளும் மூன்று விடயங்களை வலியுறுத்தியுள்ளேன்.

அதிகாரக் குவிப்பு, ஒரு மையத்தில் அரச அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளது. இதனால் நாட்டு மக்கள் அனைவருக்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது. இவற்றில் மிக மோசமானவற்றை இன்று அனுபவிப்பவர்கள் தமிழ் மக்களே. நிறைவேற்று சட்டவாக்கம் மற்றும் நீதித்துறை உள்ளிட்ட சகல அரச அதிகாரங்களும் ஒரு குடும்பத்தின் கையில் குவிக்கப்படக் கூடாது.

பொருளாதாரத்தை தவறாகக் கையாள்வதாலும், ஊழல் மோசடிகளின் காரணமாகவும் வாழ்க்கைச் செலவு வானளாவுக்கு உயர்ந்து உழைக்கும் வர்க்கத்துக்கு மேல் பெரிய சுமையைச் சுமத்தியிருக்கின்றது.

நாட்டில் சட்டம் ஒழுங்கு முற்று முழுதாக இல்லாது ஒழிக்கப்பட்டு குற்றச் செயல்களும் வன்முறையும் தலைவிரித்தாடும் சூழ்நிலை உருவாக்கியிருந்தது. இதற்குப் பொறுப்பானவர்கள் உயர் நிலையிலுள்ள அரசியல்வாதிகளால் பாதுகாக்கப்படுகின்றனர்.

நாட்டிலே உருவாகும் புதிய அரசியல் சக்தியானது, தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகளை உருவாக்கும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் – என்றுள்ளது. (த–5)

### 16 கிராமங்களில் சனசமூக நிலையங்கள்

சமூக சேவைகள் அமைச்சின் 'மாணவர் மலர்ச்சி' திட்டத்தின் கீழ், இந்த வருடம் நாடளாவிய ரீதியில் உள்ள 16 கிராமங்களில் சனசமூக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சமூக சேவைகள் அமைச்சினால் வருடாந்தம் செயற்படுத்தப்படும் திட்டத்துக்கு அமைவாகப் பின்தங்கிய கிராமங்களில் இத்தகைய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக இந்த வருடம் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 16 கிராமங்களில் சனசமூக நிலையங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. (த–14)

### அலங்கார உற்சவம்

திருகோணமலை குச்சவெளி இரணைக்கேணி ஆதிசேஷ சுவாமி ஆலய அலங்கார உற்சவப் பெருவிழா இன்று ஆரம்பமாகி 4 ஆம் நாள் சனிக்கிழமை சமுத்திர தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும்.

ஆலய உற்சவ பிரதமகுருவாக சிவஸ்ரீ சி. கிருபாகரக்குருக்களும் உதவிக்குருக்களாக சிவஸ்ரீ ப. புஸ்பமூர்த்தி சர்மா, சிவஸ்ரீ க. தேவதாஸ்சர்மா ஆகியோரும் சேவை புரிவார்கள்.

## தொடர்ச்சிகள்

### மைத்திரி

மாகாணசபைக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்குவதற்காகவே நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்குப் பொது எதிரணி வேட்பாளருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திட்டங்களை வகுத்துக் கொடுக்கின்றது – என்றும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தின் கீழேயே, காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் என்பன உள்ளடங்குகின்றது. எனவே நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படுவதன் ஊடாக, வடக்கு மாகாண சபைக்கே இலாபம் கிடைக்கவுள்ளது. ஏனெனில் வடக்கு மாகாண சபை கோரி நிற்கும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கவுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வடக்கு மாகாண சபைதொடர்பில்கரிசனைகொண்டுள்ள மேற்குலக நாட்டுடன் தொடர்பை ஏற்படுத்தி மேற்படி விடயத்தை மாகாணசபைக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்காக பொது வேட்பாளருக்குஆதரவாகப் பரப்புரை மேற்கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்த்திருக்கின்றது.

நூறு நாள்களுக்குள் நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படும் என்று தெரிவித்து வந்த பொது எதிரணி வேட்பாளர் தற்போது அது தொடர்பில் கருத்து வெளியிடுவதை நிறுத்தியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேவைக்கு ஏற்பவே இதனை நிறுத்தியுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளது. இதேவேளை– நூறு நாள்களில் ஜனாதிபதி முறைமை ஒழிப்பது சாத்தியமற்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்திருந்தார்.

மேலும் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்குவதா என்பது தொடர்பில் விரைவில் அறிக்கைவெளியிடப்படும்என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்திருந்தார். அத்துடன் பொதுஎதிரணி வேட்பாளர்மைத்திரிபால பொது வேட்பாளராக அறிவித்த சந்திப்பில் தெரிவித்த கருத்துக்கள் சாதகமானவையா என்று கூட்டமைப்பின் தலைவரிடம் பி.பி.ஸி கேட்ட போது, அரசியல் நடவடிக்கை தொடர்பில் வெளிப்படையாக பரந்த தெரிவு உள்ளது என்று தெரிவித்திருந்தார். இவ்வாறு தினமின தனது செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளது. (ற–5)

### வீதியில்

"40க்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. வீடுகளுக்குள் மழை வெள்ளம் புகுந்துள்ளது. உணவு சமைக்கக் கூட முடியவில்லை. மீள்குடியேற்றப்பட்ட பின்னர் வீட்டுத் திட்டங்கள் எவையும் எமக்கு வழங்கப்படவில்லை. மழைகாலங்களில்நாம்தொடர்ச்சியாகப் பாதிக்கப்படுகின்றோம்"– என்று அந்த மக்கள் கூறினர். (ற–14)

### புலிகள்

வருகை தந்த இரசாயனப் பகுப்பாய்வாளர்கள், சட்ட வைத்திய அதிகாரிகள் மற்றும் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் புதைகுழி தோண்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

போர்க் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் சிறைப்பிடித்து வைக்கப்பட்டிருந்தனர் என்று கூறப்படும் 80 பேர் கொல்லப்பட்டு எரித்துப் புதைக்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். பொலிஸ் அதிகாரியான ஜெயரட்ணம் மற்றும் இராணுவ கப்டன் அலி உள்ளிட்ட 80 முக்கியமான அதிகாரிகளே இவ்வாறு சிறை வைக்கப்பட்டு பின்னர் கொல்லப்பட்டு எரித்துப் புதைக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த முன்னாள் போராளிகள் நான்கு பேர், பயங்கரவாத தடுப்புப் பிரிவின் புலனாய்வு விசாரணையின் போது மேற்படி தகவலைத் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். அதனடிப்படையில் கிளிநொச்சி நீதிமன்றில் மேற்படி விடயம் பாரப்படுத்தப்பட்டு மாவட்ட நீதிவான் வஹாப்தீனின் உத்தரவுக்கு அமையவே புதைகுழி தோண்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய அகழ்வு பணிகளின் போது கொல்லப்பட்டவர்களின் உடல் எச்சங்கள் போன்ற தடயப் பொருள்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆயினும் கொல்லப்பட்டவர்கள் எரியூட்டப்பட்டதற்கான அடையாளங்களைக் கொண்ட தடயங்கள் இராசாயன பகுப்பாய்வு திணைக்கள அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கை தொடர்ந்து மூன்று தினங்கள் இடம்பெறும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற–5)

### மலசல

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த சசிகரன் சானுஜன் என்ற சிறுவனே அவ்வாறு உயிரிழந்தான். அவனது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற–4)

### கட்டுப் பணம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப் பணம் பல கட்சிகளாலும் செலுத்தப்பட்டு வருகின்றது. நேற்று முன்தினம் திங்கட்கிழமை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சார்பில் கட்டுப் பணம் செலுத்தப்பட்டது.

இந்த நிலையில் நேற்று பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன சார்பில், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேயதாஸ ராஜபக்ஷ கட்டுப் பணம் செலுத்தினார்.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், பொது எதிரணி வேட்பாளர் சரத் பொன்சேகா, புதிய ஜனநாயக முன்னணி என்ற கட்சியில் அன்னச் சின்னத்திலேயே போட்டியிட்டிருந்தார். (ற–5)

### மைத்திரிக்கு

பொது எதிரணி வேட்பாளரை ஆதரிக்கும் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை ஹெல உறுமய நேற்றுத் தெரிவித்தது. ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர், முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, மேல் மாகாணசபையின் முன்னாள் அமைச்சர் உதய கம்மன் பில ஆகியோருடன், பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவும் கலந்துகொண்ட ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது.

அதில் கருத்துத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, "மைத்திரிபால சிறிசேன மற்றும் எமது கட்சித் தலைவர் ஓமல்பே சோபித தேரருக்கும் இடையில், தேசிய கொள்கையின் அடிப்படையில் ஆதரவளிக்கும் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. தேசிய கொள்கைகளுக்கு அமைய, மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதில் முக்கியமாக 100 நாள்களுக்குள் அவரை தெரிவுசெய்து, ஜனநாயகத்தை மீளக் கட்டியெழுப்பி, சட்டவாட்சியை மீளக்கட்டியெழுப்பி, நல்லாட்சியை ஏற்படுத்தும் பல விடயங்களை முன்னெடுக்க நாம் எதிர்பார்க்கின்றோம்."– என்று குறிப்பிட்டார்.

"தேர்தலுக்குப் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நீதி விசாரணைக்குட்படுத்த எவரையும் நாம் அனுமதிக்க போவதில்லை. மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்ற பின்னர், அமையவுள்ள தேசிய அரசில் அங்கம் வகிக்குமாறு மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கிறோம். மைத்திரிபால சிறிசேனவுடன் தனியானதொரு புரிந்துணர்வு உடன்பாட்டில் நாம் கையெழுத்திடுவோம்"– என்றும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் புரிந்துணர்வு உடன்பாடுகையெழுத்திடும் நிகழ்வில் ஜாதிக ஹெல உறுமய பங்கேற்கவில்லை. (ற–5)

### மஹிந்தவை

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், காலியில் நடந்த கடற்படைசார் மாநாட்டில் நேற்று முன்தினம் பங்குபற்றியிருந்தார். அன்றையதினம்மாலைஎதிர்கட்சியினரைச் சந்தித்திருந்தார். அந்தச் சந்திப்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடந்தது. பத்து நிமிடங்கள் வரையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் மாத்திரம் கலந்துரையாடியிருந்தார். தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலேயே ஆராயப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன், அவர் சந்திப்பு நடத்தியுள்ளார். சந்திப்பில் இந்தியாவுடன் இலங்கை கொண்டுள்ள உறவின் தன்மை குறித்து அஜித் டோவல் திருப்தி வெளியிட்டுள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (ற–5)



# மார்க் வெப்பர் காயம்

பிரேசிலில் நடைபெற்ற கார் பந்தயத்தின்போது ஆஸ்திரேலியாவைச் வீரர் மார்க் வெப்பர் காயமடைந்துள்ளார்.
கடந்த சீசனுடன் போர்முலா – 1 கார் பந்தயத்தில் இருந்து ஓய்வு பெற்ற மார்க் வெப்பர், சா போலா நகரில் நடைபெற்ற, உலக என்டுரன்ஸ் சம்பியன்ஷிப் தொடரில் போர்ஷே அணி சார்பில் பங்கேற்றார்.
மணிக்கு 300 கிலோ மீற்றர் வேகத்தில் சென்ற மார்க் வெப்பருடைய கார், பெராரி நிறுவனத்தின் மேட்டோவ் கிரஸானியின் காருடன் மோதியது.
இதில் மார்க் வெப்பரின் கார் தீப்பிடித்தில் அவர் காயமடைந்தார்.
உடனடியாக வெப்பர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.
முதற்கட்ட சிகிச்சைக்குப் பின், காயம் பெரிய அளவில் இல்லை எனத் தெரியவந்தது.(த)

# மக்கலம் நீக்கம்

பாகிஸ்தானுக்கு எதிரான 20/20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட் போட்டி தொடரில் நியூசிலாந்து அணித் தலைவர் பிரண்டன் மக்கலத்துக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.
கனே வில்லியம்சன் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
பாகிஸ்தான்– நியூசிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான போட்டி தொடர் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடந்து வருகின்றது.
இரு அணிகள் இடையிலான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் போட்டி தொடர் 1–1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது.
இரு அணிகளுக்கிடையிலான முதலாவது 20/20 போட்டி நாளை டுபாயில் ஆரம்பமாகின்றது.
அடுத்து இரு அணிகள் இடையே எதிர்வரும் 8, 12, 14, 17, 19 ஆகிய திகதிகளில் ஒருநாள் போட்டி நடைபெறுகிறது.
இந்நிலையில் ஆஸ்திரேலிய அணி வீரர் பிலிப் ஹியூக்ஸ் மரணத்தால் மன உளைச்சலில் இருப்பதாகத் தெரிவித்து இருந்த பிரன்டன் மக்கலம், வேகப்பந்து வீச்சாளர்கள் ரிம் சவுத்தி, டிரென்ட் பவுல்ட் ஆகியோருக்கு பாகிஸ்தானுக்கு எதிரான 20/20 மற்றும் ஒருநாள் போட்டி தொடரில் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. (த)



# அறிமுகப் போட்டியிலேயே ஹட்ரிக் பங்களாதேஷ் வீரர் உலக சாதனை



பங்களாதேஷ் அணியின் இளம் சுழற் பந்து வீச்சாளர் தைஜுல் இஸ்லாம் தனது முதல் ஒருநாள் போட்டியில் ஹட்ரிக் எடுத்து உலக சாதனை நிகழ்த்தியுள்ளார்.
சிம்பாப்வே அணிக்கு எதிராக டாக்காவில் நடைபெறும் 5 ஆவது ஒருநாள் போட்டியில் அறிமுக வீரராகக் களமிறங்கிய தைஜுல் இஸ்லாம் ஹட்ரிக் எடுத்து உலக சாதனை நிகழ்த்தியுள்ளார்.
ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் அறிமுக போட்டியிலேயே ஹட்ரிக்சாதனைநிகழ்த்திய முதல் வீரரானார் தைஜுல் இஸ்லாம். 22 வயதாகும் தைஜுல் இஸ்லாம் இடது கை சுழற்பந்து வீச்சாளர் என்பது குறிப்பிடத்தக்கது.
இவர் 7 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 11 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளைக் கைப்பற்றினார். இதனால் சிம்பாப்வே அணி 30 பந்துப்பரி மாற்றங்களில் 128 ஓட்டங்களுக்குள் சுருண்டது.
சிம்பாப்வே அணி 26ஆவது பந்துப்பரிமாற்ற முடிவில் 120/5 என்ற நிலையில் இருந்தது. அப்போது தைஜுல் இஸ்லாம் 27ஆவது பந்துப்பரிமாற்றம் பந்து வீச அழைக்கப்பட்டார். அவர் சாலமன் மைர் என்பவரை அந்த பந்துப்பரிமாற்றத்தின் முதல் பந்தில் எல்.பி செய்தார்.
அதே பந்துப்பரிமாற்றத்தின் கடைசிப் பந்தில் பன்யாங்க ராவை ஆட்டமிழக்க வைத்தார். பிறகு 29–வது பந்துப் பரிமாற்றத்தின் முதல் 2 பந்துகளில் நயம்பு மற்றும் சடாரா ஆகியோரை அடுத்தடுத்து வீழ்த்தி ஹட்ரிக் சாதனை புரிந்தார்.
ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஹட்ரிக் எடுக்கும் 4ஆவது பங்களாதேஷ் வீரர் ஆவார் தைஜுல். இதற்கு முன்பு ஷஹாதது ஹுசைன், அப்துர் ரசாக், மற்றும் ரூபல் ஹுஸைன் ஆகியோர் ஒருநாள் போட்டிகளில் ஹட்ரிக் சாதனை நிகழ்த்தியுள்ளனர். (த)

# ஆஸ்திரேலியா ஆபத்தானது வழக்கு போட்ட இந்திய ரசிகர்

ஆஸ்திரேலிய ஆடுகளம் ஆபத்தானதாக இருப்பதால் இந்திய வீரர்கள் நாடு திரும்ப வேண்டும் என ரசிகர் ஒருவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.
சமீபத்தில் ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸ் பவுன்சர் பந்து வீச்சில் அடிபட்டு பரிதாபமாக உயிரிழந்தார். இந்த விபத்து அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.
அதே வேளையில் இந்திய அணி டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலிய சுற்றுப்பயணம் செய்துள்ளது.
இந்நிலையில் ஆஸ்திரேலிய ஆடுகளம் ஆபத்தானது என்றும், உலகக் கிண்ணப் போட்டிகள் நெருங்கும் வேளையில் இந்திய வீரர்களுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்பட்டு விட கூடாது எனவும், ரசிகர் ஒருவர் மதுரை நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.
இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் எனவும் கூறப்படுகிறது. (த)

# தலைவிதியை மாற்றிவிட்டது கிரிக்கெட் சபை



ஐ.பி.எல் சூதாட்ட விவகாரத்தில் இந்திய கிரிக்கெட் சபை தனக்கு அதிகமாக அநீதி இழைத்துவிட்டதாக ஆயுள்காலத் தடை விதிக்கப்பட்ட ஸ்ரீசாந்த்குற்றம்சாட்டியுள்ளார்.
சூதாட்டத்தில் ஈடுபட்ட ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை சேர்ந்த ஸ்ரீசாந்த், அங்கீட் சவான், அஜீத் சண்டிலா ஆகியோருக்குத் தடை விதிக்கப்பட்டது.
இது தொடர்பாக இவர்கள் மீது பொலிஸார் தொடர்ந்த வழக்கு நீதிமன்றத்தில் நடந்து வருகின்றது.
இந்நிலையில் சூதாட்ட விவகாரத்தில் இந்திய கிரிக்கெட் சபையால் தான் அதிகமாக பாதிக்கப்பட்டதாக ஸ்ரீசாந்த் குற்றம் சாட்டியுள்ளார்.
இது தொடர்பாக அவர் கூறுகையில், இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையால் நான் மிகவும் பாதிக்கப்பட்டேன். எனது தலைவிதியை 5 நிமிடத்திலேயே முடிவு செய்தது.
இந்த விடயத்தில் கிரிக்கெட் சபை எனக்கு அதிகமாக அநீதி இழைத்துவிட்டது. எனக்கு எதிராக எந்தவிதமான ஆதாரமும் இல்லை.
என் மீதான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதால் என்னால் இதுபற்றி அதிகமாக எதுவும் கூற இயலாது. என்னை நிரபராதி என்பதை நிரூபிப்பேன் என்று கூறியுள்ளார். (த)

வலி. தெற்கு பிரதேச சபை
04 DEC 2014

# உதைபந்தாட்ட பயிற்சி மையத்தை திறந்து வைத்தார் ஷெப் பிளாட்டர்









யாழ்ப்பாணம், டிசெ. 3
யாழ்ப்பாணம் அரியாலையில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாண உதைபந்தாட்ட பயிற்சி மையத்தை சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஷெப் பிளாட்டர் நேற்றுத் திறந்து வைத்தார்.

முதலில் விருந்தினர்களுக்கு மாலை அணிவித்ததைத் தொடர்ந்து புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் வரவேற்பு நடனம் இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து நினைவுக் கல்லை சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஷெப்பிளாட்டர், இலங்கைக்கான ஜேர்மன் நாட்டின் தூதுவர் மொஹாட் ஆகியோர் இணைந்து திரை நீக்கம் செய்து வைத்தனர். தொடர்ந்து சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் ஷெப் பிளாட்டர் நாடாவை வெட்டிப் பயிற்சி மையத்தைத் திறந்து வைத்தார். வைபவத்தில் தேசியக் கொடியை இலங்கை விளையாட்டுத்துறை அம்மச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயும், வடக்கு மாகாணக் கொடியை முதலமைச்சர் விக்னேஸ்வரனும், ஜேர்மன் நாட்டுக் கொடியை ஜேர்மன் நாட்டுத் தூதுவர் மொஹாட்டும், சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனக் கொடியை ஷெப் பிளாட்டரும், இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் கொடியை அதன் தலைவர் றஞ்சித் றொட்றிக்கோவும், யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் கொடியை அதன் தலைவர் அன்ரனிப்பிள்ளையும் ஏற்றிவைத்தனர்.

இந்தத் திறப்பு விழாவுக்கு ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் சேய்க் சல்மான் பின் இப்ராகிம் கலிபா, வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா, மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவர் தவராசா, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த-23)

## இலங்கைத் தேசிய அணிகளில் வடமாகாண வீரர்கள் வேண்டும்

### விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த கோரிக்கை



வலி.வடக்கு, டிசெ. 03
எதிர்வரும் ஐந்து வருட காலத்தில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இலங்கையின் உதைபந்தாட்டம், கிரிக்கெட் மற்றும் ரக்பி தேசிய அணிகளில் இடம்பெறவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். இதற்கு வேண்டிய எந்தவொரு உதவியையும் வடக்கு மாகாண சபையின் விளையாட்டுத்துறை அமைச்சர் கேட்கும் சந்தர்ப்பத்தில் அதனை வழங்க அரசும் விளையாட்டுத்துறை அமைச்சர் என்ற வகையில் நானும் தயாராக இருக்கின்றோம் என விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் அரியாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட உதைபந்தாட்டப் பயிற்சி மையத்தின் திறப்பு விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய விளையாட்டுத்துறை அமைச்சர், வடக்கு மாகாணத்தில் ஏழு உதைபந்தாட்ட லீக்குகளில் 250 க்கும் மேற்பட்ட உதைபந்தாட்டக் கழகங்கள் இடம்பெற்றுள்ளன.

தேசிய மட்டத்தில் விளையாடக் கூடிய விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் இந்த உதைபந்தாட்ட லீக்குகளுக்கு உண்டு. கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்படும் விளையாட்டு மைதானம் அடுத்த மாத முற்பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதேவேளை– அடுத்த ஆண்டு முல்லைத்தீவில் சகல வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்த மாத இறுதியில் மட்டக்களப்பில் விளையாட்டு அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டு மைதானம் திறந்து வைக்கப்படவுள்ளது –என்றார். (த-86)

புதிய நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்நகர்.
கல்வியாண்டு 20
தரம் 1 முதல் O/L வரை
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
05-12-2014 வெள்ளி 3 மணி
புதிய அனுமதிகள் இன்று முதல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வேலையாள்கள் தேவை
ஜேர்மன் ரெக் சற்றலைற் சென்ரர்ஸ்
இன் கட்டடப் பணிகள் செய்வதற்கு
கொந்துராத்துகாரர்கள் தேவை.
கட்டடப் பணிகள் இடம்பெறும் இடங்கள்:
கைதடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, பூநகரி,
மன்னார், வவுனியா, மாங்குளம்.
விவரங்களுக்கு:077 375 1803, 071 238 7076
Sanken Construction (Pvt) Ltd
(சி.17918) (45.3)

SEC SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA
CSE COLOMBO STOCK EXCHANGE
முதலீட்டாளர் மன்றம் - யாழ்ப்பாணம்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு & கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
டிசம்பர் 6ம் திகதி, 2014, றில்கோ சிற்றி ஹோட்டல், யாழ்ப்பாணம்.
147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
0777822014 / 0212221455
கட்டணம் இல்லை - அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
முன்பதிவுகளுக்கு
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - யாழ்கிளை

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

புதன் பொய்கை

உதயன்

03 டிசெம்பர் 2014 புதன்கிழமை

கடவுள் உண்டா, இல்லையா என்பது பற்றிக் கவலையில்லை. அருள் தோன்றுமிடமும் ஒன்று இருக்க வேண்டுமல்லவா? அதைத் தான் கடவுள் என்று அழைக்கின்றோம்.
- *மறைமலையடிகள்.*

■ ராஜராஜன்

மழையை எவர்தான் வெறுத்தாலும் அது இல்லாமல் இந்த உலகில் எந்த ஜீவராசிகளாலும் வாழ்ந்துவிட முடியாது. நாம் உயிர்வாழ்வதற்கு காற்று மிகவும் அத்தியாவசியமானது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று.

# இயற்கையின் அருங்கொடையான மழை

கார்த்திகை மாதம் என்றாலே மழையின் ஞாபகம் எமக்கு வந்துவிடும். கடந்த சில வருடங்களாக வருணபகவானின் கடைக்கண் பார்வை எமது நாட்டின் வடபகுதிக்குக் கிடைக்காததால் வறட்சியும், தண்ணீர்த் தட்டுப்பாடும் இங்குள்ள மக்களைப் பெருமளவில் பாதித்துவிட்டன. விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டதால் அதை நம்பியிருந்த மக்களின் வாழ்வாதாரம் மோசமான நிலையை எட்டி நின்றது. இதனால் இந்த ஆண்டாவது நல்ல மழை பெய்யுமா என்ற கேள்வி எழுந்து நின்றது.
தற்போது நல்ல மழை பெய்து வருவதால் பூமி குளிர் ந்து பூரித்து நிற்கின்றது. மரங்கள் புதுத்தோற்றம் பெற்று சிலிர்த்துக் காணப்படுகின்றன. நீர் நிலைகளில் நீர் நிரம்பியுள்ளது. இதனால் விவசாயிகள் நம் பிக்கையுடன் உலவுகின்றனர். இந்தமுறை விவசாயம் கைவிடாது என்ற புது நம்பிக்கையும் பிறந் துள்ளது.

ஆனால் மழையின் வருகையை வெறுப்பவர்களும் இல்லாமலில்லை. பள்ளமான பகுதிகளில் குடிசை களை அமைத்து வாழ்பவர்களும், மீளக்குடியமர்வு என்ற பெயரில் நரகத்தில் தள்ளிவிடப்பட்ட இடம் பெயர்ந்த மக்களும் மழையினால் அனுபவித்துவரும் துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அவர்கள் வறட்சி எவ்வளவுதான் நீடித்தாலும் பரவாயில்லை. மழை வேண்டவே வேண்டாம் என்றுதான் நினைக்கின்றனர். இந்த நிலையில் வருணபகவானின் நிலையும் தர்மசங்கடத்தினுள் சிக்கி நிற்கின்றது.

முன்பெல்லாம் ஒருவருடத்தின் இறுதி ஆறு மாதங்களும் மாரிகாலம் என அழைக்கப்படும். இதன் போது மழை கொட்டித் தீர்த்துக் கொண்டே இருக்கும். எங்கும் பார்த்தாலும் வெள்ளம் தேங்கி நிற்கும். அதிலும் வசதிகள் இல்லாத கிராமப்புறங்களின் நிலைபரிதாபமாகக் காணப்படும். வசதிகளில்லாத வீடுகளில் வசிப்பவர்கள் மழையைச் சபித்துக் கொண்டே இருப்பார்கள். இவர்கள் கோடைகாலம் விரைவில் வராதா என்ற ஏக்கத்துடன் காணப்படுவார்கள்.

மழையை எவர்தான் வெறுத்தாலும் அது இல்லாமல் இந்த உலகில் எந்த ஜீவராசிகளாலும் வாழ்ந்துவிட முடியாது. நாம் உயிர்வாழ்வதற்கு காற்று மிகவும் அத்தியாவசியமானது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. காற்றைச் சுவாசிக்கும் செயற்பாட்டில் இருந்து மனிதர்கள் விலகிவிட முடியாது. அவ்வாறு விலகிவிட்டால் பிணமாகத்தான் மாறிவிட நேரிடும். அதைப் போன்றுதான் நீர் அருந்தாமல் உயிர்வாழ முடியாது. ஓரறிவு படைத்த மரங்கள் கூட நீர் இல்லாமல் நிலைத்து நிற்க முடியாது. செடி கொடிகள், புல் பூண்டுகள்யாவும் நீரையே பிரதான ஆதாரமாகக் கொண்டுள்ளன. இத்தகைய பெருமை வாய்ந்த நீரை மழையே எமக்கு வாரி வழங்குகின்றது.

முன்பெல்லாம் அரசர்கள் தமது மந்திரிமார்களைப் பார்த்து மாதம் மும்மாரி பொழிகின்றதா எனக் கேட்பதாகக் கூறுவார்கள். அந்தக் காலத்தில் மழை அவ்வாறு பொழிந்தது. ஆனால் இன்று மாரி காலத்தில் மழை பெய்வதே அரிதாகிவிட்டது. இதற்கு மனிதர்களையே குற்றம் சுமத்த முடியும். மழை பெய்வதற்கு மரங்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானது. இதனால்தான் காடுகளைப் பேணுவதன் அவசியம் வலியுறுத்திக் கூறப்படுகின்றது. ஆனால் மனிதர்கள் இவற்றையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு வகை தொகையற்ற விதத்தில் மரங்களை அழிக்கின்றனர். இதனால் பாதிக்கப்படுவது தாமே என்பதை இவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. இயற்கையை அழிப்ப தும் பின்னர் இயற்கை தம்மை வஞ்சித்து விட்டதாகப் புலம்புவதும் இன்றைய மனிதர்களின் வாடிக்கையாக மாறிவிட்டது.

வெப்பத்தின் காரணமாக பூமியிலுள்ள நீர், நிலைகளிலிருந்து ஆவியாக மாறும் நீர் முகில் கூட்டங்களில் படிந்துவிடும். பின்னர் முகில்கள் குளிரும் போது மழையாக மாறித்திரும்பவும் பூமியையே வந்துசேர்ந்துவிடும். மழை பெய்வதற்கான பிரதான காரணியாக முகில் கூட்டங்களே காணப்படுகின்றன. இயற்கையில் ஏற்படும் மாற்றங்கள் மழை வீழ்ச்சியின் அளவைத் தீர்மானிக்கின்றன.

தற்போது பெய்துவரும் கடுமையான மழை காரணமாக நாம் சில சங்கடங்களை எதிர்கொண்டாலும் மழையை வெறுப்பது எந்த விதத்திலும் நியாயமானதல்ல. மழை பெய்யாதபோது ஏற்படும் வறட்சியை எதிர்கொள்வதற்குத் தயங்கும் நாம் மழையை எதிர்ப்பது விவேகமான செயலல்ல.

வாடிய பயிரைக் கண்டதும் வாடி நின்று துயரத்தில் ஆழ்ந்தாராம் இராமலிங்க வள்ளலார். வாடிய பயிர்கள் உயிர்பெற நீர் வேண்டும். அதற்கு மழை பெய்யவேண்டும். தற்போது உலகில் ஏற்பட்டுள்ள நீர்த் தட்டுப்பாட்டைப் போக்க வேண்டுமானால் மழை நீரைச் சேமித்து வைக்க வேண்டுமெனக் கூறுகிறார்கள். இயற்கை எமக்கு வழங்கும் மழைநீர் பூமியை அடையும்வரை தூய்மையானதாகவே காணப்படுகின்றது. பூமியை வந்தடைந்த தன் பின்னரே அதில் மாசு கலக்கின்றது. மனிதர்களே இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

மழை, இயற்கை அன்னை எமக்கு வழங்கும் அரியதொரு செல்வமாகும். அதன் பெருமையை எவருமே மதிப்பிட்டுவிட முடியாது.

**பஞ்சபூதங் களில் ஒன்றான நீர் மழையின் மூலமாகவே எமக் குக் கிடைக்கின்றது என்பதை நாம் ஒருபோதுமே மறந்துவிட முடியாது. மழையைப் போற்றுவோம்– மழையை வரவேற்போம்.**



# புதன்பொய்கை





வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் சிறந்த ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பாடசாலைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை பகல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா தலைமையில நடை பெற்றது.
இந்த நிகழ்வில் இடம் பெற்ற இணுவில் இந்துக் கல்லூரி மாணவர்களின் நடன நிகழ்வை இங்கு காணலாம். (வ–86)
















கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற 2014 ஆண்டின் அரச இசை விருது வழங்கும் விழாவில் இவ்வருடத்தின் சிறந்த இசையமைப்பாளருக்கான விருது 'அடடா புயலா' பாடலுக்காகவும், இவ்வருடத்தின் சிறந்த நவீன கிராமிய இசை அமைப்புக்கான அரசவிருது 'பச்சை முத்தம்' பாடலுக்காகவும் இரு அரச விருது களும் வவுனியா இசை அமைப்பாளர் கந்தப்பு ஜெயந்தனுக்கு கிடைத்துள்ளன. (வ- 402)





ஷெல்லிதாசன் எழுதிய 'நகர் வீதிகளில் நதிப் பிரவாகம்' என்ற நூல் அறிமுக விழா அண்மையில் கொக்குவில் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் பேரவைத் தலைவர் க.தணிகாசலம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நூல் அறிமுக உரையை இ.சத்தியதேவனும் ஆய்வுரையை சோ.பத்மநாதன், எஸ்.ஜீ.கணேசவேல் ஆகியோரும் நிகழ்த்தினர். (வ–9)

# ஐரோப்பிய திரைப்பட விழாவில் இடம்பிடித்தார் யாழ்.கலைஞர்




வருடம்தோறும் நடைபெற்றுவரும் ஐரோப்பிய திரைப்படவிழா கடந்த வியாழக்கிழமை கொழும்பில் ஆரம்பமானது. இந்த விழா நாளை வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளதாக விழாக் குழுவினர் தெரிவித்துள்ள நிலையில் இந்த விழா தொடர்ச்சியாக யாழ்ப்பாணம் மற்றும் ஹொறணை ஆகிய இடங்களில் நடைபெற வுள்ளது. இதுவரை காலமும் சிறந்த முழுநீளத் திரைப் படங்களை மட்டும் தெரிவுசெய்து நடத்தப்பட்டு வந்த இந்த விழாவில் இம்முறை குறும்படங்களும் உள்வாங்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் ஐரோப்பிய திரைப்பட விழாவில் 11 குறும்படங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட 11 குறும்படங்களில் 10 குறுந்திரைப்படங்கள் சிங்கள மொழி மூலமும் ஒரே ஒரு குறும்படம் தமிழ் மொழி மூலமுமானவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தெரிவு செய்யப்பட்ட த்மிழ்க் குறுந்திரைப்படம் முற்று முழுதாக யாழ்ப்பாணக் கலைஞர்களைக் கொண்டு இயக்குநர் சி.சிவராஜ் இயக்கி வெளிவந்த 'சமனிலை'. இந்தக் குறும்படம் என்பதும், அது 2013 பெண்கள் மற்றும் ஊடக அமைப்பு தேசிய ரீதியில் நடத்திய குறும் படப் போட்டியில் முதலிடம் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (வ–10)




# மூளை அமைப்பின் முக்கிய சாஸ்திரம்

## 100 ஆண்டுகளுக்குப் பின்னர் வெளிக்கொணர்ந்த ஆராச்சியாளர்

மூளைக்குள் நரம்பு இழை குவியலாக இருப்பதை ஆராய்ச்சியாளரான ஜேசன் யேட்மென் கண்டுபிடித்துள்ளார். வொஷிங்டன் பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளரான ஜேசன் யேட்மென், கடந்தசிலவருடங்களுக்கு முன்னர் ஸ்டான்போர்டு பல்கலைக் கழகத்தில் பி.எச்.டி பயின்று கொண்டிருக்கும் போது இதனைக் கண்டுபிடித்துள்ளார்.

மொழிகளைக் கண்டறிவதிலும், படிப்பதிலும் மூளையின் அமைப்பு எந்த விதத்தில் பங்களிக்கிறது என்பது குறித்து பயின்று வரும் யேட்மென், மூளைக்குள் நரம்பிழை குவியலாக உள்ளது முக்கியமான ஒன்று என்று எண்ணினார். ஏனென்றால் அவரும் அவரது சக நண்பர்களும் நரம்பிழை குவியலாக இருப்பது குறித்து மருத்துவ இலக்கியத்தில் எங்கும் கண்டதில்லை. எனவே அவர்கள் இது புதிய கண்டுபிடிப்பாக இருக்கும் என்று கருதினர்.

மருத்துவத் துறையில் இருக்கும் வேறு சிலரிடம் இது குறித்து கூறிய போது, அவர்களுக்கு புதிய தகவல் கிடைத்தது. அவர்கள் கண்டுபிடித்ததாகக் கூறிய நரம்பிழை குவியல் பற்றி ஏற்கனவே பழைய மருத்துவ பாடப்புத்தகத்தில் தகவல் இடம் பெற்றுள்ளதையும் தெரிந்துகொண்டனர். மூளை பற்றி பழைமையான கூற்றுகள் மற்றும் கண்டுபிடிப்புகள் பற்றி அறிந்து கொள்ளும் வகையில்100 ஆண்டுகள் பழைமையானஅந்தமருத்துவப்புத்தகத்தில் ஆழமாக தங்கள் கவனத்தை செலுத்த ஆரம்பித்தனர். அதில் ஜெர்மனியைச் சேர்ந்த நரம்பியல் நிபுணரான கார்ல் வெர்னிக்கே, நரம்பு இழைகுவியல் குறித்து கண்டுபிடித்ததுடன், அதை 1881 ஆம் ஆண்டில் மூளை பற்றிய தனது வரைபடத்தில் வெர்ட்டிகல் ஒக்சிபிடல் பேசிகுலஸ் (Vertical Occipital Fasciculus) என்று பெயரிட்டுள்ளதை யேட்மென் கண்டுபிடித்தார்.

**நண்பரின் முகத்தைக் கண்டறிவதிலும், வார்த்தைகளைப் படித்து அதை மூளையின் மற்றைய பகுதிகளுடன் இணைப்பதற்கும் இந்த அமைப்பு மிகவும் முக்கியம் என்பதை யேட்மென் தற்போது உறுதிப்படுத்தியுள்ளார்.**



தான் கண்டுபிடித்ததை நூறு ஆண்டுகளுக்கு முன்பே மற்றொருவர் கண்டுபிடித்து விட்டார் என்றுதெரிந்தவுடன் தனது ஆராய்ச்சியை யேட்மென் நிறுத்தியிருக்கலாம். ஆனால் மூளையின் அமைப்பு பற்றி நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு முக்கியமான கூற்று, தற்போதைய மருத்துவ இலக்கியங்களில் ஏன் இடம்பெறாமல் போனது என யேட்மென் சிந்தித்தார்.

பின்னர் இதுகுறித்து தனது துப்பறியும் பணியை அவர் தொடர்ந்தார். என்ன காரணத்தால் மூளைபற்றிய இந்தச் சாஸ்திரம் காணாமல் போனது என்று துப்பறியத் தொடங்கினார். தொடர்ந்து சில வருடங்கள் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தில் உள்ள பழைய மருத்துவ நூல்களை ஆராய்ந்தார். அப்போது மூளை பற்றிய வெர்னிக்கேவின் சாஸ்திரம் காணாமல் போனதற்கான அதிசயமான காரணத்தைக் கண்டுபிடித்தார்.

வெர்னிகேவுக்கு வழிகாட்டியாக இருந்த நரம்பியல் நிபுணர் தியோடர் மெய்னர்ட், தனது கூற்றில்மூளையில் முன்பக்கமிருந்து பின்பக்கமாக நரம்பியல் பாதை கிடைமட்டமாகச் செல்லும் என்றுகூறியிருந்தார். ஆனால் வெர்னிக்கே கண்டுபிடித்த நரம்பிழைக் கூட்டமானது செங்குத்தாகச்சென்றது. மெய்னர்ட் கூற்றை அப்போது இருந்த மருத்துவ விஞ்ஞானிகள் பொதுவாக நம்பிய போதிலும், அதற்கு முரணாக வெர்னிக்கேவின் கண்டுபிடிப்பு இருந்தது. எனவே அதை ஏற்றுக் கொள்ள அவர்கள்மறுத்துள்ளனர். ஆனால், 'வெர்ட்டிகல் ஆக்சிபிடல் பேசிகுலஸ்' என்ற மூளையின் அமைப்பு மிக முக்கியமானது என்று யேட்மேன் தற்போது உறுதிப்படுத்தியுள்ளார்.

நண்பரின் முகத்தைக் கண்டறிவதிலும், வார்த்தைகளைப் படித்து அதை மூளையின் மற்றைய பகுதிகளுடன் இணைப்பதற்கும் இந்த அமைப்பு மிகவும் முக்கியம் என்பதை யேட்மென் தற்போது உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்மூலம் ஒரு அறிவியல் பூர்வமான கண்டு பிடிப்புஉண்மையானதுதான் என்பது நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் உண்மைதான் என்று நிரூபணமாகியுள்ளது.

# புதன்பொய்கை

# போரின் அவலங்களே ஈழத்தின் தற்கால நாவல்கள்

சி.ரமேஷ்

கடந்த காலகட்டத்தில் உண்மையைப் பேசமுடியாத சூழலில் உண்மையை அங்கீகரிக்காத நிலையில் ஈழத்து இலக்கியங்கள் சில பக்கச் சார்புடையதாகவே வெளிவந்தன. போருக்குப் பின்னர் மாற்றுவகை இலக்கியம் குறித்தான விரிவான கலந்துரையாடலும் விவாத சூழலும் இலக்கியத்தின் புதிய வாசல்களைத் திறக்கத் தொடங்கின. இது தொடர்பான விடயங்கள் கடந்த வாரம் வெளியாகியிருந்தன. அதன் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகிறது.

**மலையக நாவல்**

பாறைக் காடு குறூப்பின் மூன்று டிவிசன்களில் ஏதாவது ஒன்றுக்கு சுப்பவைசராக வேண்டும் என்னும் நோக்கில் மலையகத்துக்குச் செல்லும் வேலாயுதத்தை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட அல்அஸீ மத்தின் அறுவடைக் கனவுகள் சுப்பர்வைசர்மார்களின் வாழ்வியலுக்கூடாக மலையக மக்கள் அனுபவித்த, அவர்கள் எதிர்கொண்ட கொடூர வாழ்வையும் தொழில்முறை நடவடிக்கையையும் சித்திரிக்கிறது. சாதாரண மனித வாழ்வில் நிகழும் சம்பவங்களை அதன் நெளிவு, சுழிவுகளை மனித மனத்தின் அகப்புற வெளிகளை அதன் வலிகளை கலாபூர்வமாக விளக்கி நிற்கும் இந்த நாவல் பிரஜாவுரிமைச் சட்டத்தால் மக்கள் சந்தித்த கஷ்டங்களையும் அவர்கள் எதிர்கொண்ட சங்கடங்களையும் வெளிக்காட்டி நிற்கிறது.

**குடும்ப நாவல்கள்**

சமூகத்தின் மிகச் சிறிய அங்கமான குடும்பத்தை மையமாகக் கொண்டு அதிகளவு நாவல்கள் ஈழத்தில் வெளி வந்துள்ளன. மனிதனின் உள, உடற் தேவையைப் பூர்த்தி செய்யும் ஒன்றாக குடும்பம் அமைவதுடன் வாழ்க்கையைச் செம்மையாக அமைத்துக் கொள்வதற்கும் உதவுகிறது. ஓர் ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாகத் தம்மை வரித்துக் கொள்ளும்போது அந்தக் குடும்பத்தில் நிலவும் பரஸ்பர அன்பு, கோபதாபங்கள், புரிந்துணர்வுகள், விட்டுக்கொடுப்புகள் முதலானவற்றை உள்வாங்கி வெளிவந்த அண்மைக் கால நாவல்களாக வீசிய புயல், இவளா, பயிர் மேயும் வேலிகள், ஒரு கூடும் இரு முட்டைகளும், கண்ணீர்ப்பூக்கள், அலைக் குமிழ், உயிர் காற்று, ஊற்றை மறந்த நதிகள், நெருங்கின பொருள் கைப்பட வேண்டும் முதலான நாவல்களைக் கூறலாம்.

**நவாலியூரானின் வீசிய புயல்**

நவாலியூரானின் வீசிய புயல் மூன்று தலைமுறையினரின் வாழ்வை எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்னும் அடிப்படையில் வெளிப்படுத்தி நிற்கும் ஜனரஞ்சக நாவலாகும். போதிய சத்துணவின்றி வறுமையால் நோய் வாய்ப்பட்ட உறவினரின் பிள்ளையைத் தத்தெடுத்து தமது சொந்தப் பிள்ளையைப் போன்று வளர்க்கும் மதனராசா, மனோஜினி குடும்பத்தைச் சுற்றிப் பின்னப்பட்ட இந்த நெடுங்கதை செம்மண் புழுதி பறக்க வளம் தரும் வட்டக்கச்சியின் வாழ்வியற் புலத்தை இயற்கைப் பண்பு மாறாத வகையிற் பதிவு செய்கிறது. மனோஜினியின் சொந்தப் பிள்ளைகளான றாஜினா, ஜீவினா, மாஜினா ஆகியோரின் வாழ்வையும் அவர்கள் வாழ்ந்து வளர்ந்து குடும்பமாகி அவர்கள் எதிர்கொள்ளும் குடும்பச் சூழலையும் தமிழர்களின் வாழ்வியல் வரலாற்றையும் இந்த நாவல் வெளிப்படுத்தி நிற்கிறது.

**திருமதி த.கிருஷ்ணராசாவின் "இவளா"**

குடும்ப உறவுகளை மையப்படுத்தி இந்தக் காலப் பகுதியில் வெளிவந்த பிறிதொரு நாவல் திருமதி த. கிருஷ்ண ராசாவின் இவளா, இந்துசன், இந்து மதி தம்பதியரின் வாழ்வை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட இந்த நாவல் இந்துமதி என்னும் பெண்ணின் எழுத்துலக இலக்கிய வாழ்வு குறித்துப் பேசுகிறது. வடமராட்சியிலுள்ள வல்லிபுரக் கோயில் தீர்த்த திருவிழாவுடன் தொடங்கும் இந்த நாவல் ஜேர்மனியில் முடிவுறுகிறது. வாசகனைத் திருப்திப்படுத்தும் நோக்கில் நேர்கோட்டுப் பாணியில் எழுதப்பட்ட இந்த நாவல் தட்டையான மொழி நடையைக் கொண்டுள்ளது.

**செல்லையா குமாரசுவாமியின் "பயிர்மேயும் வேலிகள்"**

இன்று எம்தேசத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் ஒரு சமூகப் பிரச்சினையாகவும் சுகாதாரப் பிரச்சினையாகவும் உருவெடுத்துள்ள சூழலில் இது குறித்த விழிப்புணர்வு சமூகத்துக்கு அவசியமாகின்றது. பெற்றோராலும், பாதுகாவலராலும், ஆசிரியர்களாலும் மற்றும் சகோதர, சகோதரிகளாலும், உறவினராலும் சிறுவர்கள் தவறாகப் வழிநடத்தப் படுகின்றனர். இதனால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பல்வேறுபட்ட உடல், உள சமூகப் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். இந்த நிலையில் வெளிவந்த நாவலே செல்லையா குமாரசாமியின் " பயிர் மேயும் வேலிகள்" இந்த நாவலில் காவல் காக்க வேண்டிய வேலிகளே பயிர்களை மேய்கின்றன. துளசி, மலர் விழி என்னும் மாணவிகளைக் காவு கொண்ட ரியூசன் வாத்தி சிறி நிவாசன், மச்சினியை தன்னாசைக்கு உட்படுத்தும் கெங்காதரன், சிறுவயது மருமகன் தயாவை தன் பாலியல் பசிக்கு இரையாக்கும் நந்தினி என வரும் சங்கதிகள் இன்றைய உலகில் நாம் காணும் சிறுவர் தொடர்பான சமூகப் பிரச்சினைகளாகும். இதே போன்று வெளிநாட்டுப் பிரயாணங்கள், அளவுக்கு அதிகமான பணம் முதலானவை குடும்ப வாழ்வை எவ்வாறு சிதைக்கின்றன என்பதையும் இந்த நாவல் துல்லியமாக வெளிப்படுத்துகிறது.

**கெக்கராவ ஸஹானாவின் "ஒரு கூடும் இரு முட்டைகளும்"**

கெக்கராவ ஸஹானாவின் "ஒரு கூடும் இரு முட்டைகளும்" விதவைப் பெண்ணையும் அவளுடைய வயது வந்த இரு பெண் பிள்ளைகளான ஷ்ப்ரினா, வஹிதா முதலானோரையும் மையமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவலாகும். சமூகத்தில் ஆண் துணையின்றி அல்லல்படும் பெண்நிலை குறித்துப் பேசும் இந்த நாவல் பெண்கள் பெண்களாக வாழவேண்டிய அவசியத்தைச் சுட்டி நிற்கிறது. அடிப்படை வசதிகளற்ற கிராமத்தில் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளையும் அந்தப் பிரச்சினைகளில் இருந்து பெண்ணானவள் மீண்டெழுந்து தற்துணிபுடன் வாழ முற்படுவதையும் சித்திரிக்கும் இந்த நாவல் மனித இருப்பின் வறுமையையும், துயரத்தையும் பெண்ணின் கையறு நிலையையும் சுட்டி நிற்கிறது.

**நஸ்பியா அஜித்தின் 'கண்ணீர்ப் பூக்கள்'**

நஸ்பியா அஜித்தின் 'கண்ணீர்ப் பூக்கள்' யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து போய் புத்தளத்தில் வாழ்க்கையைத் தொடங்கும் முஸ்லிம் குடும்பமொன்றின் துன்பியல் வாழ்வைச் சித்திரிக்கும் உண்மைக் கதையாகும். குடும்பத்தை அநாதரவாய் விட்டு விட்டு தந்தையார் இறந்துவிட அந்தக் குடும்பச் சுமையைத் தன்மேல் இருத்திக் கொண்டு வாழ்க்கைப் பாதையில் துன்பத்தை தவிர இன்பத்தையே காணாது குடும்பத்துக்காய் உழைத்து மாய்ந்த சில்மியாவின் கதையே "கண்ணீர்ப் பூக்கள்". வாழ்வில் தனித்து நின்று போராடும் ஒரு பெண்ணின் வாழ்வைச் சித்திரிக்கும் இந்த நாவல் 1990 களில் விடுதலைப் புலிகளால் யா/ ஒஸ்மானிய கல்லூரியில் வைத்து முஸ்லிம்கள் ஒட்டு மொத்தமாக யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற்றப்பட்ட பின்னர் அவர்கள் அனுபவித்த வாழ்வின் இன்னல்களையும் கூறிச் செல்கிறது.

**அகளங்களின் "அலைக்குமிழ்"**

அகளங்களின் 'அலைக்குமிழ்' என்னும் நாவல் இணைந்து வாழ முடியாத சந்திரா மோகன் என்னும் இரு உள்ளங்களின் காதலை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவலாகும். ஓமந்தை, கிளிநொச்சி முதலான பிரதேசங்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இந்த நாவல் ஆனந்தகும்மி சினிமா பாணியில் எழுதப்பட்ட கதையாகும். தனது நண்பன் சேகரின் வீட்டுக்கு வரும் மோகன் சேகரின் தங்கை சந்திராவைக் காதலிக்கிறான். நாவலின் இடையில் அவள் தன் தங்கை என அறியும் போது அவ்விரு உள்ளங்களிலும் இடம்பெறும் மாற்றங்களையும் சங்கடங்களையும் இந்த நாவல் எவ்வித விகற்பமுமற்று வெளிப்படுத்துகிறது.

**இரா. உதயணனின் "உயிர்காற்று"**

வன்னியூர் இரா.உதயணனின் 'உயிர்காற்று' கணவனை இழந்த கைம்பெண் நித்தியா கல்வி கற்று தன்னை நிலை நிறுத்த முனைந்த வேளையில் பாலியல் வல்லுறவுக்குட்பட்டு அவள் எதிர்கொள்ளும் வாழ்க்கைச் சிக்கல்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவலாகும். உறவை, வாழ்வை இழந்து குழந்தையும் கையுமாக வந்து நிற்கும் நித்தியாவுக்கு திலக் வாழ்வு கொடுப்பதாக எழுதப்பட்ட இந்த நாவல் யதார்த்தத்துக்கு அப்பாற்பட்ட ஓர் இலட்சிய சமூகத்தை சுட்டி நிற்கிறது.

**நீ.பி.அருளானந்தனின் "துயரம் சுமப்பவர்கள்"**

நீ.பி.அருளானந்தத்தின் "துயரம் சுமப்பவர்கள்" வவுனியாவின் சேரிப் பகுதியில் வாழும் மலசல சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கையையும் வீதிகளைப் பெருக்கி துப்புர



வாக்கும் ஏழைத் தொழிலாளர்களின் வாழ்க்கையையும் மையமாகக் கொண்டு எழுதப்பட்டது. இந்தத் தொழிலாளர்களுக்கும் சூசைப் பிள்ளையார் குளத்து மக்களுக்கும் இடையிலான உறவு முறைகள் குறித்தும் விளக்கும் இந்த நாவல் மலசலகூட சுத்திகரிப்பு செய்யும் இராமனது குடும்பத்துக்கூடாகவும் வீதி பெருக்கி துப்புரவு செய்யும் சிமியோன் திரேசா குடும்பத்துக்கூடாகவும் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வியலை யதார்த்த பூர்வமாகச் சித்திரிக்கிறது.

**சுலைமா சமி இக்பாலின் "ஊற்றை மறந்த நதிகள்"**

சுலைமா சமி இக்பாலின் "ஊற்றை மறந்த நதிகள்" கணவன் மனைவி பிணக்கை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட நாவலாகும். இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்தே பங்கெடுக்கும் கணவன், மனைவி உறவு ஆழமானது. அர்த்தபுஷ்டி நிறைந்தது. வலுவான அவ்வுறவு விட்டுக் கொடுப்பாலும் பரஸ்பர அன்புணர்வாலும் தீர்மானிக்கப்படுவது. இருவரில் ஒருவர் சந்தர்ப்ப சூழ்நிலையால் தவறு செய்தாலும் அதனை



மன்னித்து ஏற்றுக் கொண்டு வாழ்வதே இன்பம் என்பதைச் சித்திரிப்பதே இந்த நாவலின் கதைக் கருவாகும்.

**ச.அருளானந்தத்தின் "நெருங்கின பொருள் கைப்படவேண்டும்"**

ச.அருளானந்தத்தின் "நெருங்கின பொருள் கைப்படவேண்டும்" கட்டப் பறிச்சான் கிராமத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவலாகும். பல்கலைக்கழக வாழ்வும் பட்டப் படிப்பு முடிந்த பின் எதிர்கொள்ளும் வாழ்வும் இந்த நாவலில் உணர்வு பூர்வமாகப் பதிவு செய்யப்படுகிறது. இலங்கையின் கல்வி முறையைச் சாடி நிற்கும் இந்த நாவல் கட்டப் பறிச்சான் கிராமத்தில் நடைபெறும் கோயிற் சடங்கு முறைகளையும் உணர்த்தி நிற்கிறது.


போர் முடிந்த இன்றைய கால கட்டத்தில் அதில் இருந்து மீள முடியாது. அந்தச் சம்பவங்களைக் கருப்பொருளாகக் கொண்டே பெரும்பாலான ஈழத்து நாவல்கள் எழுதப்பட்டுள்ளன. தொடக்கம், மையம், முடிவு என்னும் அடிப்படையில் எழுதப்படும் இந்த நாவல்கள் புனைவுத் தன்மை மிக்க எளிய வாசிப்புக்கூடாகத் தன்னை நிலைப்படுத்துகின்றன. மரபுக் கட்டமைப்பில் இருந்து சிறிதும் விலகாத ஈழத்து நாவல்கள் எடுத்துரைப்பு முறைமையாலும் மொழியாலும் காத்திரமான நாவலாகத் தம்மை இனங்காட்டிக் கொள்ள முனைந்தாலும் மாற்று இலக்கிய மரபைத் தோற்றுவிக்கும் ஆற்றலின்றி புதிய தரிசனங்களுக்குள் உள்வாங்கப்படாத நேர்கோட்டு நாவல்களாகவே தம்மை இனங்காட்டுகின்றன. கதை சொல்லு முறைமை, கதைக்கு, தேர்வு செய்யும் பொருண்மை தொடர்ந்தும் ஒரே இலக்கில் பயணிக்குமேயானால் ஈழத்தில் காத்திரமான நாவல்களைக் காண முடியாது போகலாம். இன்றைய நவீன இலக்கியச் சூழலில் நாவலில் கட்டமைப்பு, அதன் வெளிப்பாடு புதிய பொருண்மைகளை உள்வாங்கி தன்னைத் தகவமைத்துக் கொள்ளுமாயின் கலா நேர்த்தியுள்ள இலக்கிய ரசனை மிக்க காத்திரமான நாவல்களைத் தரிசிக்கலாம் என்பதில் ஐயமில்லை.

(முற்றும்)

(வடமாகாண பண்பாட்டு விழாவில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை இது)

# புதன்பொய்கை

## எதிரி ஒழிந்தான்



ஒரு பெரிய காட்டிலே மான் ஒன்று வசித்து வந்தது. அந்தமானோடு நரி யொன்று நல்ல நட்புப் பாராட்டி வந்தது. வழக்கமாக நரிகளிடம் தந்திரபுத்தி நிறைந்து காணப்பட்டாலும் இந்த நரி அதற்கு விதி விலக்காகக் காணப்பட்டது. ஏனையவர்களுக்கு ஆபத்து வேளையில் உதவ, வேண்டுமென்ற நல்ல எண்ணமும் அதனிடம் நிறைந்து காணப் பட்டது. ஒரு நாள் மானும், நரியும் நீர் அருந்தும் பொருட்டு காட்டின் நடுவேயுள்ள குளத்துக்குச் சென்றன. அந்தக் குளம் மிகவும் ஆழ மானது. அத்துடன் அடியில் மோசமான சேற்றையும் கொண்டிருந்தது. இதனால் அந்தக் குளத்தினுள் தவறி விழுந்தவர்கள் உயிர் தப்புவது அரிதாகக் காணப்பட்டது. மானும், நரியும் இதை அறிந்திருந்ததால் குளத்தின் ஓரத்தில் நின்று நீரை அருந்தின. இதைக் குளத்தின் அருகே காணப்பட்ட பற்றைகளின் மறைவில் நின்ற புலியொன்று பார்த்துக் கொண்டிருந்தது. நன்கு கொழுத்த அந்த ஆண் மானை எப்படியாவது கொன்று தின்ன வேண்டுமென்ற ஆவல் அந்தப் புலியின் மனதில் தோன்றியது. ஆனால் பற்றைகளின் நடுவில் புலி பதுங்கி நின்றதை மானும், நரியும் அறிந்திருக்கவில்லை. நீரை அருந்திய பின்னர் தம்பாட்டில் சென்று கொண்டிருந்தன. புலி மானைக் கொல்வதற்கு இன்னொரு நாளுக்காகக் காத்திருந்தது.

அந்தக் காட்டில் கொடிய புலியொன்று இருப்பதை அறிந்த நரி அதனால் தனது நண்பனாகிய மானுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்து விடுமோ என அஞ்சியது. ஆனால் அது தொடர்பாக நரி மானுக்குத் தெரிவிக்கவில்லை ஆனால் எப்போதும் எச்சரிக்கையுடன் காணப்பட்டது.

ஒரு நாள் நீர் அருந்து வதற்கு மானும், நரியும் குளக்கரையை நோக்கிச் சென்று கொண்டிருந் தன. பற்றை மறைவில் நின்ற புலி இதனைக் கண்டு விட்டது. இன்று எப்படியாவது அந்த மானைக் கொன்று சாப்பிட்டே ஆகவேண்டு மெனத் தீர்மானித்துக் கொண்டது.



பற்றைகளின் அசைவுகளில் இருந்து புலி அங்கே நிற்பதை நரி புரிந்து கொண்டது. தனது நண்பனைக் காப்பாற்றுவதற்கான திட்டத்தையும் வகுத்துக் கொண்டது. அன்று வழக்கத்துக்கு மாறாகக் குளத்தினுள் சற்றுத் தூரம் இறங்கி நரியும், மானும் நீரை அருந்தின. பின்னர் கரையை அடையாது அங்கேயே நின்றன. வெகு நேரம் காத்திருந்ததால் பொறுமையிழந்த புலி நீருக்குள் நின்ற மானின் மீது வேகமாகப் பாய்ந்தது. ஆனால் நரி மானைப் பிடித்து இழுத்ததால் புலியின் குறி தவறியது. பாய்ந்த வேகத்தில் நீரில் வீழ்ந்து சேற்றில் மாட்டிக் கொண்ட புலி பின்னர் அதனால் வெளியே வர முடியவில்லை. சேற்றுக்குள் கிடந்து இறந்து போனது.

எதிரி ஒழிந்ததால் மகிழ்ச்சியடைந்த மானும், நரியும் தமது இருப் பிடங்களுக்குத் திரும்பிச் சென்றன.

சு.றிசானி, சுன்னாகம்



அ.றெமிங்கன்,தரம்–8சி
கொக்குவில் இந்துக் கல்லூரி



எஸ்.பிரகாவி
கோப்பாய் தெற்கு

## எங்கள் தமிழ்



மூல ஒலித் தமிழ் முந்திய முத்தமிழ்
கால நெடுங்கூரை கடந்திடும் பைந்தமிழ்
சீல முதற்றமிழ் செப்பிடும் செந்தமிழ்
கோல எழிற்றமிழ் கொண்டிரும் நம் தமிழ்
வீர நடைத் தமிழ் வென்றிடும் நற்றமிழ்
சார நயத்தமிழ் சான்றிடு சொற்றமிழ்
ஈர நிறைத் தமிழ் இனித்திடும் இன்தமிழ்
கூரறிவுத் தமிழ் கொஞ்சிடும் நம் தமிழ்
நாவலர் ஏற்றிடும் நல்ல நடைத் தமிழ்
பாவலர் பாடிடும் பாங்குடைப் பாத்தமிழ்
காவலர் போற்றிடும் கவினுறு மாத்தமிழ்
பூவலம் வந்து வேற் புண்ணிய பூந்தமிழ்
தூய நெறித் தமிழ் துலங்கு தெய்வத் தமிழ்
ஆய கலைத் தமிழ் ஆயும் உயிர்த்தமிழ்
தோயு கலைத் தமிழ் தொன்மை மிகு தமிழ்
வாயும் இனித் திடும் வண்டமிழ் எம் தமிழ்

ச.புருஷோத்தமன்,
முத்துஜயன்கட்டு அ.த.க.பாடசாலை.

## பொது அறிவு

- தமிழ் தாத்தா எனப் போற்றப்படுபவர் யார்?
  டாக்டர் உ.வே.சாமிநாதஐயர்
- ஜப்பான் நாட்டின் தேசிய பறவை எது?
  கோழி
- உலகிலே சர்க்கரைக் கிண்ணம் என அழைக்கப்படும் நாடு எது?
  கியூபா
- மரகதத் தீவு என அழைக்கப்படும் நாடு எது?
  அயர்லாந்து
- ஜேர்மனியின் தலைநகரம் எது?
  பேர்ளின்

ர.கலைவாணன், தரம்–6
இமையாணன் அ.த.க. வி.

## தெரிந்து கொள்வோம்

| | |
|---|---|
| நீரிலே உருவாகும் பூ<br>நீராலே அழியும் பூ | உப்பு |
| வாயிலே மலரும் பூ<br>வந்து வந்து மறையும் பூ | சிரிப்பு |
| அவனியிலே தேவையாம் பூ<br>இறைவனுக்குப் பொருளான பூ | அன்பு |
| தண்டனைக்குரிய பூ<br>தவறுக்கு ஒத்த பூ | தப்பு |
| நண்பனிடம் கொள்ளும் பூ<br>நல்லவரிடம் காட்டும் பூ | நட்பு |
| தேய்ந்து அழியும் பூ<br>தேயும் வரை தேடும் பூ | செருப்பு |
| உளவு பார்க்கும் பூ<br>உமிழ்நீரை வெளியேற்றும் பூ | துப்பு |

நா.ஸ்ரீகிருஷ்ணா, தரம்–6ஏ,
யாழ்ப்பாணக் கல்லூரி.

# 'பரிசுத் தெரிவுப் படைப்புகளின் வீக்க தூக்கங்கள்'

■ தேவி பரமலிங்கம்

சூரிய சக்தியால் பூவுலக ஜீவராசிகள் அனைத்தும் வாழ்வியலை மேற்கொள்கின்றன. அந்தச் சூரியனின் நாமங்களில் உதயனும் ஒன்றே!

அந்த உதயனெனும் சூரிய சக்தியைக் கவர்ந்து காந்தி வாழும் மூலிகைத்தாவரம் சூரியகாந்திச் செடி. அந்தப் பெயரில் உதயன் நாளிதழின் வார மலர் ஞாயிற்றுக்கிழமைகளில் இணைப்பிதழாக வந்து கொண்டிருப்பதை வாசகர்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டியதில்லை.

முன்னர் 'சஞ்சீவி' என்னும் மூலிகைப் பெயரில் உதயனின் வார வெளியீடு வெளிவந்து கொண்டிருந்ததை ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.

உதயன் ஒரு செய்திப் பத்திரிகையாகவே காலடி வைத்தது. குடாநாட்டில் சமகாலத்தில் நான்கு தினசரிகள் வெளிவந்து கொண்டிருப்பது எம்மக்களின் வாசிப்பு, தகவல்ளை அறியும் பாங்கை வெளியுலகுக்கு எடுத்துச்செல்லும் அதேவேளை மாகாணங்கள் மட்டில் வடமாகாணத்தைத் திரும்பிப் பார்க்கவும் வைத்துக் கொண்டிருக்கிறது என்றால் மிகையில்லை.

அவற்றில் உதயனின் ஊடகப் பணி வியக்கத்தக்கது. ஆட்சிக்கு அஞ்சி ஒடுங்காமல் செய்திகளை வெளியிட்டு துணிகரச் செய்தி இதழுக்கான பரிசை வெளிநாடுகளிலும் பெற்றிருப்பதும் சுட்டிக் காட்டத்தக்கவை.

இதற்கும் மேலாக இலக்கியப் பணியிலும் குடாநாட்டு இதழ்களில் முன்னணி வகிப்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் 'சூரியகாந்தி' எமது இலக்கியங்களையும் படைப்பாளிகளையும் வளர்க்கவும், ஊக்குவிக்கவும் முன்வந்துசெயற்படுகின்றது.

15.06.2014 ஆம் திகதிய 'சூரிய காந்தியில் பத்து வாரங்களுக்கு பரிசு கொட்டும் என்னும் அறிவிப்புடன் 2000 ரூபா பரிசு பெறும் சிறுகதையும் ஆயிரம் ரூபாவுக்குத் தெரிவான கவிதையும் வெளிவந்திருந்தன. இதைப் பற்றி ஆசிரியருடன் அளாவளாவிய போது, எதிர்பார்த்த அளவுக்கு தரமான சிறுகதைகளும், கவிதைகளும் வந்து சேர்வதில்லை என்றார்.

எந்தப் படைப்பாளிகளாலும் முதலில் உருவாக்கப்படும் படைப்புகள் தரமானவையாக அமைவதில்லை. மிக அருமையாக ஒரு சிலரால் படைக்கப்படும் விடயங்கள் தரமானதாய் அமைவதுடன் ஆரம்பப் படைப்பே போட்டிகளில் முதல் பரிசைத் தட்டிக் கொண்டதுமுண்டு.

எனக்குத் தெரியக் கூடியதாக பின்நாளில் மக்கள் எழுத்தாளரெனப் பெயர் பெற்ற ஜே.டானியல் சுதந்திரன் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசை பெற்றுக் கொண்டே எழுத்துலகில் நுழைந்தார்.

ஆரம்பஎழுத்தாளர்களின்படைப்புகளை வெளியிடுவதன் மூலம் அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி பிற்காலத்தில் நல்ல சிருஷ்டியாளனை உருவாக்கலாம் 'உதயன்' வார இதழ், சூரிய காந்தி'யால் உருவாக்கப்பட்ட எழுத்தாளர்கள் அனந்தம். 'ஈழகேசரி', 'ஈழநாடு காலங்களுக்குப் பிற்பாடு குடாநாட்டில் உதயனின் சூரியகாந்தியே தேறுகிறது. 'சூரியகாந்தி' அறிவித்த 10 சிறுகதைகளையும், 10கவிதைகளையும் சீர்தூக்கிப் பார்ப்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

எழுந்தமானமாக இல்லாமல் ஒவ்வொன்றையும் நோக்குவதானால் மேற்கூறிய படைப்புகளை மூன்று அலகுகளில் உட்படுத்தியே ஆகவேண்டும். மூத்த– இடைக்கால –புதியவர்கள். இந்த ஒழுங்கில்சீர்தூக்கல்அமைகிறது. இதுவரையில் ஐந்து சிறுகதைகளும், ஏழுகவிதைகளும் தெரிவு செய்து பரிசுத் தொகையும் அறிவித்து வெளியிடப்பட்டுள்ளன. மேலும் மூன்று கவிதைகளும், ஐந்து சிறுகதைகளும் தெரிவிக்குட்படுத்தப்படவும் உள்ளதாகவும் அவற்றைப் பின்பாகப் பார்க்கலாமெனவும் ஆசிரியர் தெரிவித்தார்.

இப்போது பரிசுக்குத் தெரிவான ஐந்து சிறுகதைகளிலும் மூன்று கதைகள் மிருசுவில் தமிழ்த்தாசன் சி.கதிர்காமநாதன், கண. மகேஸ்வரன் ஆகிய பரிச்சயமான எழுத்தாளர்களாலும், ஏனைய இரண்டும் ரி.கேமா, முல்லைக் கஜன் ஆகிய புதிய வரவுகளாலும் எழுதப்பட்டுள்ளன.

கவிதைகளில் ஏழுபேர்களில் ஒருவர் பண்பட்ட கவிஞரான அன்னைதாஸன். ஏனைய ஐவர் புதிய வரவுகளாகவும் தென்படுகின்றனர். அவர்களில் ப.கோகிலராஜ் இரு முறைகள் தெரிவாகியுள்ளார். மற்றைய இ.மத்தியூஸ் டியோனி, த.கலைவாணி, திருமதி கி.தவபாக்கியம், பாவரன் என்பவர்கள் புதியவர்களே!

இனி முதலில் சிறுகதைகள் வெளிவந்த ஒழுங்கில் நோக்குவோம். மிருசுவில் தமிழ்தாசன் எழுதிய 'மனநோயாளிகள்' சிறுகதை 'சூரிய காந்தி'யின் பரிசுப் போட்டியில் முதலாவதாக 2,000 ரூபாபரிசைத் தட்டிச் சென்றுள்ளது. 15 வருடங்களுக்குப் பிற்பாடு வெளிநாட்டால் வந்துள்ள நண்பன் சுமனை தன்னுடைய சுயநலம்கருதி வரவேற்கரகு 10ஆயிரம் ரூபா கடன்பட்டு சமைச்சு, குடிவகை எடுத்து வைத்தும் ஏமாறுகிறான்.

சமையலுக்கு உதவி செய்ய வந்த ஷர்மிலன், நந்தன் இருவருக்கும் குடிக்கு ஏதுவாக பொரியல், கரியல் சாப்பிடவும் வாய்ப்பாகின்றது. பத்துச் சதத்துக்கும் வழியில்லாத ரகு, சுமன் ஒருவனுக்காக கடன்பட்டுச் செலவழிப்பது தேவைதானா?

வெளிநாட்டில் உழைத்து வந்த பணத்தில் தன்னைக் கவனிப்பான் எண்ட நப்பாசைதான். இவ்விதம் இரண்டு சனிக்கிழமைகளில் ஆக்கியதுகளில் அயலட்டைக்கும் சுவறுகிறது.

இரண்டாவது சனிக்கிழமை வந்த சுமன் இலேசாக வாயை மதுவில் நனைச்சு 'நாளைக்குப் பின் நேரம் வீட்டை வா... போகட்டே' ஒண்டுமே கொடுக்காமல் போனதும் மனைவி தேவகியிடம் ரகு 'நாளைக்கு வரச் சொல்லித்தான் போறான் நாளைக்குத்தான் ஏதோ தரப் போறான்' எண்டு சமாளிக்கிறான்.

மறுநாள் சந்தித்த ரகுவிடம் சுமன் 'கோடி கோடியாய் உழைச்ச பணத்திலை ஊருக்கேதாவது செய்ய வேணுமெண்டு கூறுகையில்; பெருமிதம் அடைந்த ரகு மடத்தில் பெரியவர்களோடு ஒன்று கூடி விவாதித்த முடிவில் 'உதெல்லாம் அரசு செய்ய வேண்டிய வேலை' எனக் கூறி எழும்பி நடக்கிறான் சுமன்.

அதன் பின்பும் கொழும்புக்குச் சென்றவன் வந்து கவனிப்பானென ரகு மனப்பால் குடித்ததே கடைசியில் உண்மையாகிறது. தொலைபேசியில் தொடர்பெடுத்த ரகுவுக்கு, சுமன் பிளைட் ஏற நிற்பதாக கூறியதற்கு அவன் இங்கை சொன்ன கதைகளைக் கேழெட்டு வருசங்களால வரேக்க பாப்பம்' என்கிறான். அதன் பிற்பாடே ரகுவுக்கு இப்படித் 'திரில்' விடுவதும் ஒரு நோயெண்ட ஞானோதயம் பிறக்கிறது. சுமனை மனநோயாளியாகக் கணித்த ரகு தன்னுடைய மனநோயை உணர்ந்ததாகக் கதை சுட்டவில்லை.



எதார்த்தவாத அமைப்பில் கதை சொல்லப்பட்டுள்ளது. கதையைச் சொல்லி நகர்த்த தமிழ்தாசனுக்கு எழுத்து நடை நன்றாகவே வசமாகியுள்ளது. மெல்லிய நகை மொழியில் படைத்துள்ள ஆசிரியரின் ஏனைய கதைகளும் இதே பாணியில் அமைவதைக்கவனித்துள்ளேன். தமிழ்தாசன் தொடர்கதை நாவல் எழுதுவதற்கு முயற்சிக்கலாம். அதற்கான விசாலக் களங்களைத் தெரிவு செய்து எழுத லாவகமாக கைவரும் எழுத்து நடை இவருக்குக் கை கொடுக்கும்.

அடுத்துப் பரிசைத் தட்டிச் சென்ற சிறுகதை ரி.கேமாவின் புதிய பாடம். கதை பாடசாலை, வகுப்பு, மாணவர், கற்பித்தல், மாணவரின் வருகை சம்பந்தமாகச் சுற்றிச் சுழல்கிறது. அதனிடையே கிராமச் சூழலும் மாடு வளர்ப்பும் இணைகின்றன.

அதேவேளை பொலிஸ் நிலையம் போன்ற அலகுகள் சொல்லப்படுகையில் கிராமத்தை விட்டுச் சற்றே விலகிப் போவதாகவும் உணரலாம்.

சுதன் என்னும் மாணவன் இரு தினங்களாக பாடசாலைக்குத் தாமதமாக வருவதால் அதற்கான காரணத்தை அறிய முற்படும் ஆசிரியை ஷீலா, முடியாததால் ஆத்திரப்பட்டு நடவடிக்கை எடுக்க முயலுகிறாள்.

மாணவன் சுதன் காலம் தாழ்த்திப் பாடசாலைவருவதற்கு காரணமாக மாடு வளர்ப்பு, தொலைதல், கன்று பாலில்லாமல் தவிப்பதைக் கண்டு மாட்டைத் தேடுதல், பொலிஸ் நிலையத்தில் மாடு கட்டப்பட்டு நிற்றல் ஆகிய சம்பவக் கோர்வை கதையில் சொருகப்படுகின்றன. ஆசிரியையின் முயற்சி யதார்த்தமானது. மாணவன் காரணத்தை கூறாமல் மறைத்தல் யதார்த்தமாகாது. கதாசிரியை கேமா கதை முடிவில் வியப்பைக் கொடுத்து மாணவன் மீது ஆசிரியை பச்சாதாபப் பட்டு அழைத்துச் செல்வதாகக் கதை முடிகிறது. கதை விடுவதுக்கு இவ்வுத்தி சாத்தியமானதே! கதை சொல்வதற்கு கதையதன் போலித்தன்மை வெளிப்படுகிறது. அதைக்கதை பண்ணல் என்பர்.

கதையை நகர்த்த கதை சொல்லி கையாண்ட மொழி நடையும் பொருந்தவில்லை. புதியவர் வளர்ப்பவர் சிறுகதைகளை குறிப்பாக ஈழத்துச் சிறுகதைகளை அதிகமாக வாசிப்புக்கு உள்ளாக்கப் பரிந்துரை செய்யலாம்.

அடுத்து சி.கதிர்காமநாதனின் 'காதில் கேட்கும் சத்தம்' சிறுகதையை நோக்குவோம். கதாசிரியர் கதை சொல்வதில் பரிச்சயமுடையவர். அவரது அநேகமான கதைகளில் நகைச்சுவை இழையோடும் அதற்காகவலிந்து கதையோடு புதினங்களுக்குரிய சிலேடைகளைப் புகுத்தி எழுதுவார். 'காதில் கேட்கும் சத்தம்' கதையை அவ்வித இடையூறுகள் செய்யாமல் அழகாக விவரணங்களோடு நகர்த்திச் செல்கிறார். அவர் சொன்ன கதை கடந்த மூன்று தசாப்தங்களாக தமிழ் மக்கள் பட்ட அவலங்களைச் சுட்டுவதுடன் பிரச்சினையையும் பூடகமாகக் கோடிட்டுக் காட்டியுள்ளது.

யானைகள் வருவதும், புலிகள் உறுமுவதும் உருவகமாகக் கையாளப்படுகின்றது. பழைய தலைமுறைக்குச் சிவசம்புக் கிழவனதும், இளையோருக்கு தாசனும் மாதிரிக்காய்கள்.

வரலாற்று ரீதியாக மக்கள் வாழ்வியலை வேட்டையாடும் பிரச்சினைக்கு புதிய நடைமுறை கையாளப்பட வேண்டுமென ஆசிரியர் குறிப்பிடும் ஒலிபரப்புச் சாதனங்கள் உருப்படியாக அடிப்படைப் பிரச்சினையை தீர்க்கவல்ல ஆயுதமாக ஏற்க முடியவில்லை.

எனினும் பாதிப்புக்கு உள்ளாகும் மக்கள் தற்காலிகமாகக் கையாளும் தந்திரோபாயமாய் மட்டும் எடுத்துக் கொள்ளலாம். அனுபவ எழுத்து இயல்பாகவே வந்துள்ளது. இந்தப்பாணியை வளர்த்து வந்தால் எழுத்துலகில் நல்லபெயரைச் சம்பாதிக்கலாம்.

'கூடு' முல்லைக்கஜன் எழுதிய சிறுகதை. இரண்டு கதைகளைச் சொருகிப் பண்ணப்பட்ட கதையாக அமைகிறது.

"அப்பா நான் பார்ப்பன், ஆனால் நீங்கள் மட்டும் இப்பிடிக்கதைக்க... என்னால தாங்கேலாதாம்.."

அருணின் பிஞ்சுமனம் அடிக்கடி இவ்வாறு வெதும்பிக் கொள்வதுண்டு. கதையை அமைத்துள்ள எட்டுக்களங்களிலும் முதல் மூன்றாம் களத்தில் கடைசியாக மேலே காட்டப்பட்ட பந்தியுடன் ஒரு கதை முடிகிறது.

நான்காம் களத்தில் வன்னிப் பகுதியை போர்மேகங்கள் மெல்ல மெல்ல சூழ்ந்து கொள்ளலாயின. எனும் வரிகளுடன் மறு கதை ஆரம்பிக்கின்றது.

கடைசி எட்டாம் களத்தில் "அண்ணா". தங்கையின் அலைக் குரல் அடங்கியது. இருள் மெல்லச் சூழ்ந்து கொண்டது என்னும் வரிகளுடன் கதை நிறைகிறது.

ஏழாம் களத்தில் "கீச்... கீச்.. கீச்.. கீச்' குருவிச் சத்தத்தை இணைப்பதூடாக ஆசிரியர் இரண்டு கதைகளுக்கும் இணைப்பை ஏற்படுத்த எடுத்த முயற்சி தோல்வி அடைந்துள்ளது. கதையை அவதானித்து வாசிப்புக்கு உள்ளாக்குகையில் இரு கதைகளைச் சொருகி இருப்பது புலனாகும். முன் கதைச் சம்பவங்களுக்கு, முன்பாக வன்னிப் பகுதியை சொல்லி முன்சொன்ன சம்பவங்களை இணைத்திருந்தால் நனவோடை உத்தியைக் கையாண்டு பண்ணப்பட்ட ஒரு நல்ல சிறுகதையாக அமைந்திருக்கும்.

கதாசிரியர் புதியவராதலால் இவ்வாறு ஆகியுள்ளது. கதை சொல்லும் முறை, சொற்பிரயோகங்கள் ஆசிரியருக்கு நன்றாகவே கைவருகிறது. 'கூடு' கதை சொன்ன உத்தியை மாற்றி அமைக்க இன்னும் காலம் போய் விடவில்லை.

தொகுதியில் இணைக்கும் தருணத்திலும் செய்து கொள்ளலாம். எழுதுவதை முல்லைக் கஜன் தொடர ஆசிகள்.

'வீதியோரத்தில் புளிய மரம்' கண.மகேஸ்வரனின் கதையைப் பார்க்கலாம். இருபது வருடங்களாக வீதியோரத்தில் பெருவிருட்சமாக நின்ற புளிய மரமொன்று தன்னை அடியோடு வெட்டி அழிக்க வந்திருக்கும் நிமிடத்தில் பலவற்றையும் நினைப்பதாகக் கதை செய்யப்பட்டுள்ளது.

(தொடரும்)

04 DEC 2014

# சகல தரப்பினரையும் ஈர்க்கும் வகையில்




எஸ்.தர்ஷனன்

இசையின் தோற்றமும் அதன் வளர்ச்சி நிலையும் இன்று உலகளாவிய நிலையில் அனைவராலும் அறியப்பட்டு வரும் ஒரு விடயமாகக் காணப்படுகின்றது.

உலக இசை வகைகளுள் மெலடி, ஹார்மானி, பாலிபோனி என மூன்று வகையான இசைகளுக்கு ஒவ்வொரு தனிப் பாணி உண்டு. நாடு, கிராமம், மொழி, சமயம், இனம் என்ற வகையில் இசை வேறுபட்டுச் செல்லும். எனினும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக இசை காணப்படுகின்றது.

தென்னிந்திய மற்றும் இலங்கைத் தமிழ் மக்களால் பின்பற்றப்படுவது கர்நாடக இசை முறையாகும். வட இலங்கையில் 2008–2009 ஆம் ஆண்டுகளின் பின்னர் ஏற்பட்ட சமூக மாற்றங்களாலும், அதிகரிக்கப்பட்ட வெளியுலகத் தொடர்புகளினாலும், அதனால் ஏற்பட்ட இலத்திரனியல் சாதனங்களின் அதீதமான பயன்பாட்டினாலும் கர்நாடக இசையின் நிலையிலும் மாறுதல்கள் ஏற்பட்டன. மக்களின் கர்நாடக இசை ரசனையிலும் எதிர்பார்ப்பிலும் கணிசமான அளவு மாறுதல்கள் ஏற்பட்டன. அம்மாற்றங்கள் கர்நாடக இசையைக் கற்றவர்களிடையே வித்தியாசமாகவும், கர்நாடக இசையைக் கற்காத, ஆனால் அதனை ரசிக்கும் ரசிகர்களிடையே வேறுவிதமாகவும் உள்ளன. கர்நாடக இசை கற்காத கர்நாடக இசை ரசிகர்களே அதிகமாக உள்ளதால், அவர்களது நிலை பற்றியே இந்த ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

கர்நாடக இசைக் கச்சேரிகளின் போது கர்நாடக இசை கற்றவர்களுக்கும் கர்நாடக இசையைக் கற்காதவர்களுக்கும் இடையில் இசையை ரசிக்கும் தன்மையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இரு தரப்பினரதும் ரசனையும் ஒன்றுக்கொன்று ஒத்துப் போவதில்லை.

**ஆய்வின் நோக்கம்**

கர்நாடக இசை நிகழ்வுகளின் போது இசை கற்றவர்களும் இசை கற்காதவர்களும் அந்த நிகழ்வுக்குச் செல்கின்றார்கள். அந்தச் சந்தர்ப்பங்களில் எல்லா வகையிலான கர்நாடக இசைப் பாடலையும் இரு தரப்பினரும் ரசிக்கும் தன்மையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு சாராரும் ஒவ்வொரு விதமாகக் கணிப்பிடுகின்றனர். இதனால் கர்நாடக இசைக் கச்சேரிகள் களை கட்டாத நிலையும் ஏற்படுகின்றது. இதற்கான காரணங்களை அறிவதையும் இசை கற்றவர்களும் இசை கற்காதவர்களும் ஒரு கர்நாடக இசைப் பாடலை அளவிடும் தன்மையை அறிவதையும் நோக்காகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**கருதுகோள்**

கர்நாடக இசை கற்றவர்களும் கர்நாடக இசையைக் கற்காதவர்களும் இசையை அளக்கும் அளவுருக்கள் ஒத்தவையாக இல்லை.

**ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வு குழுநிலைக் கலந்துரையாடலின் மூலமும், பேட்டி காணலின் மூலமும், நேரடி அவதானிப்பு முறை மூலமும் மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வின் பங்கேற்பாளர்கள்**

யாழ்ப்பாண இசை கற்ற, கற்காத மக்களும், யாழ். பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைக் கழக 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் வருடமாணவர்களும், இந்த ஆய்வில் பங்குபற்றியோராவர்.

**ஆய்வு உபகரணங்கள்**

நேரடி அவதானிப்பு முறை, குழு நிலைக் கலந்துரையாடல், நேர் காணல் முறை என்பன இந்த ஆய்வின் கருவிகளாகும்.

**ஆய்வின் பெறுபேறுகள்**

இந்த ஆய்வுக்கான தகவல்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, இராமநாதன் நுண்கலைக்கழக 1 ஆம், 2 ஆம், 3ஆம், 4ஆம் மாணவர்களை வைத்தும் யாழ்ப்பாண மக்களை வைத்தும் பெறப்பட்டதாகும்.

ஒரு கர்நாடக இசைக் கச்சேரியில் பிரதான உருப்படிக்கு முன்னுள்ள பகுதியை கர்நாடக இசை கற்றவர்களில் 6 வீதமானவர்களும், கர்நாடக இசையைக் கற்காதவர்களில் 4 வீதமானவர்களும் விரும்பியிருந்தனர். கர்நாடக இசைக் கச்சேரியின் பிரதான உருப்படியை கர்நாடக இசை கற்றவர்களில் 70 வீதமானவர்களும் கர்நாடக இசையைக் கற்காதவர்களில் 6 வீதமானவர்களும் விரும்பியிருந்தனர். கர்நாடக இசைக் கச்சேரியின் பிரதான உருப்படிக்குப் பின்னுள்ள பகுதியை கர்நாடக இசை கற்றவர்களில் 24 வீதமானவர்களும் கர்நாடக இசையைக் கற்காதவர்களில் 90 வீதமானவர்களும் விரும்பியிருந்தனர்.

**பகுப்பாய்வு**

இந்த ஆய்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, இராமநாதன் நுண்கலைக்கழக 1 ஆம், 2 ஆம், 3ஆம், 4ஆம் ஆண்டு இசை, நடன, சித்திரமும் வடிவமைப்பும் துறை மாணவர்களை வைத்தும், இசை கற்காத பொது மக்களை வைத்தும் மேற்கொள்ளப்பட்டதாகும்.

இந்த ஆய்வுக்காக கர்நாடக இசை கற்கும் யாழ். பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைக் கழக, இசைத்துறை மாணவர்கள் 50 பேரும், யாழ். பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தைச் சேர்ந்த, கர்நாடக இசையைப் பிரதான பாடமாகக் கற்காத நடன, சித்திரமும் வடிவமைப்பும் துறை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் 50 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

கர்நாடக இசைக் கச்சேரிகளில் பிரதான உருப்படிக்கு முன்னுள்ள பகுதி வர்ணம், கீர்த்தனை, சௌக்க காலக் கிருதி போன்றவற்றைக் கொண்டிருக்கும். இந்தப் பகுதியை கர்நாடக இசை கற்றவர்கள், கர்நாடக இசையைக் கற்காதவர்களில் 5 வீதமானவர்கள் விரும்பியிருந்தனர்.

கர்நாடக இசை நிகழ்வுகளில் கர்நாடக இசைக் கச்சேரியின் பிரதான பகுதி எடுத்துக் கொண்ட கீர்த்தனைக்கு ராகம், நிரவல், கற்பனாஸ்வரம், குறைப்பு, முத்தாய்ப்பு, தாள வாத்தியங்களின் தனி ஆவர்த்தனம் வாசித்தல் என்பவற்றை உள்ளடக்கி இருக்கும். இந்த ஆய்வின் படி கர்நாடக இசை கற்றவர்கள், கற்காதவர்களில் 38 வீதமானவர்கள் இந்த மனோதர்மப் பகுதியை விரும்பியிருந்தனர்.

கர்நாடக இசைக் கச்சேரிகளில் பிரதான உருப்படிக்குப் பின்னுள்ள பகுதியில் இராகமாலிகை, விருத்தம், பதம், ஜாவளி, அஷ்டபதி, தரங்கம், மெல்லிசைப் பாடல்கள், தில்லானா, திருப்புகழ் போன்றவை உள்ளடங்கியிருக்கும். இந்தப் பகுதியைக் கர்நாடக இசையைக் கற்றவர்கள் கர்நாடக இசையைக் கற்காதவர்களில் 57 வீதமானவர்கள் விரும்பியிருந்தனர். இந்த மூன்று பகுதியிலும் அனேக மக்களது விருப்பமாக கர்நாடக இசையின் பிரதான பகுதிக்குப் பின்னுள்ள பகுதியே காணப்படுகின்றது.

கர்நாடக இசையைக் கற்றவர்களிடம் கர்நாடக இசைக் கச்சேரிகளில் ஒரு பாடலை நல்ல பாடல் என்று அவர்கள் சொல்லும் அளவுக்கு அந்தப் பாடலில் வெளிப்படும் அம்சங்கள் எவையெனக் கேட்டறியப்பட்டது.

கர்நாடக இசையைக் கற்றவர்கள் கூறிய கருத்துக்கள்:

1. சுருதி விலகாதிருத்தல்
2. தாளம் விலகாதிருத்தல்
3. ரசனையுடைய ராகங்களில் அமைந்த பாடல்கள்
4. பாடுபவரின் குரலின் கவர்ச்சித் தன்மை
5. பிருக்காக்களைக் கையாளும் தன்மை
6. மேல்ஸ்தாயியில் மிகவும் தெளிவுடன் பாடும் தன்மை
7. குழைவு

கர்நாடக இசை கற்றவர்களும் ஒரு கச்சேரியை நல்ல கச்சேரி என்று சொல்லும் அளவுக்கு ஒரு கர்நாடக இசைக் கச்சேரியில் இருக்க வேண்டிய அம்சங்களாகக் கருதியவை.

1. பக்கவாத்தியங்களுடனான கச்சேரி
2. உருப்படிகள் இலகுவானதாக இல்லாமல் கனமான உருப்படிகளைக் கச்சேரிகளில் கையாளுதல்.
3. பிரதான உருப்படியாகத் தெரிவு செய்யும் உருப்படி அமைந்துள்ள ராகம்
4. பிரதான உருப்படிக்கு ராகம் பாடும் நேரம் நீண்டதாக இருத்தல்.
5. கற்பனாஸ்வரங்களில் கணக்குக் குறைப்பு, முத்தாய்ப்பு, மோறா என்பவற்றைக் கையாளும் திறன்.
6. பாடகரின் பிரபல்யம்
7. பாடகரின் குரல்வளம்
8. பக்கவாத்தியக் காரர்களின் பங்களிப்பு
9. பாடகரின் சொற்தெளிவு
10. கச்சேரி மேடையின் அமைப்பு
11. கச்சேரி ஒலிவாங்கி ஒலியமைப்பின் தெளிவுத் தன்மை.

ஒரு பாடலை நல்ல பாடல் என்று கருதுவதற்கு பாடலில் அமைந்துள்ள அம்சங்களாக கர்நாடக இசையைக் கற்றவர்களும் கர்நாடக இசையைக் கற்காதவர்களும் கருதுபவை:

1. பாடல் அமைந்துள்ள ராகம்
2. பாடலின் மொழி
3. மட்டுப்படுத்தப்பட்ட வரிகள்
4. சங்கதி அமைப்பு
5. சிட்டைஸ்வரங்கள்
6. பாடலின் கருத்து

கர்நாடக இசையைக் கற்காதவர்களிடம் ஒரு கர்நாடக இசைக் கச்சேரியில் ஒரு பாடலை நல்ல பாடல் என்று அவர்கள் சொல்லும் அளவுக்கு அந்தப் பாடலில் வெளிப்படும் அம்சங்கள் எவையெனக் கேட்டறியப்பட்டது. கர்நாடக இசையைக் கற்காதவர்கள் கூறிய கருத்துக்கள்.

1. பாடல் மெல்லிசைப் பாணியில் அமைந்திருக்க வேண்டும்.
2. ஓரளவு வேகமான நடையில் அமைந்த பாடலாகக் காணப்படவேண்டும்.
3. பாடலின் கருத்து விளக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
4. பாடல் அமைந்த மொழி தெலுங்காகவோ, சமஸ்கிருதமாகவோ இல்லாமல் தமிழாக இருத்தல் வேண்டும்.
5. பாடலின் இசை மனதை வசீகரிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
6. பாடலை இயற்றியவரின் பிரபல்யம்.
7. நல்ல இசையமைப்பில் அமைந்த பாடல்.

கர்நாடக இசைக் கச்சேரியை நல்ல கச்சேரி என்று கர்நாடக இசை கற்காதவர்கள் சொல்லும் அளவுக்கு அவர்களால் அந்தக் கச்சேரியில் உணரப்பட்ட விடயங்கள்.

1. பாடகரின் குரல்வளம்
2. பிடித்தமான பாடகர்
3. மனோதர்மப் பகுதிகள் இல்லாத கச்சேரி
4. பாடல்கள் மிதமான வேகமான நடையில் இருத்தல்
5. பாடல்களின் மொழி விளக்கக் கூடியதாக இருத்தல்.
6. நேரம் குறுகிய அளவில் இருத்தல்.
7. மெல்லிசை மெட்டில் அமைந்த கர்நாடக இசைப் பாடல்களாக கச்சேரிப் பாடல்கள் அமைந்துள்ளமை. (யாழ்ப்பாண மக்கள் 2014)

கர்நாடக இசை கற்ற மக்கள் ஒரு கச்சேரியை அளக்கும் விதமும் கர்நாடக இசையைக் கற்காதவர்கள் ஒரு கர்நாடக இசைக் கச்சேரியை அளக்கும் விதமும் வேறுபட்டனவாகக் காணப்படுகின்றன. ஒரு கச்சேரியைக் குறுகிய நேரத்துக்குள் முடிப்பதையும் மனோதர்மப் பகுதியே இல்லாத கச்சேரியையுமே கர்நாடக இசையைக் கற்காதவர்கள் விரும்புகின்றனர். ஆனால் கர்நாடக இசையைக் கற்றவர்கள் கச்சேரியின் பிரதான உருப்படியில் ராகம் பாடும் நேரம், நிரவல், கணக்கு வழக்கு என்பவற்றையும் மிக முக்கியமாக எதிர்பார்க்கின்றார்கள்.

கர்நாடக இசையைக் கற்றவர்கள் கர்நாடக இசைப் பாடல்களின் மொழி தெலுங்கோ, கன்னடமோ, சமஸ்கிருதமோ, மலையாளமோ எதுவாக இருந்தாலும், ராகங்களின் அமைப்பையும் உருப்படிகளின் பெறுமதித் தன்மையையும் மட்டுமே கச்சேரிகளில் கவனிப்பார்கள். ஆனால் கர்நாடக இசையைக் கற்காதவர்கள் ஒரு கர்நாடக இசைப்பாடலைக் கேட்பார்களாக இருந்தால் மொழி அவர்களுக்கு விளங்கக் கூடிய வகையில் தாய் மொழியாகிய தமிழிலே அமைந்திருப்பதையே விரும்புகின்றார்கள். (யாழ்ப்பாண மக்கள் 2014)

(தொடரும்)

(வடமாகாண பண்பாட்டு விழாவில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை இது)

# புதன்பொய்கை





## தேசிய வாசிப்பு மாதப் போட்டிக்கான வவுனியா நகரசபையின் பரிசளிப்பு விழா

வவுனியா நகரசபையும் பொது நூலகமும் இணைந்து தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்திய போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை காலை 9 மணியளவில் நகரசபை கலாசார மண்டபத்தில் நகரசபையின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரனும், கௌரவ விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வட மாகாண சபை உறுப்பினர் எஸ்.லிங்கநாதன், வவுனியா நகரசபையின் முன்னாள் உப நகர பிதா க. சந்திரகுலசிங்கம், வவுனியா பிரதேச சபைகளின் செயலாளர்கள், இந்து இளைஞர் சங்கத் தலைவர் எஸ்.சேனாதிராசா, வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் எஸ்.சந்திரகுமார், மற்றும் வாசகர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், நகரசபை மற்றும் பொது நூலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் பாடசாலைகளிலும், புது வாழ்வுப் பூங்கா மற்றும் கோயில்குளம் அகிலாண்டேஸ்வரி சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. தொடர்ந்து தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்திய போட்டிகளுக்கான பரிசில்களுடன் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய 14 பாடசாலைகளைச் சேர்ந்த 42 மாணவர்களுக்கான வங்கிக் கணக்குகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (வ-402)



## பொன் விழாவில் கால்பதிக்கும் திருமறைக் கலாமன்றம்

கலைக்காக தமது வாழ்வை அர்ப்பணித்த குருவான அருள்தந்தை நீ.மரியசேவியர் அடிகளாரின் தலைமைத்துவத்தில் 1965 இல் தோற்றம் பெற்ற திருமறைக் கலாமன்றம் இன்று 3 ஆம் திகதி மரியசேவியர் அடிகளார் தனது 75 ஆவது அகவையை நிறைவு செய்யும் நாளில் மன்றத் தினத்தைக் கொண்டாடும் நாளில், பொன்விழா ஆண்டில் கால்பதிக்கின்றது.

கடந்த 50 ஆண்டுகளாக திருமறைக் கலாமன்றம் என்னும் கலைக்குடும்பம் பன்முகப்பட்ட கலைப்பணிகளில் தன்னை அர்ப்பணத்துடன் ஈடுபடுத்தி உள்ளது. கலைவழி இறைபணி என்ற தனது விருதுவாக்குக்கு கலைகள் ஊடாக சமூகத்தில் நல் விழுமியங்கள் பற்றிய விழிப்புணர்வை ஊட்டி சமூக மேம்பாட்டுக்காக உழைத்து வருவது என்ற பொருளைக் கொடுத்து இதுகாறும் செயற்பட்டு வந்துள்ளது. ஒருபுறம், தமிழ்க்கலைகளின் பல்வேறு வடிவங்களையும் காத்தும், பேணி வளர்த்தும், புதுமெருகூட்டியும் வந்துள்ளது. மறுபுறம் பேரவலத்தால் பாதிக்கப்பட்ட எமது சமூகத்தை ஆற்றுப்படுத்தியும், இலங்கைத் தீவில் பிளவுபட்டு நிற்கும் சமூகங்களை இணைக்கும் பாலமாக விளங்கியும், கலை உலகில் இணக்கப்பாட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் செயற்பட்டுள்ளது. இந்த மகிழ்ச்சி நிறைந்த பொன் வேளையில் இது வரை காலமும் மன்றத்தின் பணிகள் சிறந்தோங்க துணைநின்ற எல்லோருக்கும் திருமறைக் கலாமன்றம் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், எதிர்வரும் தமிழர் திருநாளான தைப்பொங்கல் நாளில் இருந்து பொன் விழா ஆண்டு நிகழ்வுகளை ஆரம்பிக்கவுள்ளது.

பொன்விழாவை சிறப்பிக்கும்முகமாக பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் சிறப்பாக பொன்விழா ஆண்டு நிகழ்வுகள் ஓகஸ்ட் மாதத்தில் மூன்று நாள்களுக்கு நடைபெறும். இவை தவிர ஈழத்து இசைக்கலைஞர்கள் பங்கேற்கும் இசைத்திருவிழா, நடனக் கலைஞர்கள் பங்கேற்கும் நடன சங்கமம், ஈழத்துப் படைப்பாளிகள் கலைஞர்கள் ஒன்றிணையும் கலை இலக்கிய ஆய்வரங்கு, தமிழ்விழா போன்றவையும் இன்னும் பல நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வுகள் சிறப்புற அனைவரது ஒத்துழைப்பையும் திருமறைக் கலாமன்றம் எதிர்பார்த்து நிற்கின்றது. இன்று புதன்கிழமை காலை 6.45 மணிக்கு குருநகர் புதுமை மாதா ஆலயத்தில் நன்றித்திருப்பலியும் முற்பகல் 10.30 மணிக்கு இரத்ததானமும் மாலை 4.30 மணிக்கு பொது வழிபாடும் திருமறைக் கலாமன்ற பணியகத்தில் இடம்பெறும். இந்நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

HONDA

குறைந்த எரிபொருள் சிக்கனத்தை கொண்டது ஹொண்ட ஸ்கூட்டர்கள் என்பதனை நிறுபித்தது.




2014 ஒக்டோபர் 26ம் மற்றும் 27ம் திகதிகளில் யாழ்ப்பாணம் மற்றும் சுன்னாகம் பகுதிகளில் இடம்பெற்ற ஹொண்டா எரிபொருள் தரப்பரிசோதனையில் 150 கும் அதிகமான வாடிக்கையாளர்கள் பங்குகொண்டனர். அதில்வெற்றி மகிழ்ச்சியில் இருக்கும் வாடிக்கையாளர்கள்

இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிப்போர்,
ஸ்டபர்ட் மோட்டார் (தனியார்) நிறுவனம்
பிரதான காரியாலயம் : 718/7, மருதானை வீதி, கொழும்பு 10, தொ: 011-7607200 மோட்டார் சைக்கிள் காட்சியறை : 161, கொழும்பு வீதி, ரத்தனபிட்டிய. தொ: 011-7607450
மட்டக்களப்பு கிளை : இல 425, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே: 065-7607200